பக்கங்கள்-16 | 27.மார்.2022 | விலை-40.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



T.P- 0774357193

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -374

## ஜெனீவா விவகாரமும் ஈழத் தமிழர் பிரச்சினையும்



## பயங்கரவாதம், காணாமல் ஆக்கப்பட்டோர், இனப்படுகொலை இலங்கையில் இடம்பெற்றுள்ளது – அம்பிகா சற்குணநாதன்

[சிறப்பு நேர்காணல்]




## உக்ரைனுக்குள் படையெடுத்துள்ள ரஷ்யாவும், பொருளாதார நெருக்கடியில் சிக்கப்போகும் உலகமும்




## இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியால் தடுமாறும் அரசும், அல்லல்படும் மக்களும்



# ஜெனீவா விவகாரமும் ஈழத்தமிழர் பிரச்சினையும்

மார்ச் மாதம் என்றதும் இலங்கை அரசுக்கு ஒரு சங்கடமாக அமைகின்றதொரு காலமாகவே இருக்கின்றது. ஆனாலும் தமிழர் விவகாரத்தைப் பொறுத்தவரையில் என்றும் தீர்க்கப்படாத நிலைமையிலேயே இந்த ஜெனீவாக் கூட்டத்தொடர்கள் நடந்தேறி வருகிறது. இன்றைய இலங்கை அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கானத் தீர்வு என்கிற விடயத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், இனப்படுகொலை இந்த நான்கு விடயங்களும் தமிழர் விவகாரத்தில் மிக பிரதானமாக அமைகின்றது.

ஜூலை 1983 காலப் பகுதியில் இருந்து இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் யுத்தத்தால் உயிரிழந்தும் படுகொலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள். அதனைவிட திட்டமிடப்பட்ட படுகொலைகளாக 244 சம்பவங்கள் பதிவாகியிருக்கிறது. ஜெனீவா விவகாரத்தைப் பொறுத்தவரையில் ஈழப்போர் உச்சக்கட்டத்தில் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது அன்று உற்றுநோக்காத, தமிழர் பிரச்சினையில் அக்கறைகொள்ளாத சர்வதேசம் இன்று தமிழர் பிரச்சினையில் அரசியல் ரீதியிலான தீர்வைக் கொடுக்கவேண்டும் என்று போலியானதொரு முகத்திரையினைக் காண்பித்து வருகின்றது. இதற்காக தமிழ்த் தரப்பு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்கிற கேள்வி மறுபுறத்தில் எழுப்பப்பட்டாலும் தமிழ்த் தரப்பு அல்லது தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில் அது இலகுவானதொன்றாக அமைந்ததல்ல. காரணம் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளே. ஒரு குடையின் கீழ்ப் போராடிய ஆயுதக்கட்சிகள், இன்று வெவ்வேறாகப் பிரிந்து, தமக்கான ஒரு அரசியல்க் கட்சிகளை உருவாக்கி, புலம்பெயர்ந்த தளத்தில் தம்மை அதி தீவிர தமிழ் முற்போக்குவாதிகள் எனக் காண்பித்து வருகின்றமை வேதனைக்குரியது. நூற்றுக்கும் மேற்பட்ட மனித உரிமை அமைப்புக்களில் ஆயிரக்கணக்கான தமிழ்த் தரப்புக்கள் பணிபுரிகின்றனர். ஜெனீவா விவகாரங்களின் போது வருவதும் போவதுமாக இவ்வமைப்புக்கள் செயற்படுகின்றனவே தவிர தீர்வுகளை நோக்கி இவைகள் செயற்படவில்லை. இதுவரை 48 ஜெனீவா அமர்வுகள் நடைபெற்று முடிந்த நிலையில் வெறுமனே அரசாங்கத்திற்கு இரண்டு வருட காலக்கெடு வழங்கியதே இதுவரை நடைபெற்ற அமர்வுகளின் முன்னேற்றம் எனலாம். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியிருந்தது என்பதும் கம்பெரலிய திட்டத்தின் ஊடாக மில்லியன்களைப் பெற்றுக்கொண்டதும், எதிர்க்கட்சிப் பதவியினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக்கொண்டதுமே இவர்களுக்குக் கூலியாக அரசினால் வழங்கப்பட்டது. ஒரு தீர்வுப்பொறிமுறையினை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது குறித்த இரு வருட கால அவகாசத்தின் ஊடாக அரசு தனக்கான சாதகமான நிலைப்பாட்டினை வகுத்துக்கொண்டது.

தமிழ்த் தரப்பு வரலாற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறுபது ஆண்டுகளின் பின் எதிர்க்கட்சி ஆசனத்தை பெற்றுக்கொண்டதே சாதனையாகப் பார்க்கப்பட்டது. அதுமட்டுமன்றி மைத்திரி-ரணில் ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தல் இடம்பெற்று பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று, அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு நல்லாட்சி நடத்துகையில், நல்லாட்சிக்குள் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் காரணமாக திடீரென பாராளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள், பிரதமராக மஹிந்த அவர்களை மீண்டும் நியமித்தார். பின்னர் நீதிமன்ற தீர்ப்பொன்றின் மூலமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாராளுமன்றத்தைக் கலைத்த வர்த்தமானி இரத்துசெய்யப்பட்டு ரணில் அவர்களே பிரதமராக தனது பதவியைத் தொடர்ந்தார். பின்னர் தொடர்ச்சியாக நல்லாட்சி இழுபறியில் தொடர, ஜனாதிபத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, கோட்டாபய அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்றார். இதற்கிடையில், ஆட்சியைக் கலைத்து மீண்டும் ஒரு தேர்தலை நடத்துவதற்கு மைத்திரி தலைமையிலான அரசாங்கம் எத்தனித்தபோது சுமந்திரன் தரப்பினர் தமது வாதாட்டத் திறமையினால் ஆளுங்கட்சி அரசாங்கத்தையே ஆட்டங்காண வைத்தார்கள். அதுவும் வரலாறு. தமிழர் விவகாரமும் ஜெனீவா விடயங்களை உற்றுநோக்குகின்ற போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.ஆர்.எல்.எப். இன்னும் பதிவுசெய்யப்பட்ட தமிழர் சார்ந்த கட்சிகள் தமிழர் விவகாரத்தில் அல்லது ஜெனீவா விடயங்களில் எதனைச் சாதித்தார்கள் அல்லது எதனைச் சாதிக்க முற்படுகின்றார்கள் என்பது இதுவரையிலும் விடை காணாத ஒன்றாகவே அமைந்துள்ளது. பூகோள அரசியலில் சர்வதேச நாடுகள் தமது அரசியலை நேர்த்தியாகவே செய்து வருகின்றார்கள். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அல்லது பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நாடுகள் அனைத்தும் இவ் சர்வதேச நாடுகளில் சதிவலைகளில் சிக்கித் திணறி வருகின்றன. தமிழினத்தை வைத்தே தமிழ்த் தலைமைகளை பிரித்தாளுகின்ற இராஜதந்திர நடவடிக்கைகளையே அரசாங்கம் 83 தொடக்கம் இன்று வரையிலும் மேற்கொண்டு வருகின்றது என்று கூறலாம். குறிப்பாக ஜெனீவா விவகாரங்கள் தொடர்பிலோ, போர்க்குற்றம் தொடர்பிலோ தகவல்களை வழங்குபவர்கள் சமூகச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆணைக்குழுக்களில் பணிபுரிந்தவர்கள், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு கொலை செய்த சம்பவங்களே பதிவாகியுள்ளது. இதுவே இன்னமும் தொடர்கின்றது. அரசு தொடர்பில் தகவல்களை வெளியிடுவோர் குடும்பம் சகிதம் காணாமல் போன சம்பவங்களே பதிவாகியிருக்கிறது. இதன் காரணமாக தமிழர் பிரச்சினைகளை ஜெனீவாவில் உரக்கப் பேசுவதற்கான சூழ்நிலைகள் மாற்றம் பெற்றிருக்கின்றன என்றே கூறவேண்டும்.

தைப் பொங்கலுக்கு தீர்வு வரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் கூறி வருகின்ற விடயங்கள் சமூக வலைதளங்களில் பேசுபொருளாக மாறியிருக்கின்றது. ஆனால் அது அவரது நம்பிக்கை. அதனையே அவர் தமிழ் மக்களுக்கு தெரிவிக்கின்றார். சூம் தொழில்நுட்பம் ஊடாக இம்முறை ஜெனீவா அமர்வுகளில் கலந்துகொள்வதற்கான பொறிமுறையினை இரா.சம்பந்தன் அவர்கள் உருவாக்கி வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. தமிழர் விவகாரத்தில் எவ்வாறான விடயங்களைக் கையாண்டால் தமிழ் மக்களுக்கான தீர்வு வரும் என்கிற பொறிமுறையினை தமிழ்த் தரப்பு கூட்டாக இணைந்து உருவாக்கிக்கொள்ளவில்லை. கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் நல்லாட்சியின் காலத்தில் கையெழுத்துவேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தக் கையெழுத்துக்கள் அப்போதைய ஜனாதிபதியிடமும் ஒப்படைக்கப்பட்டது. எனினும், தற்போதும் கையெழுத்துவேட்டைகள் இடம்பெறுகிறது. போராட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கும் நிலையிலும் நாடு தழுவிய ரீதியில் மக்கள் தமது போராட்டங்களை புரட்சிகரமாக நடத்துகின்றனர். இவ்வாறான நிலையில் இரகசியமான முறையில் போராட்டங்களை நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் அடைக்கப்படுகின்ற நிலையும் உருவாகியுள்ளது. துப்பாக்கிப் பிரயோகமும் ஆங்காங்கு இடம்பெறுகிறது. கொவிட் காரணமாக சர்வதேசமே பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில் இலங்கையைத் தவிர ஏனைய நாடுகள் பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டுவருகின்றன. ஆனால் இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயணித்துக்கொண்டிருக்கிறது.



இவ்வாறான நிலையில் அரசாங்கம் தொடர்ந்தும் ஜெனீவா விவகாரத்தில் ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் மீண்டும் எமக்கு கால அவகாசம் தேவை என்று பணித்திருக்கிறது. சர்வதேச மனித உரிமைப் பேரவை இதுவரையிலும் நல்லிணக்க செயற்பாடுகளை இலங்கையில் செயற்படுத்தத் தவறியிருக்கிறது என்றே கூறலாம். இவ்வாறான நிலையில் உள்ளகப் பொறிமுறையின் மூலமாக ஒரு தீர்வை அடைய முடியும் என அரச தரப்பு எதிர்பார்க்கிறது. உள்ளகப் பொறிமுறையில் தமிழ்த் தரப்புக்கு சாதகமான தன்மைகள் எட்டப்பட வாய்ப்பு இல்லை என தமிழ்த் தரப்பு கூறி வருகிறது.

அவ்வாறாகவிருக்கின்ற போது ஜெனீவா விவகாரமும் சர்வதேச பொறிமுறையும் இதுவரை சாத்தியப்படாத நிலையில் வெறுமனே காலங்கள் கடந்து வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் அஹிம்சை வழியிலான போராட்டங்களே தமிழ் மக்களுக்கு தீர்வாக அமையும் என்ற தொனிப்பொருளில் தமிழ்க் கட்சிகள் தற்போது களமிறங்கியிருக்கின்றன. குறிப்பாக ஜெனீவா கூட்டத்தொடர் இடம்பெறுகின்ற போது மாத்திரமல்ல, ஆர்ப்பாட்டங்கள் இலங்கையில் தமிழ் மக்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தொடர்ந்தும் போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். இப் போராட்டங்களை நடத்திவந்த பல உறவுகள் உயிரிழந்துள்ளனர். தனது மகன் இருக்கிறானா? இல்லையா? என்கிற ஏக்கத்துடன் அவர்களின் இறப்புக்கள் நிகழ்கின்றன. கால இழுத்தடிப்பு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால் தமிழ் மக்களுக்கானத் தீர்வு என்பது எட்டாக்கனியாகவே அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஒன்றிணைந்த வடகிழக்கு (தமிழர் தாயகம்), ஒற்றையாட்சியற்ற தீர்வு, மாகாண சபைகளுக்கான அதிகாரம், அதிகாரப் பரவலாக்கல் போன்ற விடயங்களை எவ்வாறு கையாள முடியும் அல்லது அரசாங்கத்திற்கு எவ்வாறான அழுத்தங்களைக் கொடுக்க முடியும் என்ற நிலைப்பாட்டினை தமிழ்த் தரப்பு அரசுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டும். 30 வருட ஆயுதப்போராட்டம் ஓய்வடைந்த நிலையில் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை அரசியல் ரீதியாக முன்கொண்டு செல்வதன் ஊடாக குறைந்தபட்ச தீர்வினையாவது தமிழ்த்தரப்பு பெற்றுக்கொள்ள முடியும். ஆயுதமேந்திப் போராடுகின்ற ஒரு சூழல் தற்போது இல்லை. ஒரு போராட்டம் இடம்பெறமாட்டாது என்று கூறுவதற்கான உத்தரவாதமும் இல்லை. ஐக்கிய நாடுகள் சபையினால் இதுவரை தமிழினத்திற்கான தீர்வை பெற்றுக்கொடுக்க முடியாது. வெறுமனே பேச்சுவார்த்தைகளை முடுக்கிவிட்டு போராட்டத்தரப்பினை மழுங்கடிக்க செய்கின்ற இராஜதந்திர நடவடிக்கையினையே சர்வதேச நாடுகள் செய்தன. வடகிழக்கு இணைந்த மாகாண சபையில் முதலமைச்சராக ஈபிஆர்எல்எப் கட்சியின் வரதராஜப்பெருமாள் அவர்கள் அப்போது செயற்பட்டார். பின்னர் சுரேஸ் அணி, வரதர் அணி என இரண்டாகப் பிளவுபட்டனர். அரசியல் குழப்பங்கள் காரணமாக திரு.வரதராஜப்பெருமாள் தமிழீழ பிரகடனம் ஒன்றை ஏற்படுத்திவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்ததாகக் கூறப்படுகின்றது. மற்றொரு விடயமாக ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு என்பது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கருத்தின்படி ஒரு நாடு இரு தேசம் என்கின்ற நிலைப்பாட்டில் தீர்வினைப் பெறுவதற்கு மக்கள் மத்தியில் அவர்கள் ஒரு தவறான பிரச்சாரத்தினை மேற்கொண்டு வருகின்றார்கள். காரணம் பிரிந்த வடகிழக்கினை இணைத்தால் அதுவே எமக்கு கிடைக்கின்ற பாரிய வெற்றியாகும். இதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெறுகிறதா என்றால் அதுவும் இல்லை. அதிகாரப் பரவலாக்கல் நடைமுறைகளில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக விகிதாசார அடிப்படையில் தொழில்வாய்ப்புக்களை அரசாங்கம் வழங்குகின்றது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழ்ப் பிரதேசங்களில் திணைக்களங்களில் அதிகமாக சிங்கள சகோதரர்களே பணிக்கு அமர்த்தப்படுகின்றார்கள். இதனை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தமிழ்த்தரப்புக்கள் உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தவேண்டும். வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை அரச அதிபராக செயற்படுகின்றவர் ஒரு சகோதர மொழியினைப் பேசுபவர். சிங்கள மொழி பேசுபவர்களுக்காகவே தனியான பிரதேச செயலகம் இருக்கின்றபோதிலும் தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட வவுனியா மாவட்டத்தில் ஒரு அரச அதிபரை இவ்வாறு நியமித்திருப்பது என்பது அதனைப் பாராமுகமாக தமிழ் அரசியல் தலைமைகள் இருப்பதும், அதிகாரப் பரவலாக்கல்களை சீரான முறையில் இவ்வரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்துக்கொள்ள முடியாது என்கின்ற நிலைமையினையே தோற்றுவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல். அனைத்து மாகாண சபைகளுடைய காலம் முடிவடைந்துள்ள நிலையில், அதனை மீண்டும் நடத்துவதற்கான சூழ்நிலை இன்னமும் உருவாக்கப்படவில்லை. அதிலும் சட்டத்திருத்தங்களைக் கொண்டுவந்ததன் பின்னர் மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்த எதிர்பார்ப்பதாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றபோதிலும் அதற்கான நடவடிக்கைகள் பாராளுமன்றில் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை அல்லது இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது. பெரும்பான்மையினத்தின் தேவைக்காக மாத்திரம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளுக்கானத் தேர்தலை நடத்தி தமது உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொண்டு அடுத்தகட்டமாக பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டு வருவதாகவே அரசின் செயற்பாடுகளின் மூலமாக அறிய முடிகின்றது. எவ்வாறிருப்பினும் இன்று மாகாண சபைத் தேர்தல் நடந்தால், அது தமிழ் மக்களுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். ஏனெனில் இன்றுவரை தமிழ்க் கட்சிகள் ஒரு குடையின் கீழ் இணைந்து செயற்பட முன்வரவில்லை. கருத்து முரண்பாடுகளாலும் உட்கட்சிப் பிரச்சினைகளாலும் ஆளாளுக்கு கட்சி ஆரம்பிப்பதை நோக்கமாகக் கொண்டு சுயநலமாக செயற்பட்டு வரும் நிலைதான் இன்னும் தொடர்கின்றது.

11ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## உலகப்போக்கும் ஜெனீவாக் கூட்டத்தொடரும்

உலகமெங்கும் கொவிட் வைரசும் அதன் திரிபுகளும் பரவி மக்களது வாழ்வை மாத்திரமல்லாமல் உலக ஒழுங்கையே மாற்றியமைத்துள்ளது. பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பொருளாதார வீழ்ச்சியில் திண்டாடி வருகின்றன. ஏற்றுமதி. இறக்குமதி மற்றும் உற்பத்திகளுக்குபாதிப்புஏற்பட்டுள்ளது. கொவிட் வைரசினால் ஏற்படக்கூடிய மரணங்களின் எண்ணிக்கையும் இன்னமும் முழுமையாக வீழ்ச்சியடையவில்லை மாறாக வேகமாகப் பரவிவருவதுடன் பல நாடுகளின் சுகாதாரக் கட்டமைப்புக்கள் கூட வீழ்ச்சியடைந்து செல்லும் நிலையில், மறுபக்கத்தில் பல நாடுகள் தடுப்பூசி நடவடிக்கைகளை துரிதகதியில் முன்னெடுத்ததன் விளைவாக ஓரளவு நாட்டை மீண்டும் இயக்கத் தொடங்கியுள்ளதுடன் இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் முடக்கநிலை என்பன தளர்த்தப்பட்டு சுமுகமாக நாடுகள் திறந்தும் விடப்பட்டுள்ளன.

இந்தநிலையில்தான் எச்சரிக்கப்பட்டுவந்தரஷ்ய - உக்ரைன் யுத்தம் திடீரென ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் உத்தரவின் பேரில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதனால் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் அச்சநிலையும். மேலும் பொருளாதார ரீதியிலான தாக்கமும் ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் ஐ.நாவின் கடும் கண்டங்களுக்கு மத்தியில் ரஷ்யா இந்தப் போரை ஆரம்பித்துள்ளதால் அப்பிராந்தியம் எங்கும் பதற்றநிலை நீடிக்கிறது. போரை முடிவுக்குக் கொண்டுவருமாறு உலகத் தலைவர்கள் பலர் ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுத்தும் வருகின்றனர்.

இந்த அசாதாரணமான உலகப்போக்குக்கு மத்தியில் தான் ஈழத்தமிழர்களின் நீண்ட எதிர்பார்ப்பாகிய ஜெனீவாக் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஆரம்பமாகவிருக்கிறது. ஆனால் கூட்டத் தொடர்கள் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்களின் சர்வதேச ரீதியிலான கோரிக்கைகள் அனைத்தும் கிடப்பில் போடப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேசத்தின் பிரதிநிதிகள் அழுத்தம் கொடுக்கின்றனர் எனக் கூறப்படுகின்றபோதிலும். அவர்களால் கனதியான அறிக்கைகள் வெளியிடப்படுகின்ற போதிலும். உள்நாடான இலங்கையில் தமிழ் மக்களின் விடயத்தில் யுத்தம் மௌனித்த பின்னரானஇந்தபத்துவருடங்களுக்குமேற்பட்ட காலத்தில் எதுவுமே மாற்றம் பெறவில்லை. மாறாக வடகிழக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிபோய்க்கொண்டிருக்கிறது. பௌத்த மத அடையாளங்கள் புதிதுபுதிதாக அமைக்கப்படுகின்றது. தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் என்கிற போர்வையில் வடகிழக்கில் தமிழினம் கடும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது. எனினும் அரசு கூறும் உள்ளகப்பொறிமுறையினை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சர்வதேச நீதிமன்றமே தமிழ் மக்களுக்கானத் தீர்வினை வழங்கும் எனக் கோரி வருகின்றனர். ஆதலால் ஜெனீவாவின் பாதுகாப்புச் சபையினையும் கடந்து. சர்வதேச நீதிமன்றத்தின் முன்னாள் தமிழினத்தின் பிரச்சினைகள் முன்வைக்கப்படவேண்டும் என்கிற நிலைதான் தற்போது இருக்கிறது.

இந்த நிலையில் சர்வதேச ரீதியாக குற்றஞ்சாட்டுக்கு முகங்கொடுத்துள்ள. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஆட்சியிலிருந்த தரப்பினர் இன்று அதிகாரத்தில் வீற்றிருக்க. சர்வதேச நாடுகள் பல இன்றைய இலங்கை அரசாங்கத்திற்கு பக்கபலமாகவிருந்து உதவிகளைச் செய்துகொண்டிருக்க. மாறியிருக்கும் பூகோள அரசியலுக்கு மத்தியில். உலக நாடுகளையே திருப்பிப்போட்டிருக்கும் ரஷ்ய - உக்ரைன் போருக்கு மத்தியில். பல நாடுகளில் சரிந்துபோயிருக்கும் பொருளாதாரமும். விலையேற்றத்தால் மக்கள் கதிகலங்கியிருக்கும் நிலையில், இம்முறை ஜெனீவா அமர்வில் தமிழ் மக்கள் தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்றாலும். தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கும் விடயங்களுக்கானத் தீர்வுகள் இம்முறை ஜெனீவா அமர்வின் மூலமாக கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் அல்லது சாதகமானத் தன்மைகள் ஏற்படுமா என்பதெல்லாம் வழமைபோல கேள்விக்குறிதான்.

179

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



வேவுக்காரர்கள் கெரில்லாக்களின் இரகசியநிலைகளுக்குக்கிட்ட நெருங்கி, ஒலியெழுப்பாத சுடுகலன்களால் கெரில்லாத் தலைவர்களை அழித்துள்ள சம்பவங்களைக் கணக்கெடுக்க முடியாமலுள்ளது. கெரில்லாக்களின் பண்டகசாலைகள் மீதும் விநியோக முகாம்கள் மீதும் சிறப்பு அணிகள் திடீர்த்தாக்குதல்களைத் தொடுத்துள்ளன. பாரிய கெரில்லாக் கட்டளையகங்கள் மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்ட சம்பவங்களும் அங்கிருந்து வெற்றிகரமாக ஆவணங்கள் கைப்பற்றப்பட்ட சம்பவங்களும் (சிறிய படைப்பிரிவுகள் இரகசியத்திற்காக ஆவணப்படுத்தல்களை மேற் கொள்வதில்லை) இருக்கின்றன. ஆனால் பிரதான நோக்கமாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதே இருந்தபோதும், சிறப்பணிகள் முழு முயற்சியையும் பயன்படுத்தி உயிருடன் ஆட்களைப் பிடிக்கும் விடயத்திலும் ஈடுபட்டனர்.

கூடுதலாக இந்நடவடிக்கை குறைந்தளவு எண்ணிக்கையில் வேவு மற்றும் நாசகாரவேலைக்காகக் கெரில்லாக்குழு செல்லுகையில் அல்லது பொருட்களைப் பெற்றுக்கொள்ளச் செல்லுகையில் மேற்கொள்ளப்பட்டது. உருமறைப்பு வலையால் மேற்கொள்ளப்பட்ட உருமறைப்பு கிட்டத்தட்ட எகேர்களை வெளிக்காட்டாததாக இருந்தது. எவ்விதக் குறைகளுமில்லாமல் பதுங்கித் தாக்குதல்கள் அமைந்தன. தேவையற்றவர்களை அழித்தல், சகல சாத்தியமான மற்றும் சாத்தியமற்ற சூழ்நிலைகளில்கைப்பற்றல்நடவடிக்கை ஆகியன ,சைவாக்கத்திற்கு வரும்வரை பயிற்சி செய்யப்பட்டன. கடைசியாகச் செல்பவனைக் கைதியாகப் பிடித்தனர். இவ்வாறானவர்கள் வேகமாகப் பதிலளிக்கத் தொடங்கிவிடுவார்கள். அத்துடன், முன்னுக்குச் செல்கின்ற பிரதான அணியிலிருந்து ,வர்களை இலகுவாகவும் களைந்துவிடலாம். முன்னுக்குச் செல்பவர்கள் சத்தமற்ற ஆயுதங்களால் சுடப்பட்டனர் அல்லது கத்தியால் குத்தப்பட்டனர். இவை யாவும் ஒரு கணப்பொழுதில் சந்தடியில்லாமல் மேற்கொள்ளப்பட்டன.

பயிற்சிகளின்போது, கணப்பொழுதில் வேகமாக மேற்கொள்கின்ற கைப்பற்றல் நுட்பமாகக் கற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், எங்களது காலப்பகுதியில் வாகனத்திலிருந்து கைப்பற்றலை மேற்கொள்வதே பழகப்படுகின்றது. ஏனெனில், இப்பொழுது காட்டுக்குள்ளால் கால்நடையாகச் செல்பவர்கள் மிக அரிதே. கைப்பற்றலின்போது எந்தவிதமான தடயங்களையும் விட்டுவைக்கக்கூடாது. கைப்பற்றிய உளறுவாயனையும் இறந்த உடலங்களையும் வேகமாகத் (ஓட்டமாகத்) தொலைவிற்குக் கொண்டு சென்று விட வேண்டும். கொல்லப்பட்டவர்களைக் குழி தோண்டிப் புதைத்து, அவ்விடத்தை உருமறைப்புச் செய்தனர். கைதியை அவ்விடத்திலேயே விசாரணை செய்தனர். அவன் பய அழுத்தத்திலிருந்து விடுபடும்வரை அவனை உலுப்பினர். எவ்வாறு இதனை மேற்கொள்வதென்பதைச் சிறப்பு அணியில் அங்கம் வகிக்கின்ற நடவடிக்கையாளன் தெரிந்திருந்தான். கெரில்லா எதிர்ப்புச் சமரிலும் தடைசெய்யப்பட்ட உத்திகளென எவையும் இல்லை. வழக்கமாகக் கைது செய்யப்பட்ட குடியானவன் பதிலளிக்கத் தொடங்கிவிடுவான். தன்னை அவ்விடத்திலேயே அவர்கள் கொல்லாதவாறு காத்துக்கொள்ள வேண்டுமென்பதைக் குடியானவன் நன்கு தெரிந்திருந்தான். விடுப்பில் சென்று வீட்டில் இரண்டு நாட்கள் தங்கக் கட்டளையாளனிடம் கேட்டிருந்தவர்களுடன் உரையாடுவது மிக இலகுவாக இருந்தது. அல்லது கிராமத்திற்குத்திருமணம்,மதநிகழ்வுகள் போன்றவாறான சம்பவங்களுக்குச் செல்பவர்களுடனுமாகும்.

ஏனெனில், குடியானவர்களைப் பொறுத்தவரையில் இவை மிக முக்கிய நிகழ்வுகளாகும். இவற்றைத் தவற விட மாட்டார்கள். இவ்வாறானவர்களைக் காட்டெல்லைவரை பின்தொடர்ந்து சென்று, தமது சொந்த வீட்டில் வைத்து விசாரிப்பதைப் போன்று விசாரணை செய்தார்கள். கிட்டத்தட்ட எப்பொழுதும் கைதானவர்கள் உடனேயே விரிவாகப் பதிலளிக்கத் தொடங்கினர். அவர்கள் திரும்பவேண்டிய காலத்தில் சரியாக முகாமுக்குத் திரும்பினார்கள். ஆனால், சிறப்புப் பிரிவுக்குத் தகவலளிப்பவர்களாக மாறியிருந்தார்கள்.

பெருமளவானவர்கள் மௌனம் சாதிப்பவர்களாக ,ருந்தனர். அவர்கள் நகருக்கு அனுப்பப்பட்டனர். கெஸ்ராப்போவின் (ஜேர்மனிய இரகசிய காவற்படை) தகவலின்படி, சிறைச்சுவர்களின் பின்னால் மூன்றிலொருவராவது பதிலளித்தனர். ஆனால், ரசிய அரச பாதுகாப்புச் சபையில் (தரவுகள் இல்லையாயினும்) சகல கைதிகளும் பதிலளித்தனர்.

இடையிடையே உளறுவாயன்கள் கெரில்லா முகாம்களுக்கருகிலும் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இதற்கு மிகவும் வசதியான இடமாகக் கழிவு கிடங்கு அமைந்துள்ள இடமும் கழிப்பிடமுமே விளங்கின. சகல நாட்டு இராணுவத்தாலும் கற்றுக் கொள்ளப்படுகின்ற வழிநடத்தல்களில் குறிப்பிடப்படுகின்ற எச்சரிக்கைகளாக இவை இருந்தபோதும், இந்தத் தவறு சகல இராணுவ முகாம்களிலும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது மேலே குறிப்பிட்ட அக்கறையற்ற, குறைந்தளவில் ஆட்கள் சென்றுவருகின்ற இடங்களைத் தேவை வரும்வரை மறந்துவிடுகின்றனர். இயற்கைத் தேவையை நிறைவேற்றச் சென்ற எத்தனை படைவீரர்கள் (ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவத்திற்கு நடந்தவற்றையும் இதனுள் குறிப்பிடலாம்) கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர் என்பது எண்ணி மாளாது.

இவ்வாறான முறையிலேயே காவல் வீரர்களுடனும்சகலகாலப்பகுதிகளிலும் நடந்துகொண்டனர். காவலில் ஆள் இருந்தான். தனது சகபாடியுடன் மர்மமாக மறைந்துவிடுவான். எந்தவித தடங்களும் இருக்காது. நகரிலிருந்து கலங்கரை விளக்கத்திற்கு வருகின்றவர்களைச் சந்திக்கின்ற ஆட்களை வேவுக்கார அணியினர் எதுவிதத் தடயமும் சந்தடியுமின்றி ஒழித்துக்கட்டினர். நகரவாசியை எதுவித சேதாரமுமின்றி உயிருடன் கைதியாகப் பிடித்தனர். இந்த ஆட்கள் பலவற்றைத் தெரிந்தவர்களாக இருந்தனர். உளறுவாயன்களைக் கைதியாகப் பிடிப்பது அவசியம் உடல் ரீதியான தாக்குதல் முறைமூலம் மேற்கொள்ளப்படவில்லை. சகல வகையைச் சேர்ந்த பொறிகளே (கயிற்றுச் சுருக்கு, விலங்குப் பொறி, பொறிக்குழி, இதர தந்திரப் பொறிகள்) வைக்கப்பட்டிருந்தன.

காலங்கடந்து செல்லச்செல்ல எகேர்கள் பாரிய கெரில்லாத் தொடரணிகள் மீது தாக்குதல் தொடுக்க வேண்டியவர்களாக இருந்தனர். இந்நடவடிக்கையின் நோக்கம் கெரில்லாக்களைத் தோற்கடிப்பதாக இருக்கவில்லை. மாறாக எந்நடவடிக்கைக்காகக் கெரில்லாத் தொடரணி செல்கின்றதோ அந் நடவடிக்கையை மேற்கொள்ளவிடாது தடுப்பதே ஆகும். இதற்காகப் பதுங்கித் தாக்குதல், நுட்பமாகத் தயார்செய்யப்பட்டது. இதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட இடம், தொடரணி பிரதேசத் தரையமைப்பால் (பள்ளத்தாக்கு, மேட்டுநிலம் போன்றவாறானவை) சுற்றிவளைக்கப்பட்டதாக இருந்தது. அல்லது ஒருபுறத்தில் தடையமைப்புக் கொண்டதும் வேகமாகக் கலைந்து செல்லமுடியாததும் நகர்வு வியூகத்திற்குச் செல்ல முடியாததுமான இடம் தெரிவுசெய்யப்பட்டது. தொடரணி நகர்ந்து செல்கின்ற பாதையின் கரை நெடுகிலும் கண்ணிகள் வைக்கப்பட்டிருந்தன அல்லது குண்டுகள் பாதுகாப்பு ஊசி கழற்றப்பட்டு பொறியமைப்பில் வைக்கப்பட்டிருந்தன. சூடுகளிலிருந்து காப்பெடுக்கக்கூடிய மிகச்சிறிய இடங்களுக்கும் கண்ணிகள் வைக்கப்பட்டன. இன்றைய காலத்தில் இதற்காகக் கட்டுப்பாட்டுக் கண்ணிகளும் திசைப்படுத்தப்பட்ட கண்ணிகளும் பயன்படுத்தப்படுகின்றன. எகேர்களின் நிலைகளுக்கு முன்னுள்ள இடங்களில் அவசியம் கண்ணிகள் வைக்கப்பட்டன.

தொடரணி நகர்ந்துகொண்டிருக்கின்ற திசைக்கு வலது பக்கத்தில் பதுங்கித் தாக்குதல் அணி நிலையெடுக்க முயற்சித்தது. இதன்போது, பதுங்கித் தாக்குதலில் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் தமது வலது தோள்மூட்டில் சுடுகலனைப் பொருத்தி மற்றையவருக்குத் தொந்தரவு தராமல் சுடுவதுடன், ஒவ்வொருவரும் கூடியளவில் தமது காப்புக்குள் மறைக்கப்பட்ட நிலையிலும் இருப்பார்கள் (இப்பொழுது எதிர்த்திசையில் நிற்கின்ற எதிரியின் நிலையில் உங்களைக் கற்பனை செய்து பாருங்கள், வலது பக்கமாகத் திரும்பி வலது பக்கத் தோள்மூட்டில் சுடுகலனைப் பொருத்திச் சுடுவது எவ்வளவு சிரமமாக இருக்கும்.

தொடர்வான்....

# பயங்கரவாத தடைச்சட்டம்,கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர், இனப்படுகொலை தொடர்பில் அம்பிகா சற்குணநாதன் அதிர்ச்சித் தகவல்



**முன்னாள் மனித உரிமை ஆணையாளர், மனித உரிமை செயற்பாட்டாளர், சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன்**

**இன்றைய சமகால அரசியல் பார்வையில் பல முக்கியமான பிரச்சனைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் ஒன்று பயங்கரவாத தடைச்சட்டம், கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம், இன அழிப்பு தொடர்பான விவகாரங்களும் தற்பொழுது பேசுபொருளாக காணப்படுகின்றது. அதோடு மதவாத அரசியலும் தற்பொழுது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.**

**இந்த அடிப்படையிலே நீங்கள் நீண்ட காலமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் என்ற வகையிலே பல்வேறுபட்ட அனுபவங்கள் உங்களுக்கு இருக்கின்றது. பல்வேறுபட்ட பிரச்சனைகளை நீங்கள் வெளிக்கொண்டு வந்திருக்கின்றீர்கள். ஆனால் ஒரு சில காரணங்களுக்காக அது திரை மறைவில் இருப்பதாகவும் அல்லது அக்காலகட்டத்தில் நீங்கள் குரல் கொடுக்காது இருந்துவிட்டு தற்பொழுது ஏன் குரல் கொடுக்கின்றீர்கள் என்ற பிரச்சனையும் தற்பொழுதுஎழுப்பப்பட்டிருக்கின்றநிலையிலும் உங்கள் மீது பல்வேறு அழுத்தங்களும் இதன் காரணமாக ஏற்பட்டிருக்கின்றது.**

**அந்தவகையில் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாகவும் அதிலிருந்து அவர்கள் எவ்வாறு விடுதலை செய்யப்படலாம் அவர்கள் ஏன் விடுதலை செய்யப்படாமல் இருக்கின்றார்கள் என்பது பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

பதில் : பயங்கரவாத தடைச்சட்டம் பற்றி இதுவரையில் நான் பார்த்ததில் நேற்று இன்று தொடங்கிய விடயம் என்று இல்லை நான் 10. 15 வருடங்களாக வித்தியாசமான விதங்களில் வேலை செய்திருக்கின்றேன். ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகள் அவரின் அலுவலகத்திற்கு சட்ட ஆலோசகராக நான் நியமிக்கப்பட்டிருக்கின்றேன். எனவே அந்த நேரத்தில் பயங்கரவாத தடைச்சட்த்தின் கீழ் நடைபெற்ற உரிமை மீறல்கள் அவற்றை ஆவணப்படுத்தி ஆணையாளர் அலுவலகத்திற்கு அது பற்றிய ஆலோசணைகள் வழங்கி பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் செய்து அவ்வாறு பல விதங்களில் சம்மந்தப்பட்டிருக்கின்றேன். எனவே நான் பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பற்றி கதைக்கின்ற பொழுது 10.15 வருடங்களில் நான் பார்த்ததை ஒப்பிட்டு தான் கதைப்பேன்.

ஆகவே எனக்கு என்ன தெரிகின்றது என்றால் 2005. 2006 என்று பார்த்தால் தற்பொழுது 2022 இவ்வளவு காலத்தையும் நாங்கள் ஒப்பிட்டு பார்க்கின்ற பொழுது கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நடக்கின்ற உரிமை மீறல்களில் அவ்வளவு மாற்றங்கள் இருந்ததாக எனக்கு தெரியவில்லை. ஏனென்றால் நாங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நான் முன்னர் ஐ.நாவில் வேலை செய்கின்ற பொழுது 4. 5 ஐ.நா தொல்லியர்களே கடத்தப்பட்டு 2 தேர்வு அன்று காணாமல் போய் 12 நாட்களுக்கு அவர்கள் சித்திரவதைபடுத்தப்பட்டு நாங்கள் அவர்களை பொரளை பொலிஸ் நிலையத்தில் கண்டுபிடித்து அதன் பின்னர் அவர்களுக்கு எதிராக குற்றக் பத்திரிகை தாக்குதல் செய்து இரண்டு பேரும் எத்தனையோ வருடங்களுக்கு பின்னர் நிரபராதி என காணப்பட்டவர்கள். அதனை மறந்துவிட்டார்கள். அவ்வாறான மீறல்களே அந்த நேரங்களில் நடந்தது. அந்த காலகட்டத்தில் நான் தான் ஐ.நாவிற்குள் இதற்கு எவ்வாறு ரெஸ்போன்ஸ் அழிப்பது என அதனை கோடினேட் செய்தேன். அவர்களுக்கும் வழங்கி எல்லாம் செய்தேன்.

அதன் பின்னர் 2015க்கு பின்னர் கூட மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நான் ஆணையாளராக செயற்படுகின்ற பொழுதும் கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவ்வாறான மீறல்கள் ஏற்பட்டன. இதைக் கூட ஆணைக்குழு ஆவணப்படுத்தியிருக்கின்றது. எல்லாம் வெளிப்படையாக ஆவணப்படுத்தப்பட்டுத் தான் இருக்கின்றது. தெரியாது கதைக்கவில்லை என்று சொல்பவர்கள் உண்மையாக பார்க்காமல் இருந்துவிட்டீர்கள் என்று தான் சொல்ல முடியும். ஏனென்றால் நாங்கள் ஐ.நாவின் சித்திரவதைக்கு எதிரான குழுவிற்கு இலங்கையின் வரலாற்றிலே முதன்முறையாக மனித உரிமை ஆணைக்குழு 2016 ஆம் ஆண்டு சித்திரவதையைப் பற்றி வெளியிட்ட 18 பக்க அறிக்கை தற்பொழுதும் கூட அந்த ஆணைக்குழுவின் இணையகளத்தில் இருக்கின்றது. அந்த அறிக்கையில் சொல்லப்படுவது என்னவென்றால் சித்திரவதை என்பது எங்களது நாட்டின் குற்றவியல் பொறிமுறையில் பொலிஸ் எல்லாம் ஆழமாக ஊடுருவியிருக்கின்ற விடயம். அது முக்கியமாக இலங்கையின் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றவர்களை சித்திரவதைக்குட்படுகின்றார்கள் என்றும் அதன் பின்னர் நாங்கள் சிறைச்சாலைகள் பற்றிய ஒரு ஆய்வில் ஈடுபட்டோம் அதிலும் 863 பக்க ஆய்வின் அறிக்கை இணையதளத்தில் உள்ளது. அதுவரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் என்ன விதமான மீறல்களை அனுபவித்திருக்கின்றார்கள் என்று நாங்கள் ஆவணப்படுத்தி வெளியிட்டோம். அதைப்பார்க்கின்ற பொழுது என்னைப் பொறுத்தவரையில் அரசாங்கம் சட்டம். சர்வதேச மனித உரிமைகள் விதிகளுக்கு ஏற்ப அமையவில்லை. இரண்டாவது விடயம் இருக்கின்ற சட்டத்தை எத்தனையோ விதத்தில் துஷ்பிரயோகம் செய்கின்றார்கள்.

எனவே எந்த அரசாங்கம் இருக்கின்ற பொழுதும் இதற்கு கீழ் நடக்கும் மீறல்கள் முற்றாக இல்லாமல் போகவில்லை. சில நேரங்களில் குறைந்தும் சில நேரங்களில் அதிகளவு கூடியும் இருக்கின்றன. 2019 வரையில் கூடியளவு குறைந்திருந்தது. எனவே சட்டத்தில் இருக்கின்ற குறைபாடுகள் பல அது எந்த அரசாங்கம் வந்தாலென்ன அதில் மீறல்கள் ஏற்பட்டுக்கொண்டு தான் இருக்கின்றன. அதற்கு ஒரு காரணம் எங்களது குற்றவியல் பொறிமுறையில் பொலிஸ் அவர்கள் செயற்படுகின்ற விதம். பயங்கரவாத தடைச்சட்டத்தை பற்றி மட்டுமல்ல நாங்கள் சும்மா குற்றவியலின் கோர்வையாக உள்ள குற்றங்களுக்காக இவர்கள் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கின்றார்கள் என்று நாங்கள் பார்த்தால் கூட அதிலும் இவர்கள் எப்படி கைது செய்யப்படுகின்றார்கள் என்ற அடிப்படை விதிமுறைகளை ஒவ்வொரு நாளும் மீறுகின்றார்கள். அதாவது சித்திரவதை எங்களது பொறிமுறையில் வேறா ன்றி இருக்கின்றது. ஆகவே இப்பொழுது அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு மாற்றங்களை கொண்டுவரப்போகின்றோம் என்று முன்வைத்தது 27 ஆம் திகதி. ஆனால் நாங்கள் அதை பார்க்கின்ற பொழுது அந்த சட்டத்திலுள்ள முக்கியமான குறைபாடுகள் ஒன்றுமே நிவர்த்தி செய்யப்படவில்லை. எனவே அவர்கள் முன்வைத்த திருத்தங்கள் ஒரு கண்துடைப்பு மாதிரி தான் இருக்கின்றது. ஏனென்றால் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார சலுகைகளை பெற்றுக்கொள்வதற்காக செய்த ஒரு கண்துடைப்பு போல தான் இருக்கின்றது.

**கேள்வி : இதிலே குறைபாடுகள் இருப்பதாக கூறித்தான் தற்பொழுது வடக்கு கிழக்கு ஏனைய பகுதிகளிலும் கையெழுத்து வேட்டைகள் இடம்பெறுகின்றது. இது எந்தளவில் சாத்தியமாகும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?**

பதில் : எந்த அளவில் சாத்தியமாகும் என்றால் கஷ்டமான விடயம். எங்களுக்கு அரசாங்கம் கூறுவதை வைத்து அவர்களின் செயல்களை வைத்து பார்க்கின்ற பொழுது உண்மையாகவே இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை மாற்றுவதற்கு அவர்களுக்கு விருப்பமில்லை. அது மட்டுமல்ல இந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் அழுத்தங்கள் இருக்கின்றது. ஐநாவின் அழுத்தங்கள் இருக்கின்றது. ஆனால் அந்த வேளையில் கூட அவர்கள் தேவையான திருத்தங்களை அவர்கள் செய்ய மாட்டார்கள் போல் தான் தெரிகின்றது. ஆகவே தான் நாங்கள் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தெற்கில் கூட இதற்கு எதிராக மக்கள் குரல் கொடுக்க வேண்டும் ஏனென்றால் தற்பொழுது பார்த்தால் இது முதல் தமிழர்களுக்கு அதற்கு எதிராகத் தான் சதாப்த காலமாக பாவிக்கப்பட்டனர். அதன் பின்னர் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு பின்னர் இது முஸ்லிம்களுக்கு எதிராக பாவிக்கப்படுகின்றது. ஆனால் தற்பொழுது பார்த்தால் அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் ஊடகவியலாளர்கள் என்று இந்த சட்டம் பாவிக்கப்படக்கூடும் அல்லது பாவிப்போம் என ஒரு அச்சத்தை கிளப்பித் தான் எல்லோரையும் வைத்திருக்கின்றார்கள். ஒருவரின் 75 வயது தகப்பனார் நீங்கள் பார்த்திருப்பீர்கள் இரண்டு மூன்று கிழமைக்கு முன்னர் அவர் கைது செய்யப்பட்டு குடும்ப உறுப்பினர்களை சந்திக்க முடியவில்லை. சட்டத்தரணியை சந்திக்க முடியவில்லை. அவருக்கு எத்தனையோ சுகயீனங்கள் இருக்கின்றன. அதற்கு தேவையான மருத்துவ உதவி கிடைக்கவில்லை. இது இவருக்கு மட்டுமல்ல சதாப்த காலமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் அனுபவித்த உரிமை மீறல்கள்.

**கேள்வி : இதிலே யுத்தம் நிறைவடைந்து 12 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஆரம்ப கட்டத்திலே ஜே.வி.பி க்கு எதிராகவும் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் பாயப்பட்ட நிலையில் அதற்கு பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் 45 நாடுகளிலே அவர்கள் பயங்கரவாதிகள் என முக்திரை குத்தப்பட்டது. அதன் பின்னர் தொடர்ந்தும் இலங்கையில் குறிப்பாக லக்ஸ்மன் கதிர்காமன் இருக்கின்ற காலப்பகுதிகளிலே அமெரிக்காவினாலும் ஒரு பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டு தொடர்ந்தும் தற்பொழுது இந்த பயங்கரவாத தடைச்சட்டம் நீடித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் யுத்தம் முடிந்து நீங்கள் கூறுவதைப்போன்று சகாப்தங்கள் நிறைவடைந்து இருக்கின்ற நிலையிலே என்ன காரணத்திற்காக தொடர்ந்தும் அவர்கள் தமிழினத்தின் மீது இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை விதித்திருக்கின்றார்கள் மற்றும் இதனை நீங்குவதால் அவர்கள் ஏன் ஐயப்படுகின்றார்கள்?**

பதில் : பல காரணங்கள் இருக்கின்றன. ஒன்று உலகளாவிய ரீதியில் பார்த்தால் பயங்கரவாத தடைச்சட்டம் என்பது எத்தனையோ நாடுகள் இந்த சட்டத்தை தங்கள் நாடுகளிலும் பாஸ் பண்ணியிருக்கின்றார்கள். அதற்கான காரணம் ஒன்று அரசாங்கம் எந்தளவு தனது கையில் அதிகாரத்தை வைத்திருக்க முடியுமோ வைத்துக்கொள்ள விரும்புகின்றது அதுவும் இதை பாவித்து வேறு நாடுகளிலும் இந்த மாதிரியான மனித உரிமை விதிகளுக்கு அமையாமல் இருக்கும் எத்தனையோ பயங்கரவாத தடைச்சட்டங்கள் இருக்கின்றன. அங்கிருக்கும் சட்டம் அங்கிருக்கும் முஸ்லிம்களுக்கு எதிராக பாவிக்கப்படுகின்றது. பாராபட்சத்திற்கு உட்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு எதிராகவே பல நாடுகளில் பாவிக்கப்படுகின்றது. ஆகவே இது இலங்கையில் மட்டுமல்ல இதுவொரு உலகளாவிய ரீதியில் உள்ள ஒரு பிரச்சனை. இரண்டாவது விடயம் ஐக்கிய நாடுகள் அமையத்தை பார்த்தோமானால் அதில் பாதுகாப்பு சபையிலிருந்து தான் இந்த பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச பரிந்துரைகள் எல்லாம் வருகின்றது. உலகளாவிய ரீதியில் இந்த பயங்வரவாதத்திற்கு எதிரான அந்த ஒரு பொறிமுறை அவர்கள் உலக நாடுகள் எல்லாமே எளிதாக ஒரு ஒப்பந்தத்திற்கு வந்த மாதிரி எவ்வளவு மனித உரிமைகளை கட்டுப்படுத்த முடியுமோ அந்தளவுக்கு கட்டுப்படுத்துவதாகத் தான் அவர்கள் ஐநாவின் உரிமைகளைக் கூட இந்த நாடுகள் எத்தணிக்கின்றன. இலங்கை மாதிரியாக அரசாங்கங்களும் அந்த உலகளாவிய ரீதியில் சர்வதேச பாதுகாப்புச் சபையில் அதிலிருந்து வெளிவருகின்ற பரிந்துரைகள் அனைத்தையும் அவர்கள் ஆயுதமாக பாவிக்கின்றார்கள். இவை அனைத்திற்கும் அமையத்தான் நாங்கள் உள்நாட்டில் இந்த மாதிரியான சட்டங்களை எல்லாம் இயற்றுகின்றோம் என்று கூறுவதற்காக தான் நான் கூறினேன். உலகளாவிய ரீதியில் எந்த அரசாங்கங்களும் இதை சம்மதித்து தான் செய்கின்றார்கள். ஒருவருக்கு ஒருவர் வெளிப்படையாக தெரியாமல் அவர்கள் ஆதரிக்கின்றனர்.

மூன்றாவது இலங்கையை பொறுத்தவரையில் சிங்கள இனவாதம் என்பது வேறான்றி இருக்கின்றது. தற்பொழுது இருக்கின்ற அரசாங்கம் தான் வெளிப்படையாக அதுவும் ஜனாதிபதி அவரின் கொள்கைகளை பார்த்தால், அரசாங்கத்தின் கொள்கைகளை பார்த்தால் ஒரு தூண் சிங்கள இனமாகவும் மற்றைய தூ ண் இராணுவ மயமாக்கலாக இருக்கின்றது. இதற்கு ஆதாரங்கள் பல இருக்கின்றன. நாங்கள் எத்தனையோ உதாரணங்களை ஒவ்வொரு நாளும் பட்டியலிட்டுக்கொண்டு தான் இருக்கின்றோம். எனவே இதுவும் சிறுபான்மை அல்லது வேற்று சமூகங்கள் முஸ்லிம்கள் தமிழ் சமூகம் என அவர்களை சமமான பிரஜையாக பார்க்காமல் வேற்றுமை மாதிரியாக தான் பார்ப்பதால் இனவாதம் என்பது எத்தனையோ அரசாங்கத்தின் கொள்கைகள் சட்டங்களுக்கு எல்லாம் அதுவொரு டிரைவிங் போர்ஸாக இருக்கின்றது. அதனடிப்படையில் தான் நாங்கள் பார்க்க வேண்டும். இது ஜே.வி.பிக்கு எதிராகவும் பாவிக்கப்பட்டது இரண்டு வருடங்களில். ஆனால் இந்த சட்டம் இயற்றப்பட்ட காலங்களில் இருந்து எத்தனையோ தசாப்த காலங்களாக தமிழர்களுக்கு எதிராகத்தான் பாவிக்கப்பட்டது.

**தொடரும்...**
**நெற்றிபொறியன்**

# உக்ரைனுக்குள் படையெடுத்துள்ள ரஷ்யாவும்,பொருளாதார நெருக்கடியில் சிக்கப்போகும் உலகமும்




உலகம் முழுவதும் கடந்த 03 வருடங்களுக்கு மேலாக கொரோனா என்னும் கொடிய வைரஸ் தாக்கத்தால் பல லட்சம் பேர் காவு கொள்ளப்பட்டு பல கோடிக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இன்னும் இவ் வைரஸ் பரவல் முழுமையாகக் கட்டுப்படுத்தபடாமல், உலக வல்லரசுகள் முதற்கொண்டு மிகச் சிறிய நாடுகள் வரை இவ் வைரஸ் தாக்கத்தின் எதிரொலியாக மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி சின்னாபின்னமாகி போய் இருக்கும் நிலையில் இவ் வைரஸ் தாக்கம் இன்னும் முடிவடையவில்லை. அதன் பிறழ்வுகள் மாறி மாறி உலக நாடுகளான அச்சுறுத்தி வருகின்றன. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் உலகின் மிகப்பெரும் வல்லரசான ரஷ்யா உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து சகல நாடுகளை மட்டுமின்றி உலக மக்களையும் அச்சத்தில் தள்ளியுள்ளது.

முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களின் போது ஜேர்மனி என்னும் சர்வாதிகார நாட்டின் படையெடுப்புக்களையும் நாடுகளை பிடிக்கும் கொடூர சிந்தனை கொண்ட ஹிட்லரின் நாசிப்படைகளை அப்போதைய சோவியத் ரஷ்யா வெற்றிகரமாக முறியடித்து ஹிட்லரின் உலகம் முழுவதுக்குமான தலைவர் என்ற ஆசைக்கனவையும் அனைத்து நாடுகளும் ஜேர்மனிக்கு கீழ் என்ற சிந்தனையையும் குழிதோண்டி புதைக்கக் காரணமாக இருந்தது இந்த சோவியத் ரஷ்யா. முதலாம் இரண்டாம் உலக மகா யுத்தங்களின் அழிவுகளில் இருந்து மிக வேகமாக முன்னேறிய சோவியத் ரஷ்யா உலகின் மிகப்பெரும் வல்லரசாக உருவெடுத்தது. உலக மகா யுத்தங்களின் அழிவுகளில் இருந்து பொருளாதார நெருக்கடியில் இருந்து சோவியத் ரஷ்யாவை மீட்டெடுத்த அந்த பெருமை முதலாளித்துவ கொள்கையை விடுத்து சோசலிச சமத்துவக் கொள்கையுடன் கம்யூனிஸ்ட் கொள்கையையும் கொண்ட இரு பெரும் தலைவர்கள் அந்நாட்டை உலக தர வல்லரசாக உயத்தினர்.

சோவியத் ரஷ்யாவின் தந்தையெனப் போற்றப்படும் லெனின் அதனைத் தொடர்ந்து வந்த ஸ்டாலின் போன்ற தலைவர்கள் சோவியத் ரஷ்யாவை இவ்வாறு உயர்த்தினர். அக்கால கட்டங்களில் மிகப் பொருளாதார நெருக்கடியில் சகல நாடுகளும் சிக்கிய போதிலும் அசராமல் விவசாயம், கைத்தொழில் என இரு துறைகளையும் மக்களைக் கொண்டு வளப்படுத்தி இன்று மிகப்பெரும் கைத்தொழிற்சாலைகள் உள்ள நாடுகள் வரிசையில் சோவியத் ரஷ்யாவை உயர்த்தியது மட்டுமன்றி நவீன ஆயுத தளபாடங்கள், டாங்கிகள், அணு உலைகள், உலகில் அதிகளவான உலங்கு வானூர்திகளை தயாரிக்கும் முதல் நாடாக சோவியத் ரஷ்யா விளங்கியது. இவ்வாறான ஓர் சூழ்நிலையில் 1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியமாக இருந்த அந்த நாடு பல துண்டங்களாக பிரிந்து சென்றது. இல்லை பிரிக்கப்பட்டது. இதற்கு பின்னால் அமெரிக்காவின் சதிச் செயல் உள்ளது. இவ்வாறு பிளவுண்ட நாடுகளில் உக்ரைன் 1991 ஆம் ஆண்டு தனி நாடாக பிரகடனப்படுத்தி செயற்படத் தொடங்கியது. சோவியத் யூனியன் என்ற நாடு பிளவுபட்டதன் பின்னர் விளாடீர் புட்டீன் அவர்கள் ரஷ்யாவின் ஜனாதிபதியாக தெரிவானார். விளாடிமீர் புட்டீன் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து போன கிரீமியா என்னும் நாட்டை ரஷ்யாவும் மீண்டும் இணைத்துக்கொண்டனர். உக்ரைன் நாடு பிரிந்த பொழுதிலும் பிரிந்தது முதல் ரஷ்யாவுக்கு ஆதரவாக அந்நாட்டின் அப்போதைய ஜனாதிபதி செயற்பட்டார்.

உக்ரைனுக்கு தேவையான பொருளாதார சலுகைகள் அனைத்து ரஷ்யாவே மேற்கொண்டு வந்தது. இந்நிலையில் ரஷ்யா ஆதரவுக் கொள்கையுடன் செயற்பட்ட உக்ரைன் ஜனாதிபதிக்கு அந்நாட்டில் எதிர்ப்புக்கள் உருவாகின அல்லது அமெரிக்காவால் உருவாக்கப்பட்டு அங்கு பலத்த கிளர்ச்சி போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. இக் கிளர்ச்சி போராட்டங்களால் ஜனாதிபதி மாற்றப்பட்டு தற்போதைய ஜனாதிபதியான விளாடிமீர் ஸ்லென்கி பதவியேற்றுக் கொண்டார். இவர் அமெரிக்கா சார்பு கொள்கையுடையவர் ஆக காணப்பட்டார். அத்துடன் நேட்டோ அமைப்பின் இணைந்துகொள்ள ஆர்வம் காட்டத் தொடங்கினார். இதனை ரஷ்யா மிகக் கடுமையாக எதிர்த்தார்.

மேற்குலக நாடுகளுடன் உக்ரைன் கைகோர்க்க நினைத்த பொழுதெல்லாம் ரஷ்யா அச்சுறுத்தி பின்வாங்க வைத்தது. 2018க்குப் பின்னர் உக்ரைன் நேர்டோ அமைப்பில் இணைய பாரிய முயற்சியை மேற்கொண்டதுடன் 2021இல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முயற்சித்துள்ளார். நேட்டோ அமைப்பு என்றால் இது 1949ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அமெரிக்கா இவ் நேட்டோ அமைப்பை உருவாக்கியது. இதில் முதலில் 14 நாடுகள் அங்கம் வகித்தன. இதன் கொள்கை யாதெனில் நேட்டோ அமைப்பில் இணைந்த கொண்ட நாடுகளை அதாவது ஓர் நாடு ஆக்கிரமிக்கவோ அல்லுத ஆத்துமீறி பிரவேசித்தாலோ ஏனைய நேட்டோ அமைப்பில் உள்ள நாடுகள் ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டுக்கு ஆதரவாக செயற்படும். ஆகவே இவ்வாறான ஓர் நேட்டோ அமைப்பில் இணைய உக்ரைன் முயற்சித்துள்ளது இதனால் ரஷ்யா தனது நாட்டுக்கு மிகவும் ஆபத்தான சூழ்நிலை உருவாகும் என உக்ரைனை எச்சரித்ததுடன் நேட்டோ அமைப்பில் இணையவில்லை என உறுதி மொழி தந்தால் உக்ரைன் மீது படையெடுப்பதில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டீன் கூறியிருந்த நிலையில் உக்ரைன் ஜனாதிபதி அதுபற்றி அக்கறை கொள்ளாமல் அமெரிக்காவின் சூழ்ச்சி வலைக்குள் விழுந்து நேட்டோ அமைப்பில் இணைய முற்பட்டதனால் ரஷ்யா தனது படையை இறக்கி தாக்கத் தொடங்கியுள்ளது.

24.02.2022 அன்று அதிகாலை தாக்கத்தொடங்கிய நிலையில் முதல் நாள் சண்டையில் இருபக்கத்திலும் சுமார் 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட நிலையில் இதில் பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இப்பதற்ற சூழ்நிலையில் உலக நாடுகள் மிகப் பெரும் பதற்ற சூழ்நிலையில் காணப்பட்டதுடன் இப் படை நடவடிக்கைக்கு அமெரிக்கா உட்பட பல நாடுகள் கண்டனங்களைத் தெரிவித்ததுடன் பாரிய பொருளாதாரத் தடைகளை ரஷ்யா மீது திணித்துள்ளன. ஆனால் ரஷ்ய அதிபர் இது குறித்து எதுவித கவலையும் அடைந்ததாகத் தெரியவில்லை. அத்துடன் இப்படை நடவடிக்கை ஆரம்பிக்க முன்னர் இவ்வாறான சூழ்நிலைகளை அவர் எதிர்பார்த்த ஒன்றுதான். ஆகவே அதற்கான எதிர் தயார்ப்படுத்தலை அவர் மேற்கொண்டு இருப்பார். இந்நிலையில் இவ் யுத்தத்தால் ஆசிய வல்லரசுகள் உட்பட பல உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளன. உலகின் கச்சாய் எண்ணெய் உற்பத்தியில் மூன்றாவது பெரிய நாடாக ரஷ்யா விளங்குகின்றது. இப்போர் பதற்றத்தில் உலக நாடுகள் எரிபொருள் விலையேற்றமும் தட்டுப்பாடும் நிலவத் தொடங்கியுள்ளது. அத்துடன் போர் தொடங்கிய அன்றே தங்கத்தின் விலையும் வரலாறு காணாத அளவு உயர்ந்துள்ளது. அத்துடன் உக்ரைன் மற்றும் ரஷ்யா நாட்டுக்கு மருத்துவம், பொருளியல் கற்க மற்றும் வேலைக்கு என இந்திய, இலங்கை உட்பட பல நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் தொழிலாளிகள் சென்று வருவது வழக்கம். அவர்களும் தற்போதைய நிலை குறித்து மேற்குறிப்பிட்ட நாடுகள் பீதியில் உள்ளனர். அவர்களை பத்திரமாக மீட்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலக நாடுகளின் தலைவர்கள் பலர் விளாடிமீர் புட்டீனுடன் தொலைபேசியில் உரையாடி யுத்தத்தை நிறுத்தும் படி கோரி வருகின்றனர். ஐ.நா சபையின் செயலாளர் நாயகம் இது ஒரு தன்னிச்சையான செயற்பாடு என்றும் ஐ.நா விதிமுறைகளை மீறிய செயல் என்றும் கண்டித்துள்ளார். 1991ஆம் ஆண்டு இதேபோன்ற ஓர் நிலை வளைகுடாவில் இடம்பெற்றது. அப்போதைய ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் குவைத் மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டபொழுது அதனை எதிர்த்து அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட நாடுகள் குவைத்துக்கு ஆதரவாக களமிறங்கி ஈராக்கின் ஆக்கிரமிப்பில் இருந்து குவைத்தை மீட்டெடுத்தனர். இந் நடவடிக்கைக்கு அப்போதைய ஐ.நா செயலாளர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவர்கள் படை நடவடிக்கையை மேற்கொண்டார். குவைத், அமெரிக்கா சார்பு நாடாகக் காணப்பட்டதுடன் அந்நாட்டில் எரிபொருள் அதிகளவில் உள்ளதால் ஈராக் அதன் மீது படையெடுத்தது. அத்துடன் ஈராக் குவைத் ஆகிய இரு நாடுகளும் தனித்தனி நாடுகள். இஸ்லாமிய நாடுகள் என்ற ஒற்றுமையை தவிர அந்நாடுகள் தனித்தனி நாடுகள் தான்.

ஆனால் இங்கு ரஷ்யா - உக்ரைன் விவகாரம் வேறுமாதிரி ஒன்றாக இருந்த நாடுகள் சூழ்ச்சியால் பிரிக்கப்பட்டதுடன் ரஷ்யாவுக்கு மிக அருகில் உள்ள நாடாக காணப்படுகின்றது. இதனால் தான் ரஷ்யா தனது நாட்டுக்கு உக்ரைனால் ஆபத்து என்று அது நேட்டோ அமைப்பில் இணைந்தால் அமெரிக்கா இதனைப் பயன்படுத்தி தனது நாட்டை எதிர்காலத்தில் தாக்கக்கூடும் என்ற அச்ச நிலை உள்ளதால் வேறுவழியின்றி உக்ரைனை தனது நாட்டுடன் இணைக்கும் முயற்சியில் விளாடிமீர் புட்டீன் இறங்கியுள்ளார். தனது நாட்டுக்கு மிக அருகில் ஆபத்து ஏற்படும் பொழுது பார்த்துக்கொண்டு இருக்கும் தலைவர் அல்ல விளாடிமீர் புட்டீன்.

இந்தியா தனக்கு மிக அருகில் உள்ள இலங்கையில் தனக்கு எதிரியான நாடான சீனாவின் அண்மைக்கால செயற்பாடுகளை பார்த்தும் அதனால் ஏற்படப்போகும் ஆபத்தை உணராமல் இலங்கை அரசின் பொருளாதார நெருக்கடியை தீர்க்க பண உதவி செய்தாவது சீனாவை இலங்கையில் இருந்து விரட்டலாம் என கனவு காண்கின்றது. ஆனால் சீனாவானது வலுவாக இலங்கையில் காலூன்றியுள்ளது. இது இலங்கையை விட இந்தியாவுக்கு மிகவும் ஆபத்தானது. இந்தியாவில் மோடிக்கு பதிலாக விளாடிமீர் புட்டீன் இருந்திருந்தால் நிச்சயமாக உக்ரைனுக்கு ஏற்பட்ட நிலைமைதான் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும். இங்கு ஜனநாயக நாடு முதலாளிதுவ நாடுகள் சோசலிச கம்யூனிஸ்ட் நாடுகள் என்ற நிலைக்கு அப்பால் தனது நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் இவ் மூன்று கொள்கைகளையுடைய எந்த நாடும் தன் நாட்டை பாதுகாக்க எந்த நிலைக்கும் செல்வார்கள். இந்தியா இதை தற்போது புரிந்துகொள்ள தவறுகின்றது. இதன் விளைவுகளை அது மிக விரைவில் சந்திக்கும்.

ரஷ்யா உக்ரைன் போரின் சரி தவறுக்கு அப்பால் இப்போரில் பல அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டபோவது உறுதி. இதனால் பாரிய உயிர் சேதங்கள் பொருட் சேதங்கள ஏற்படவுள்ளது. இந்நிலையில் நேட்டோ நாடுகள் உக்ரைனைக் காப்பாற்ற பாரிய இராணுவ நடவடிக்கையினை எடுக்குமாகவிருந்தால் அந்த மூன்றாம் உலக மகா யுத்தத்தை யாராலும் தடுக்க முடியாது. நேட்டோ நாடுகள் உக்ரைனுக்கு சார்பாக இறங்குமாயின் ரஷ்யாவுக்கு ஆதரவாக கண்டிப்பாக சீனா, வடகொரியா இறங்கும். இது மிகப்பெரும் அழிவுகளை ஏற்படுத்தும். ஆகவே அவ்வாறு செயற்பாட்டில் இறங்காமல் இன்னமும் காலம் செல்லவில்லை. ரஷ்யா -உக்ரைன் யுத்தத்தை நிறுத்தி அமைதிவழி செயற்பட்டு ஏற்படவிருக்கும் உயிர் அழிவுகளை பொருளாதார அழிவுகளையும் தங்கள் நாட்டையும் உலக நாடுகளையும் காக்க முன்வரவேண்டும என்பதே அனைவரின் எதிர்ப்பார்ப்பாகும். நிலைமை மாறுமா?

**தாயகத்தான்**



ஒடுக்கப்பட்ட மக்களுடைய, நாடுகளுடைய விடுதலைக்கான போராட்டங்களுக்குத் துணைபுரிவது என்ற சுதந்திர இந்தியாவின் கொள்கைக்கு இருந்த குரலளவிலான ஆதரவு நேருவுக்குப் பிறகு படிப்படியாகக் குறைந்து பிறகு ஏறக்குறைய இல்லாமல் போய்விட்டது. பிடல் காஸ்ட்ரோவின் தொடக்கக் காலக் கியூபா போர்ச்சுகீசியக் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்த ஆப்பிரிக்க நாடுகளான கினிபிஸ்ஸா, அங்கோலா ஆகிய நாடுகளின் விடுதலைக்குப் பொருளாதார, ஆயுத, மருத்துவ உதவிகள் மூலம் துணை நின்றது. அன்றைய கியூபாவுக்கும் மே 28, 2009இல் ஐ.நா. மனித உரிமை அவையில் இனப்படுகொலையை நிகழ்த்திய இலங்கை அரசுக்கு ஆதரவாக ஒரு தீர்மானத்தை முன் மொழிந்த இன்றைய கியூபாவுக்கும் இடையிலான வேறுபாட்டைத் தீர்மானிப்பது வெறும் ஐம்பதாண்டுகள் மட்டுமல்ல விடுதலை பற்றிய அதன் புரிதலில் ஏற்பட்டுள்ள தலைகீழான மாற்றமும்தான்.

இந்திய அரசுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் கைவிலங்கை அகற்றிக்கொள்ள முயன்றவர்களுக்குக் கால்விலங்கும் மாட்டப்பட்ட கதையாக ஆனதாகத் தமிழர்களால் வர்ணிக்கப்பட்டது.

பொதுவாக்கெடுப்பு நடத்தி வடக்கு-கிழக்கு மாகாணங்களை நிரந்தமாக இணைக்கும் காலம்வரை தற்காலிகமாக அவை இணைக்கப்பட்டு ஓர் அலகாகச் செயற்படும் என இந்தியா இலங்கை ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டது. தற்காலிகமாக அல்ல, நிரந்தரமான இணைப்பே தேவை என விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அப்போது வலியுறுத்தினார். அப்போது பிரபாகரன் பக்கம் நெருங்கி வந்த ராஜீவ் காந்தி அவரது காதோடு காதாக "சிங்களத் தீவிரவாதிகளையும் சிங்கள மக்களையும் திருப்திப் படுத்துவதற்காகத்தான் அப்படிச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் நிரந்தர இணைப்புதான் நோக்கம்" என்றார். ராஜீவ் சொன்னதை அப்போதைக்கு ஏற்றுக்கொண்ட

# உலக அரங்கில் இலங்கை இனப் படுகொலையும் இந்திய அரசியலும்

உலக அரங்கில் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் முற்றுப் பெற்றுவிட்டனவா என்னும் பொதுப்படையான ஒரு கேள்வியிலிருந்து தொடங்கலாம். அரசியல், பொருளாதார வல்லரசுகள் அவ்வப்போது புதிய உலக அரசியல் ஒழுங்கைத் தோற்றுவிக்க முயன்று வருகின்றன. உலகின் பொதுவான இயங்குதிசை வல்லரசுகளால் தலைமை தாங்கப்படும், அவற்றின் நலன்களை முன்னிறுத்தும் சக்திகளால் இயக்கப்படுவதாகவே இருந்து வருகிறது. அதை மக்கள் நலனை முன்னிறுத்தும், மக்களால் தலைமை தாங்கப்படும் சக்திகளால் இயக்கப்படுவதாக மாற்ற வேண்டிய கடப்பாடு நமக்குள்ளது.

2011இல் தெற்கு சூடானின் விடுதலையை உள்ளடக்கிய அண்மைக் காலம்வரையிலான நிகழ்வுகள் உலக அரங்கில் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் இன்னும் முற்றுப் பெறாதவை என்பதை நிரூபிக்கின்றன. 1990களில் ஸ்லேவேனியா, கொசாவோ, மாசிடோனியா, உக்ரைன், ஜார்ஜியா, டிராண்டஸ்டிரியா, போஸ்னியா, எரித்ரியா, மால்டோவா, கிழக்கு திமோர் போன்ற நாடுகளிலும் இரண்டாயிரங்களில் மாண்டி நிக்ரோ, தெற்கு ரேசடியா, தெற்கு சூடான் முதலான நாடுகளிலும் நடைபெற்ற தேசிய இன விடுதலைப் போராட்டங்களே அதற்கான சான்றுகளாக உள்ளன. இன்றுவரையில் தொடர்ந்து கொண்டிருக்கும் காஷ்மீர், நாகலாந்து, மணிப்பூர், மேற்கு இரியான், திபேத்து, ஈழ மக்களின் விடுதலைக்கான போராட்டங்களும் இப்பட்டியலிலிருந்து வருபவை. இவற்றுள் மிகக் கூர்மையானதும் அதிக முக்கியத்துவமும் கொண்டது ஈழப் போராட்டம்.

தமிழீழக் கோரிக்கை சரியானதா பிழையானதா என்பன போன்ற கேள்விகளைக் கடந்து வந்துவிட்டது வரலாறு. லட்சக்கணக்கான ஈழத் தமிழ் மக்களை ஈவிரக்கமின்றிப் படுகொலைசெய்த சிங்களப் பேரினவாத அரசுடன் ஈழத் தமிழ்ச் சமூகம் இணக்கமாக இருப்பதற்கான சாத்தியங்கள் இனி இல்லை. கொடூரமாகப் பழிவாங்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள் தமக்கான இன விடுதலைப் போராட்டத்தை அதன் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்த வேண்டும்.

இது தொடர்பில், "வரலாற்றுரீதியாகப் பார்க்கும்போது இலங்கைத் தமிழர்களைப் போல இனப்படு கொலைகளுக்குள்ளான எந்தவொரு மக்கள் குழுவும் தமக்கெனச் சுதந்திரமானதொரு நாட்டை உருவாக்கிக் கொண்ட பிறகுதான் அவற்றிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொண்டனர். கடந்த சில மாதங்களில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் வன்னியில் படுகொலை செய்யப்பட்ட போது எந்த நாடும் அந்த வெறித்தனமான படுகொலைகளைத் தடுக்க முயலவில்லை. 1948 இன அழிப்பு எதிர்ப்பு ஒப்பந்தத்தின்படி அனைத்து நாடுகளும் தமது கடமைகளைச் செய்யத் தவறிவிட்டன. எனவே இலங்கை அரசிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்குத் தனிநாடு ஒன்றை உருவாக்கிக்கொள்வதே இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்புடைய தீர்வு. "பன்னாட்டுச் சட்ட திட்டங்களின்படி இன அழிப்பால் பாதிக்கப்பட்டவர்கள் தனி நாடு ஒன்றை உருவாக்கிக் கொள்வதே பயனுள்ள தீர்வும் உரிய இழப்பீடும் ஆகும்" எனப் பிராசிஸ் பாய்ல்ஸ் கூறியதை மனங்கொள்ள வேண்டும். (பேராசிரியர் பிரான்சிஸ் பாய்ல்ஸ், உலக மனித உரிமைகள் அமைப்பின் (Amnesty International) முன்னாள் உயர்மட்டக்குழு இயக்குநர் இல்லினாய் பல்கலைக் கழக முன்னாள் பேராசிரியர்.)

நாம் ஏற்கிறோமோ இல்லையோ ஓர் உண்மையைப் பதிவுசெய்தாக வேண்டும். எந்தப் போராட்டமும் அறவழியில் பயணிக்கும்போது அது உலகின் கவனத்தைப் பெறுவதில்லை. அறவழிப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வடிவெடுக்கும்போது மட்டுமே சர்வதேசக் கவனமும் தலையீடும் கிடைக்கப்பெறுகின்றன.

ஈழத் தமிழர் விடுதலைப் போர் சுமார் முப்பதாண்டுகள்வரை அறவழியில் அதுவும் இந்தியாவின் காந்தி காட்டிய சத்தியாக்கிரக வழியிலேயே நடந்தது. மிகப் பெரிய ஜனநாயக பூமி என்று சொல்லப்பட்ட இந்தியாவும் அது காலம்வரை அதைக் கண்டுகொள்ளவில்லை. அப்போது நடைபெற்ற அறவழிப் போராட்டத்தை அங்கீகரித்து அமைதித் தீர்வு காணும் முயற்சிகளைக் காந்திய இந்தியாவால் அப்போதே மேற்கொண்டிருக்க முடியும்.

1972ஆம் ஆண்டிலும் அதற்குப் பிறகும் சிறிய அளவிலான ஆயுதப் போராட்டங்கள் உருவாகத் தொடங்கிய பின்னர்தான் இந்திய அரசு ஈழப் போராட்டத்தைக் கவனிக்கத் தொடங்கியது. 1983இல் இலங்கையில் நடைபெற்ற பெரிய அளவிலான இனப்படுகொலைக்குப் பின்னரே இந்தியா நேரடியாகத் தலையிடவும் முற்பட்டது. இந்தத் தலையீடுகூடச் சுயநலன் சார்ந்ததே.

"இலங்கைத்தீவு இரு அரசுகளாக இருப்பதைவிட ஓர் அரசாக இருப்பதே இந்தியாவின் எதிர்கால நலன்களுக்குச் சாதகமானது. அப்போது தான் இந்தியாவால் இலங்கையைச் சுலபமாகக் கையாள முடியும். எனவே இந்தியா தமிழீழக் கோரிக்கையை-தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தனது நலனுக்குகந்த அளவில் ஓரளவுக்குத் தீர்த்துவைப்பதும் தனது தலைமையை இலங்கை அரசை ஏற்கவைப்பதுமே இந்தியாவின் பிரதான நோக்கமாய் இருக்கிறது" என்னும் ஒரு கருத்து எண்பதுகளின் மத்தியில் ஈழத்தில் நடைபெற்ற அரசியல்சார்ந்த உரையாடல்களில் அடிக்கடி இடம்பெற்றிருந்தது.

தான் விடுதலைபெற்ற கையோடு மக்கள் விடுதலை அரசியலிலிருந்து இந்தியா விடுதலை பெற்றுக்கொண்டது. ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தொடர்ந்து மோசமான நிலைப்பாடுகளையே எடுத்துவந்துள்ளது. 1983 இலங்கை இனப் படு கொலையைக் கண்டித்து, ஐ. நா. துணைக்குழுக் கூட்டத்தில் இதயமுள்ள நாடுகளின் தலைவர்கள் பலர் பேசினர். ஐ. நாவின் இந்தியப் பிரதிநிதி சையத் மசூத், "இலங்கையில் உள்ள நிலைமைகள் குறித்து ஐ. நா. அவசரப்பட்டு நடவடிக்கை எடுக்கக் கூடாது" என்று பேசினார். அப்போதைய உலக முக்கியத்துவமுள்ள பிரச்சினைகள் பற்றி ஐ. நா. அவையில் பேசிய அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி 1983இன் இனப் படுகொலை பற்றி எதுவும் பேசவில்லை. பேசும் அளவுக்கு முக்கியத்துவமுடையவை அல்ல அப்படுகொலைகள் என இந்திரா கருதினார் போலும். தனக்கு வந்தால் தெரியும் தலைவலியும் காய்ச்சலும் என்பதுபோல இலங்கை அமெரிக்கச் சார்பு நிலை எடுத்த பிறகு இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்காக ஜெ. ஆர். ஜெயவர்த்தனா இலங்கை அதிபராக இருந்தபோது தமிழ்ப் போராளிக் குழுக்களுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் அளித்தது இந்தியா. இலங்கை அரசு இனவாதத்தைச் சாக்காக்கி 1970களில் மேலைநாடுகளுடன் கைகோத்துக் கொண்டு இந்திய எதிர்ப்பில் தீவிரமாக நின்றது. இலங்கையின் எதிர்க்கட்சிகளும் இனவாதத்தை மூலதனமாகக்கொண்டே அரசியலில் ஜீவிக்க முடிந்தன. இப்பிராந்தியத்தில் வல்லரசாக உருவெடுத்துக்கொண்டிருந்த இந்தியா தன் நோக்கு நிலையிலிருந்தே தீர்வை முன்வைத்தது. முரண்பாடுகள் இராணுவரீதியிலிலேயே தீர்க்கப் படக்கூடியவனவாக முறுகல்நிலை கொண்டன. ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என முன்னர் போராளிகளுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் அளித்த இந்தியா 1987இல் இலங்கையின் மீது இராணுவ நடவடிக்கை எடுத்தது. அமெரிக்காவோ முழு இலங்கையையும் இழந்துவிடத் தயாராக இல்லை. சிறிய விட்டுக்கொடுத்தல்களுடன் ஒரு சமரசத்தை அமெரிக்கா முன்மொழிந்தபோது ஜெ. ஆர். ஜெயவர்த்தனா அமெரிக்காவின் நோக்கத்தைப் புரிந்துகொண்டார். அமெரிக்கா அந்தச் சமரச உடன்பாட்டை எப்படி வரவேற்றது என்பதை இங்குக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

"இந்தியாவுக்கு வயது வந்துவிட்டது. இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு எடுத்த நிலைப்பாட்டால் அது தன்னைப் பிராந்திய வல்லரசாக மாற்றிக் கொண்டுவிட்டது. இந்தியாவின் இந்த இராணுவ நடவடிக்கையை அமெரிக்கா வரவேற்கிறது" என்ற மிகச் சாகசமான வார்த்தைகளின் மூலம் வரவேற்றது அமெரிக்கா. அந்த நேரத்தில் வளைகுடா நாடுகளில் தனக்கு ஏற்பட்ட நெருக்கடி காரணமாக இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவுடன் குறைந்தபட்சமாகவேனும் ஒத்துப் போக வேண்டிய தேவை ஏற்பட்டது அமெரிக்காவுக்கு. ஆனால் இந்தியாவின் இராணுவ நடவடிக்கைக்குப் பின் இலங்கை-பிரபாகரன் தன் தளபதிகளுக்கும் போராளிகளுக்கும் அதைச் சொன்னார். புலிகள் இதை ஏற்கவில்லை. இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து இரு போராளிகள் குப்பி கடித்து இறந்தனர். நிரந்தர இணைப்பு என்று உறுதியளித்த ராஜீவ் காந்தி பின்னாட்களில் அதன் மேல் அக்கறை காட்டவில்லை. இப்போது கூட இந்திய அரசியல் தலைமைகள் அந்த ஒப்பந்தத்தைப் பற்றி எதுவும் பேசுவதில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தற்காலிகமாக இணைத்து ஒரு முதல்வரை நியமிக்க வேண்டியுள்ளது எனவும் மூன்று பெயர்களைப் பரிந்துரைக்குமாறும் அப்போதைய இலங்கைக்கான இந்தியத் தூதர் தீட்சித் பிரபாகரனிடம் கேட்டுக்கொண்டார். "மூன்று பெயர்கள் அல்ல, ஒரு பெயரைத் தான் கொடுக்க முடியும்" என்று பிரபாகரன் அவரது கோரிக்கையை ஏற்க மறுத்தார். "மூன்று பெயர்கள் கொடுங்கள். அதில் முதலாவது பெயரையே தெரிவுசெய்வோம்" என தீட்சித் அளித்த உறுதிமொழியின் பேரில் புலிகள் அப்போது மூன்று பெயர்களை அவரிடம் அளித்தனர். புலிகள் அளித்த பட்டியலில் கிழக்கு மாகாணம், மட்டக்களப்பைச் சேர்ந்த உயர்நிலை அரசு அதிகாரியான பத்மநாதன் பெயர் முதலாவதாகவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவஞானம் பெயர் மூன்றாவதாகவும் இடம்பெற்றிருந்தது. தந்திரமான முறையில் பட்டியலில் மூன்றாவது நபராக இருந்த சிவஞானத்தையே முதல்வராகத் தேர்வுசெய்தார் ஜே. ஆர். ஜெயவர்த்தனா. கிழக்கு மாகாணம் தொடர்ந்து புலிகளால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்னும் பிரச்சாரத்துக்கு வலுவூட்டும் நோக்கத்துடன் ஜெயவர்த்தனா மேற்கொண்ட இந்த நடவடிக்கையை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டது.

இப்படியான நிகழ்வுகள்தாம் பிரபாகரனுக்கும் புலிகளுக்கும் இந்தியாமீது அவநம்பிக்கையை ஏற்படுத்தின. புலிப் போராளிகள் மட்டுமல்ல, பிற போராளிக் குழுக்களும் இந்தியா ஏமாற்றிவிடும் என்பதை உணர்ந்தே இருந்தனர். ஆனால் இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்தை அனைத்துப் போராளிக் குழுக்களும் விளங்கிக் கொண்டிருந்தனர். யாரும் அந்த உண்மையை மறுக்கவில்லை. இந்தியாவின் ராஜதந்திரிகளும் கொள்கை வகுப்பாளர்களும் ஜே. ஆரின் தந்திரங்களால் கட்டுப்படுத்தப்பட்டனர். பிரச்சினை இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றியது. ஒப்பந்த ஷரத்துகளில் கூறப்பட்டதற்கு மாறாக ஜெயவர்த்தனா மேற்கொண்டு வந்த எல்லா நடவடிக்கைகளையும் இந்தியா ஏற்றுக்கொண்டது. சண்டே லீடர் வார இதழுக்கு அளித்த பேட்டியில் "நான் உண்மையைச் சொன்னால் நீங்கள் (சிங்களவர்கள்) எல்லோரும் என்னை எதிர்ப்பீர்கள்.

11ஆம் பக்கம் பார்க்க...

மு.புஷ்பராசன்

# மனிதத்திற்கு எதிரானதென்று சர்வதேச மட்டத்தில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள்



தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை வன்னியில் சிறிலங்கா இராணுவம் பாவித்துள்ளது என்கின்றதான குற்றச்சாட்டுக்கள் தற்பொழுது மீண்டும் எழ ஆரம்பித்துள்ளன. மனிதத்திற்கு எதிரானதென்று சர்வதேச மட்டத்தில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள்(Chemical weopens-biological weapons) மற்றும் கிளஸ்டர் குண்டுகள் என்று அழைக்கப்படுகின்ற கொத்தணிக்குண்டுகள் (Cluster bombs-Cluster munition) போன்றனவற்றை விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தங்களின் பொழுது சிறிலங்காப் படைகள் பாவித்ததற்கான ஆதாரங்கள் சர்வதேச அமைப்புக்கள். உட்பட பல்வேறு தரப்பில் இருந்தும் தற்பொழுது எழ ஆரம்பித்துள்ளன.

வன்னியில் கிளஸ்டர் குண்டுகள் பாவிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாக ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் அலென் பொஸ்டன் சில வாரங்களுக்கு முன்னர் தகவல் வெளியிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து. இந்த விடயம் தொடர்பான ஒரு விசாரணையை தாம் மேற்கொள்ள இருப்பதாக, கிளஸ்டர் குண்டுகளின் பாவனையைத் தடை செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள அனைத்துலக அமைப்பான கிளஸ்டர் குண்டுகள் ஒழிப்புக் கூட்டணியின் பணிப்பாளர் லோறா சீஸ்மன் கருத்து வெளியிட்டிருந்தார். ஆனாலும் இந்த விவகாரம் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு சர்வதேச மட்டத்திற்கு கொண்டுசெல்லப்படவில்லை.

தமிழ் ஊடகங்களில் இந்த விடயம் பேசப்பட்ட அளவிற்கு சர்வதேச ஊடகங்களின் கவனத்திற்கு இது கொண்டுசெல்லப்படவில்லை என்பது உலகத் தமிழர்களின் இராஜதந்திரச் செயல்பாடுகளைப் பொறுத்தவரையில் ஒரு பின்னடைவு என்றுதான் கூறவேண்டும்.

காலத்தின் தேவை இந்த தடைசெய்யப்பட்ட ஆயுத விடயம் சர்வதேச மட்டத்திற்கு கொண்டுசெல்லப்படுவதற்கு சில முக்கிய தரப்புக்கள் தடையாக இருக்கின்றதோ என்கின்றதான சந்தேகம் தற்பொழுது ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசியல் மேடையில் மேற்குலகம் எதிர்பார்த்த ஏதோ ஒரு மாற்றம் நிகழ ஆரம்பித்திருப்பது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது சர்வதேச மட்டத்தில் இன்று மனித உரிமை பேசிக்கொண்டிருக்கின்ற குறிப்பட்ட சில நாடுகள் இந்தக் கிளஸ்டர் குண்டுகளை பாவித்த குற்ற உணர்வு மற்றொரு காரணமாக இருக்கலாம். ஆனாலும் சிறிலங்கா தேசத்தின் உண்மையான முகத்தைத் தோலுரித்துக் காண்பிப்பதற்கு உலகத்தமிழர் கரங்களில் மேலதிகமாகக் கிடைத்துள்ள நல்லதொரு ஆதாரம் என்கின்ற வகையில் இந்த தடைசெய்யப்பட்ட ஆயுத விவகாரத்தை நாம் முன்னுரிமை கொடுத்து நகர்த்திச் செல்வது காலத்தின் தேவையாக இருக்கின்றது.

இந்த இராஜதந்திர நகர்வை எவ்வாறு மேற்கொள்வது. யார் அதனைச் செய்வது என்பது பற்றிப் பார்ப்பதற்கு முன்னால் சில முக்கிய விடயங்களை ஆராய்வது அவசியம் என்று நினைக்கின்றேன். இந்த தடைசெய்யப்பட்ட ஆயுத விவகாரம் தொடர்பில் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் சில கேள்விகள் இருக்கின்றன.

**உலகில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் சிறிலங்காப் படைகள் வசம் இருப்பது உண்மையா?**

**அவற்றை சிறிலங்காப் படைகள் உண்மையிலேயே பாவித்ததா?**

**சர்வதேச மட்டத்தில் தடை செய்யப்பட்ட இந்தக் கிளஸ்டர குண்டுகள் மற்றும் இரசாயன ஆயுதங்களை உலகம் எவ்வாறு பார்க்கின்றது?**

**இந்த ஆயுதங்களைப் பாவிப்பதற்கு சர்வதேச மட்டத்தில் என்னென்ன தடைகள் இருக்கின்றன?**

**கோத்தாவின் யுத்தத்தின் பொழுது வன்னியில் இந்தக் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை சிறிலங்காப்படைகள் பாவித்திருப்பது நிரூபிக்கப்பட்டால் எப்படியான நிர்ப்பந்தங்களை, நெருக்கடிகளை சிறிலங்கா அரசாங்கம் சந்திக்கவேண்டியிருக்கும்?**

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை முதலில் நாம் பார்ப்போம்.

**சிறிலங்காப் படைகள்வசம் இரசாயனக் குண்டுகள்?**

2001ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12ம் திகதி தென்னிலங்கை ஆங்கில ஊடகமான சண்டே லீடர் (Sunday Leader) பத்திரிகை, சிறிலங்கா இராணுவத் தலைமையின் ஊழல் நடவடிக்கை ஒன்றினை அம்பலப்படுத்தியிருந்தது.

தோளில் வைத்து இயக்கக்கூடிய இரசாயனக்குண்டுகளைச் செலுத்தக்கூடிய ஏவுகைகளை (RPO-A Shmel infantry ) சிறிலங்கா இராணுவத்தினர் கொள்வனவு செய்திருந்ததாகவும், அதில் பாரிய அளவு பண மோசடி நடைபெற்றிருந்ததாகவும், அந்தப் பத்திரிகை ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டிருந்தது. சிறிலங்காப் படையினர் பெருமளவு இரசாயன ஆயுதங்களைக் கொள்வனது செய்திருந்த விடயம் இதன் மூலமே முதன் முதலில் வெளிவந்து மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அந்த நேரத்தில் சிறிலங்காவின் இராணுவத் தளபதியாக இருந்த லெப்.ஜெனரல் லயனல் பல்லேகல்ல (Lt. General Lionel Ballagalle) இந்த இரசாயன ஆயுதங்களை பெற்றதாகவும், லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் Gladstone Industrial Holdings என்ற நிறுவனத்தின் ஊடாகவே இந்த ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அந்த ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. ரஷ்யாவின் டுலா என்ற இடத்தில் KBC Instrument Design Bureau என்ற நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட இந்த இரசாயன ஆயுதங்களை, உக்ரேனிடம் இருந்து சிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய்திருந்தது. 1000 இரசாயனக் குண்டுகளை 2001ம் ஆண்டு ஜீலை மாதம் 17ம் திகதி சிறிலங்கா தனியானதொரு விமானம் மூலமாக இலங்கைக்குக் கொண்டு வந்திருந்து என்பதை, அந்தத் தென்இலங்கை ஆங்கில ஊடகம் ஆதாரங்களுடன் நிரூபித்திருந்தது.

RPO-A Shmel infantry flamethrower என்ற இந்த இரசாயனக் குண்டுகள், thermo baric வகையைச் சேர்ந்ததாகவும், பாதிக்கப்படுபவருக்கு பாரிய எரிகாயங்களை விளைவிக்கக் கூடியதாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது. செச்னிய யுத்தத்தின் போது ரஷ்யா இந்த வகை இரசாயனக் குண்டுகளைப் பாவித்து, மனித உரிமைகள் அமைப்புக்களின் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியிருந்தது. இந்த வகை குண்டுகள் பொதுமக்களுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தக்கூடியன என்று தெரிவித்து அமெரிக்கா இந்த வகைக் குண்டுகளை தடைசெய்துள்ளது. இப்படிப்பட்ட இரசாயனக் குண்டுகளை சிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய்துள்ளது என்ற செய்தி வெளியானதைத் தொடர்ந்து அந்த நேரத்தில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. ரஷ்யாவைத் தவிர உலகம் முழுவதும் தடைசெய்யப்பட்ட இந்த வகை இரசாயனக் குண்டுகளை, அதுவும் பெரும் எண்ணிக்கையில் சந்திரிக்கா அரசாங்கம் கொள்வனவு செய்தது. பெரிய பரப்புக்கு உள்ளானது. ஊடகவியலாளர்கள் சிறிலங்கா இராணுவத்தை கேள்வி கேட்டுத் துளைத்துவிட்டார்கள்.

**சிறிலங்கா இராணுவத்தின் பதில்கள்:**

தாம் கொள்வனவுசெய்தது இரசாயன ஆயுதமல்ல. அதிக சேதத்தை விளைவிக்கக் கூடியதான இரசாயனம் சிறிதளவு கலக்கப்பட்ட ஆயுதம் மட்டுமே அது என்று சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பல்லேகல்ல ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் பின்னர் வேறு வழியில்லாமல் உண்மையை ஒப்புக்கொண்டார். பிபீசி செய்தி நிறுவனத்திற்கு இது தொடர்பாக செவ்வி வழங்கிய அப்போதைய சிறிலங்கா இரர்ணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணரட்ட, 'உலகின் பல நாடுகளும் இரசாயன ஆயுதங்களைத் தமதாகக் கொண்டிருப்பதாகவும், சில நாடுகள் அணு ஆயுதங்களைக்கூட தம்மிடம் வைத்திருப்பதாகக் கூறி, தாம் இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது தவறல்ல' என்று நியாயப்படுத்தியிருந்தார். இந்த இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்து சிறிலங்கா இராணுவத்திற்கு வழங்கிய Gladstone Industrial Holdings என்ற நிறுவனத்தின் பணிப்பாளர்களுள் ஒருவரான முன்னாள் சிறிலங்கா இராணுவ அதிகாரி லெப். கேணல் உபாலி கஜநாயக்க (Lt. Col. Upali Gajanayake) சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றிற்கு கருத்துக்கூறும் பொழுது, 'சிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய்தது இரசாயன ஆயுதமே' என்று உறுதிப்படுத்தியிருந்தார்.

**புலிகளின் கண்டனம்:**

சிறிலங்கா இராணுவம் இரசாயனக் குண்டுகளைக் கொள்வனவு செய்தது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் கடுமையான கண்டனத்தை அந்த நேரத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருந்தார்கள். 16.08.2001 அன்று விடுதலைப் புலிகள் வெளிட்ட கண்டனத்தில், சிறிலங்கா இராணுவத்தின் இரசாயன ஆயுதப் பாவனையை கட்டுப்படுத்துமாறு அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா போன்ற நாடுகளிடம் கோரிக்கையும் முன்வைத்திருந்தார்கள். அந்த வருடத்தின் இறுதியில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, 2002 இல் சமாதானம் என்ற மாயை வந்ததைத் தொடர்ந்து, இந்த இரசாயன ஆயுத விவகாரம் அப்படியே மறக்கப்பட்டுவிட்டிருந்தது. தொடர்ந்து மறைக்கப்பட்டும் விட்டது.

ஆக ஒரு விடயம் தெளிவாகத் தெரிகின்றது. கடந்த 2001ம் ஆண்டு முதல் சிறிலங்காப் படைகள் வசம் இரசாயன ஆயுதங்கள் இருக்கத்தான் செய்கின்றன என்கின்ற விடயம் தெளிவாகத் தெரிகின்றது. அதுவும் அந்த நேரத்திலேயே 1000 இற்கும் அதிகமான இரசாயன ஆயுதங்கள் சிறிலங்காப் படைகள்வசம் இருந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**வன்னி யுத்தத்தில் இரசாயன ஆயுதம்?**

இது இவ்வாறு இருக்க, வன்னி யுத்தத்தின் போது இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கும் நோக்கம் சிறிலங்கா இராணுவத்தினருக்கு இருந்திருக்கின்றது என்கின்ற உண்மையும், ஒரு சந்தர்பத்தில் வெளிப்பட்டு நின்றது. 2008ம் வருடம் செப்டெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் இரசாயன ஆயுதம் பற்றி, புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்துசென்ற புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதி கருணா பிரஸ்தாபித்திருந்தார். 'வன்னியில் பின்னடைவைச் சந்தித்துவரும் விடுதலைப் புலிகள் அமைப்பு அங்கு இரசாயன ஆயுதங்களைப் பாவித்துத் தாக்குதல் நடாத்தத் தயாராகிவருவதாக' கருணா ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். கருணாவின் இந்தக் கூற்று சர்வதேச ஊடகங்களில் எல்லாம் வெளியாகி அதிக பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

கருணாவின் அன்றைய நிலையைப் பொறுத்தவரையில் அவர் முழுக்க முழுக்க சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இருந்துவந்தார். அவருக்குப் பொறுப்பாக இருக்கும் சிறிலங்காப் படைத்துறை அதிகாரியின் அனுமதியின்றி அவரால் மட்டக்களப்பில் உள்ள அவரது குழு உறுப்பினரைக்கூடத் தொடர்புகொள்ள முடியாது. அந்த நேரத்தில் கருணாவின் அனைத்து மெய்பாதுகாவலர்கள் கூட, முழுக்க முழுக்க சிங்கள படைவீரர்களே. அப்படி இருக்க, விடுதலைப் புலிகளின் தலைமை இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கத் தீர்மானித்த விடயம் கருணாவிற்கு தெரியவர அந்த நேரத்தில் சந்தர்ப்பம் இல்லவே இல்லை.

**அப்படி இருக்க, இந்த இரசாயன ஆயுத விவகாரத்தை கருணா எதற்காக சர்வதே ஊடகங்களுக்கு வெளியிட்டிருந்தார்?**

இங்குதான் முக்கிய சந்தேகம் உதயமாகின்றது. உண்மையில் கருணா மூலம் இந்த இரசாயன ஆயுத விவகாரம் வெளியே வரவேண்டும் என்ற சிறிலங்காப் படையினரின் விருப்பத்தையே, அந்த நேரத்தில் கருணா நிறைவேற்றி வைத்திருந்தார். அன்றைய நிலையில், கருணா என்ன செய்யவேண்டும், எங்கு போகவேண்டும், என்ன பேசவேண்டும் என்றெல்லாம் தீர்மானிக்கும் தரப்பாக, சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவே இருந்து வந்திருக்கின்றது. அந்தப் பிரிவினரின் உத்தரவின் பெயரிலேயே, புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்க இருக்கின்றார்கள் என்ற தகவலை கருணா வெளியிட்டிருக்கின்றார் என்பதில் சந்தேகம் இல்லை. கருணா என்கின்ற நபர், வன்னியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஜெயசிக்குறு படைநடவடிக்கைக்கு எதிரான விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்குத் தலைமைதாங்கியவர். அந்த நடவடிக்கைகளை ஒருகிணைத்தவர். எனவே அவரது வாயில் இருந்து, புலிகள் தொடர்பான, அதிலும் குறிப்பாக வன்னியில் புலிகள் மேற்கொள்ளக்கூடியதான நடவடிக்கை குறித்ததான செய்திகள் வெளிவந்தால் அவற்றிற்கு ஒரு பெறுமதி நிச்சயம் இருக்கும். இது சிறிலங்காப் புலனாய்வுத்துறைக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான், இந்த இரசாயன ஆயுதம் பற்றியதான தகவலை கருணாவின் வாயில் இருந்து வெளியே கசியவிட்டிருந்தார்கள். இதேபோன்று, 17.09.2008 அன்று அக்கராயனில் விடுதலைப் புலிகள் வாயுத் தாக்குதலை மேற்கொண்டதாக செய்திகள் வெளியாகி இருந்தன. இதனால் பல சிறிலங்காப் படையினர் பாதிக்கப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளியாகி இருந்த இந்தச் செய்தியும், சர்வதேச ஊடகங்களைக் குறிவைத்தே வெளியிடப்பட்டிருந்தது

**தொடரும்...**

**நெற்றி பொறியன்**

# இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியால் தடுமாறும் அரசும், அல்லல்படும் மக்களும்



உலகமெங்கும் பரவி பெரும் பாதிப்பினை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கொவிட் வைரசும், அதனது திரிபுகளும், உலக நாடுகளின் பொருளாரத்தை வீழ்ச்சி காண வைத்திருக்கிறது. என்றுமில்லாதவாறு பெரும் பின்னடைவினை உலகளவில் பெருவாரியான நாடுகள் சந்தித்துள்ளன என்பது உண்மையே. குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளை விட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இவ் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகி வருகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் துன்பநிலையினை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி குறித்த நாடுகளுக்கு பொருளாதார ரீதியான சிக்கல்களைச் சமாளிக்க கடன்களையும், பொருட்கள் உதவிகளையும் தாராளமாகச் செய்து வருகின்றன. இந்தப் பொருளாதார வீழ்ச்சி என்கிற சுழலில் சிக்கியிருக்கும் ஆசிய நாடான இலங்கையில், கொவிட் வைரசின் தாக்கமும் அதனது திரிபுகளும் வெகுவாகப் பரவிவருகின்றது. மரணங்களின் எண்ணிக்கையும் இன்னமும் முற்றாக வீழ்ச்சியடையவில்ல. இந்த நிலையில் நாட்டில் ஓமிக்ரோன் வகை வைரஸ் முழுவதுமாக பரவியிருப்பதாக மருத்துவத் தரப்பினரால் கூறப்பட்டிருக்கிறது. நாட்டினது உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையினரின் வருகை பாதிக்கப்பட்டுள்ளது. அந்நிய செலாவணி வீழ்ச்சியடைந்துள்ளது. நாட்டின் பிரதான வருவாய்த் துறையான ஆடைத்தொழிற்சாலைகள் பெருமளவில் இவ் கொவிட் வைரசினால் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளன. அத்துடன் பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, கருவா, இறப்பர் உற்பத்தியிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பழங்காலம் முதலே இரத்தினங்கள், யானைத் தந்தம், முத்துகள் போன்ற பொருட்களுக்குப் புகழ்பெற்ற இலங்கை, குடியேற்ற காலத்தில் கறுவா, தேயிலை, இறப்பர், தென்னை போன்ற வர்த்தகப் பயிர்களுக்கு பெயர் பெற்று விளங்கியது. இலங்கைக்கு 1948யில் விடுதலை பெற்ற பின்னர், முதலாளித்துவ பொருளாதாரத்தைப் சிறிது காலமே பின்பற்றிய போதிலும் அது ஆசியாவிலே மிக முன்னேற்றகரமான பற்பல சமூக நல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. நாட்டில் ஜனாதிபதித் தேர்தலொன்று முகங்கொடுத்து, கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அரியணையில் பல கனவுகளுடன் அமர்ந்தபோதிலும், புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்கிற கட்சி ஆடசி அதிகாரத்தைக் கைப்பற்றிய நிலையிலும், எதனையும் செய்ய முடியாத அளவிற்கு திடீரென இலங்கை முழுவதும் பரவிய கொவிட் வைரசின் காரணமாக, நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான டொலர்களில் பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணத்தால் இன்றைய இலங்கை நாடானது தலைகீழாக மாறியுள்ளது. சிறிதுகாலமாக நாட்டு மக்களுக்கு நிவாரணமாக கொடுப்பனவுகளை அரசு வழங்கியபோதிலும் அதிலும் குழப்ப நிலைகள் உருவானது. அரச உத்தியோகத்தர்களுக்கான ஊதியத்தை வழங்கியே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் புதிய அரசுக்கு ஏற்பட்டது. நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அதிக அளவிலான நிதியினைச் செலவழித்து நிர்வகிக்கவேண்டிய கட்டாய சூழலும் ஏற்பட்டுள்ளது. நாட்டின் தேவைக்கேற்ப டொலர்களில் ஏற்பட்ட பற்றாக்குறையினால், அத்தியாவசியப் பொருட்களுக்கானத் தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவுகிறது. பொருட்களுக்கான விலைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு எதிர்வரும் சில தினங்களில் குறைவடைந்துவிடும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் எரிபொருளின் விலையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் கூறுகின்றார். ஏற்கனவே கொவிட் வைரசினால் நாடு பல மாதங்களாக முடக்கப்பட்டிருந்த சூழலில் இலங்கை முழுவதும் அரசினால் கொவிட் தடுப்பூசிகளைச் செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதன் காரணமாக நாடு முடக்கநிலையில் இருந்து விடுவிக்கப்பட்டது என்பது அனைவருக்கும தெரியும். தொடரச்சியாக இலங்கை போன்ற நாடுகளை முடக்கிவைத்திருக்கவும் முடியாததொரு நிலை இருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் தான் நாடு படிப்படியாக முடக்கநிலையில் இருந்து நீங்கி வழமைக்குத் திரும்பியிருக்கிறது. எனினும், மக்களது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அரசு எதிர்பார்த்ததைப்போல நாட்டின் உற்பத்திகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அரசு திடீரென அறிவித்த உர இறக்குமதித் தடையால் நாட்டின் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டதுடன், பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்தி வீதமும் சரிவடைந்துள்ளது. மலையக மக்கள் தினமும் வேலை பெறமுடியாமல் சம்பளப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். ஏற்கனவே கொவிட் நிலைமையினால் வேலைவாய்ப்பினை இழந்திருந்த மக்கள் அல்லது பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு அரசின் கொள்கைகளால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் இன்று அரசு மீது மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

இந்தப் பொருளாதார வீழ்ச்சியின் உச்சக்கட்டம் தான் விலை உயர்வு என்கிறது அரசு. இதனால் மக்கள் இன்று அல்லல்படும் நிலைக்கு வந்துள்ளனர். அதிலும் குறிப்பாக அரச மற்றும் தனியார் துறையினர், தினக்கூலி செய்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான தனியார் தொழில் நிறுவனங்கள் தமது தொழிலாளர்களின் ஊதிய விடயத்தில் இன்னமும் அதிகரிப்பினை ஏற்படுத்தவில்லை. நாட்டின் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றபோதிலும் சம்பளம் இன்னமும் அதிகரிக்கப்படாமல் தமது வாழ்க்கையினை கொண்டு நடத்த முடியாத கையறு நிலைக்கு மக்கள் வந்துள்ளனர். ஒரு குடும்பத்திலுள்ள அனைவரும் இன்று வேலையொன்றினைத்தேடிச்செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அனைவரும் உழைத்தால் தான் சோறு என்கிற நிலை. மறுபக்கத்தில் எரிபொருள் தட்டுப்பாடு நாட்டில் இன்று பாரிய பிரச்சினையை உண்டுபண்ணியுள்ளது. போதிய எரிபொருள் உலக சந்தையில் இருக்கின்றபோதிலும் கொள்வனவு செய்வதற்குத் தேவையான டொலர் தட்டுப்பாட்டால் அரசு பிற நாடுகளிடம் டொலரினையும் எரிபொருளினையும் கடனாக வாங்கவேண்டிய நிலைக்கு வந்துள்ளது. ஏற்கனவே கடந்த கால அரசுகளின் செயற்பாட்டால் பாரிய கடன்சுமைக்குள் சிக்குண்டுள்ள இலங்கை, தற்போதைய சூழலில் மேலும் மேலும் கடன்பட வேண்டிய நிலைக்குத் சென்றுள்ளது. இந்த நாட்டில் வாழவேண்டுமாகவிருந்தால் வெளிநாடுகளுக்குச் சென்றுதான் உழைக்க வேண்டும் என இளையவர்கள் தீர்மானித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒன்றினைத் தேடி செல்பவர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களை விட தற்போது அதிகரித்த வண்ணமுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யாவின் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்து வருகின்றன. ரஷ்யா தாக்குதலில் இருந்து உக்ரைன் தங்களை தற்காத்துக் கொள்ள பதிலடி கொடுத்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மாத்திரமல்ல உலக நாடுகளுக்கே பெரும் பாதிப்பு ஏற்படப்போகிறது என்கிறார்கள் அவதானிகள். இதன் உச்சக்கட்டமாக உலக சந்தையில் கச்சாய் எண்ணெயின் விலை 100 டொலருக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையிலும் எரிபொருளின் விலையில் எதிர்காலத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படப்போகின்றது. இந்தியாவில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதேவேளை தங்கத்தின் விலையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. 2019ம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 1.1 சதவீதத்துடன் நேரான வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, 2020ம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 16.3 சதவீத மறையான வளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவிக்கின்றது. 2020ம் ஆண்டின் 2வது காலாண்டில் நிலையான விலையில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 1,936,273 மில்லியனாக குறைந்து பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையின் பொருளாதாரத்தை வளர்ச்சி அடைய செய்ய வேண்டும் என்றால், மூடிய பொருளாதார கொள்கையை கைவிட வேண்டியது அத்தியாவசியமானது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.கணேஷமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தற்போது வெளிநாட்டு பணியாளர் ஊடான வருவாயே இலங்கை பொருளாதாரத்தின் பிரதான அங்கமாகியுள்ளது. கல்வி கற்காதோர் முதல், உயர் தரம் கற்றோர் வரை ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் எளிதாக தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு துறையாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைந்துள்ளப் படியால், பெரும்பாலானோரின் தெரிவு வெளிநாட்டு வேலை வாய்ப்பாகவே மாறி வருகின்றது. உள்நாட்டில் தொழில் புரிவோரும் அத்தொழில்கள் ஊடாக போதிய வருவாயை ஈட்ட முடியாத நிலையும், இலங்கையில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் விலைவாசி அதிகரிப்பிற்கு முகம் கொடுக்க முடியாத நிலையும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சமூகமாக இலங்கை சமூகம் மாற்றமாகி வருகிறது. இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பில் பெரும்பாலானோர் வீட்டுப் பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர். மத்தியக் கிழக்காசிய நாடுகளில் இலட்சக் கணக்காணோர் வீட்டு பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர். மத்திய கிழக்காசிய நாடுகளைத் தவிர உலகின் பலவேறு நாடுகளிலும் வீட்டுப் பணியாளர்களாக இலங்கையர் தொழில் புரிகின்றனர். இவ்வாறான வெளிநாட்டு வேலை வாய்ப்பின் ஊடாகவேதற்போதையஇலங்கையின்பிரதான பொருளாதாரம் ஈட்டப்பட்டு வந்த நிலையில் தான் இன்று வெளிநாடு செல்வோருக்கும் கொவிட் பரவல் நிலை காரணமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது வட கிழக்கு மக்களும் இலங்கையின் வருவாயை ஈட்ட போதுமான தொழில் வாய்ப்பு இல்லாமையாலும், இலங்கையில் செலவீனங்களுக்கு முகம் கொடுக்க முடியாமையினாலும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்பதும் கவனிக்கத்தக்கது. 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் எதிர்மறையான சதவீதத்தில் பதிவாகியுள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையின்படி, இக்காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி 1.5 சதவீதமாக பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2021ம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நிலையான விலையில் 2,497,489 மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. மறுபக்கத்தில் இலங்கை மத்திய வங்கி நாணயத்தாள்களை அச்சிடுவதும் பாரிய பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது.

அரசு சீனா மற்றும் இந்தியாவிடமிருந்து மேலும் மேலும் கடன்களை வாங்கிக்குவித்து வருகின்றது. உள்நாட்டு உற்பத்திக்குத் தேவையான திட்டங்களை முறையாக வகுப்பதை விட்டுவிட்டு, இன்று நாட்டுக்குத் தேவையான நெல் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றமை நாட்டில் பேசுபொருளாக மாறியுள்ளதுடன், நாட்டில் அரசியல் ரீதியான குழப்பங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஆளுங்கட்சிக்குள்ளேயே முரண்பாடுகள் எழத்தொடங்கியுள்ளது. அரசு விரைவில் பொதுத்தேர்தல் ஒன்றிற்கு முகங்கொடுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர். நாட்டில் என்ன நடக்கிறது என மக்களுக்கு பொறுப்புவாய்ந்தவர்கள் கூறவேண்டும் என எதிர்க்கட்சிகள் கோசமிடுகின்றனர். நாட்டு மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். சமையல் எரிவாயு பிரச்சினையால் நகர்ப்புற மக்கள் மாத்திரமல்ல இன்று கிராமப்புற மக்களும் அல்லல்படுகின்றனர்.

நாட்டில் அந்நிய நாடுகளின் வருகையால் வளங்கள் சூறையடிக்கப்பட்டு நாட்டின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுவதாக சுட்டிக்காடடப்படுகின்றது. இந்தியா, அமெரிக்கா, சீனா என இலங்கையின் வளங்கள் தாரைவார்க்கப்பட்டுள்ளது. ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. கடந்த கால அரசுகளால் தேவையற்ற முறையில் எந்தவித வருமானங்களும் இல்லாமல் பணம் வீண்விரயமாக்கப்பட்டுள்ளதாக குற்றுஞ்சாட்டப்படுகிறது. வடகிழக்கு சிறுபான்மை மக்களது பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. அன்று வடக்கு பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்றிருந்தது. ஆனால் வீழ்ச்சியை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது. நாட்டின் உற்பத்திக்குத் தேவையான விடயங்கள் மக்களை நோக்கிச் செல்லவில்லை. குறிப்பாக கிராமங்கள் இன்னமும் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையவில்லை. கைத்தொழில் துறையானது மந்தகதியில் செயற்படுத்தப்படுகிறது. வெறுமனே வெளிநாட்டு முதலீட்டாளர்களை மாத்திரம் நம்பிக்கொண்டிருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு பல வருடங்களாகிவிட்டது.

நாட்டின் பொருளாதாரத் துறையினை வளர்ச்சி பாதை நோக்கிக் கொண்டு செல்ல முடியாத அளவிற்கு சர்வதேச நாடுகளின் கடன்களால் இலங்கையின் கழுத்து நெறிக்கப்பட்டுள்ளது. ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பில், இலங்கையின் செயற்பாட்டில் திருப்தியற்றிருக்கிறது ஐரோப்பிய யூனியன். இன்றைய இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து உலக வங்கியிடம் ஆலோசனை நடத்த அரசு அணுகலாம் என்கிற செய்திகள் கடந்த காலங்களில் வெளிவந்தன. தோழில்நுட்ப ரீதியாக இலங்கை இன்னமும் வளர்ச்சியடையவேண்டிய தேவை இருக்கிறது. இன்னமும் கிராமப்புறப் பாடசாலைகள் தொழில்நுட்ப விடயத்தில் பின்தங்கியே இருக்கின்றன. பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் வேண்டும் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள். எனவே, இலங்கையை ஆட்சி செய்யும் அரசுகளால் இலங்கையின் பொருளாதாரக் கொள்கையினை தொடர்ந்தும் நிலையாக தக்கவைத்துக்கொள்ள முடியுமா என்கிற கேள்வியே எழுந்துள்ளது.

**சுழியோடி**



# சினிமா துளிகள்



## ராஷ்மிகாவுடன் திருமணமா? விஜய் தேவரகொண்டா விளக்கம்

தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகை ராஷ்மிகாவுடன் திருமணம் என்று பரவிய தகவலுக்கு நடிகர் விஜய் தேவரகொண்டா பதிலளித்துள்ளார்.



தெலுங்கில் திரையுலகில் பிரபல கதாநாயகியாக இருப்பவர் ராஷ்மிகா மந்தனா. தமிழில் கார்த்திக்கு ஜோடியாக சுல்தான் படத்தில் நடித்து பிரபலமானார். தெலுங்கில் நடித்த "டியர் காமரேட்" படம் தமிழிலும் வந்தது. அல்லு அர்ஜீன் நடிப்பில் தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் வெளியாகி வசூல் குவித்த புஷ்பா படத்திலும் கதாநாயகியாக வந்தார்.

ராஷ்மிகாவும், முன்னணி தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவும் காதலிப்பதாகவும், திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்து இருப்பதாகவும் ஏற்கனவே கிசுகிசுக்கள் வந்தன. இருவரும் ஜோடியாக சுற்றும் புகைப்படங்களும் வெளிவந்தன. இதனை ராஷ்மிகா மறுத்து இருந்தார். தனக்கு திருமணம் செய்து கொள்ளும் அளவுக்கு போதிய வயது இல்லை என்றும், திருமணத்தை பற்றி யோசிக்க நேரம் இல்லை என்றும் கூறியிருந்தார். இந்த நிலையில் ராஷ்மிகாவும், விஜய் தேவரகொண்டாவும் திருமணம் செய்துகொள்ள தயாராகி இருப்பதாகவும், இவர்கள் திருமணம் விரைவில் நடக்க உள்ளது என்றும் தெலுங்கு இணையதளங்களில் தீயாக தகவல் பரவியது. திருமண தேதியை ரகசியமாக வைத்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில் இதற்கு பதிலளிக்கும் வகையில் நடிகர் விஜய் தேவரகொண்டா சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார். அதில், வழக்கம் போல் கிசுகிசுக்கப்படுகிற செய்தி தான் இது. இந்த செய்தியை நாங்கள் ரசிக்கிறோம் என்று பதிவிட்டிருக்கிறார்.



## பிக்பாஸ் நிகழ்ச்சியில் களமிறங்கிய சிம்பு

ரசிகர்களால் கொண்டாடப்படும் பிக்பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க நடிகர் சிம்பு களம் இறங்கியிருக்கிறார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மிகவும் பிரபலமானது பிக்பாஸ் நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சிக்கென்று தனி ரசிகர்கள் பட்டாளமே நிரம்பியுள்ளது. இந்நிகழ்ச்சியை நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வருகிறார். இதுவரை தமிழில் ஐந்து சீசன்கள் முடிந்துள்ளன. தற்போது பிக்பாஸ் அல்டிமேட் என்ற புதிய நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இந்த பிக்பாஸ் அல்டிமேட் நேரடியாக ஓடிடி தளத்தில் 24 மணி நேரமும் ஒளிப்பரப்பாகிறது. இதனையும் நடிகர் கமல் தொகுத்து வழங்கி வந்தார்.

பல போட்டியாளர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், கடந்த 21-ஆம் திகதியன்று பிக் பாஸ் அல்டிமேட் நிகழ்ச்சியில் இருந்து வெளியேறுவதாக நடிகர் கமல்ஹாசன் அறிவித்திருந்தார். இதனை சற்றும் எதிர்ப்பார்க்காத பிக்பாஸ் ரசிகர்கள், அடுத்து இதனை தொகுத்து வழங்கப்போவது யார் என முணுமுணுத்து வந்தனர். இந்நிலையில் இதனை தொகுத்து வழங்க நடிகர் சிம்பு களம் இறங்கியுள்ளார். இதனை அதிகாரப்பூர்வமாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. சிம்பு இடம்பெற்றுள்ள புரோமோ வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவிவருகிறது.

## விஜயின் கோட்டையில் பறக்கும் அஜித்தின் கொடி!

தமிழ் சினிமாவில் எப்போதும் இரண்டு நடிகர்களுக்குள் போட்டி இருக்கும். அந்த போட்டி தான் படத்திற்கு படம் இவர்களின் வசூலை பல மடங்கு அதிகரிக்கின்றது. அந்த வகையில் தற்போது அஜித் - விஜய் ரசிகர்கள் சண்டை தான் உச்சம். இந்நிலையில் அஜித் நடிப்பில் வலிமை படம் திரைக்கு வரவுள்ளது. இப்படத்தின் மீதி ரசிகர்களுக்கு மிகப்பெரிய எதிர்ப்பார்ப்பு உள்ளது. மேலும், வலிமை படம் கேரளாவில் 250 திரையரங்கில் வெளிவருகிறதாம்.

அதோடு கேரளா என்பது விஜய்யின் கோட்டை என்றே சொல்லலாம். மோகன்லாலே அஞ்சும் அளவிற்கு விஜய் அங்கு மார்க்கெட் உள்ளவர். இந்த நிலையில் கேரளாவில் ஒரு திரையரங்கில் காலை 5 மணிக்காட்சி வலிமைக்கு 5 ஷோ ஓபன் பண்ண, அனைத்தும் ஹவுஸ்புல். அதோடு 6வது ஷோவும் புல் ஆகி வர, என்ன விஜய் கோட்டையில் அஜித் கொடி பறக்கிறதே என ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

## பிக்பாஸ் அல்டிமேட்டில் இருந்து திடீரென வெளியேறிய வனிதா!

பிக்பாஸ் அல்டிமேட் நிகழ்ச்சி கடந்த மாதம் பெரிய எதிர்ப்பார்ப்புகளுக்கு இடையில் தொடங்கியது. 14 போட்டியாளர்களுடன் தொடங்கிய இந்நிகழ்ச்சியில் சுரேஷ் சக்ரவர்த்தி, சுஜா வருணி, ஷாரிக், அபிநய் ஆகியோர் இதுவரை எலிமினேட் செய்யப்பட்டுள்ளனர். இடையில் வேறு கமல்ஹாசன் இனி பிக்பாஸ் அல்டிமேட் நிகழ்ச்சியை தொடரப்போவதில்லை. பிக்பாஸ் 6வது சீசனில் காணலாம் என்று கூறிவிட்டார். அவருக்கு பதிலாக சிம்பு நிகழ்ச்சியை தொகுத்து வழங்க இருப்பதாகவும் அதற்கான புரொமோ இன்று வெளியாகும் என்கின்றனர்.



தற்போது நிகழ்ச்சி பற்றிய இன்னொரு தகவல் என்னவென்றால் இதில் இருந்து வனிதா திடீரென வெளியேறிவிட்டதாக கூறப்படுகிறது. அவர் எதனால் நிகழ்ச்சியை விட்டு வெளியேறினார் என்ற காரணம் சரியாக தெரியவில்லை.

## வலிமை முன்பதிவில் மாத்திரம் இத்தனை கோடிகளை அள்ளியதா?

*அஜித்தின் வலிமை திரைப்படம் நாளை பிரமாண்டமாக வெளியாக இருக்கிறது, இதற்காக ரசிகர்கள் பல்வேறு கொண்டாட்டங்களில் ஈடுபட தயாராக உள்ளனர்.*

*இப்படத்திற்கு உள்ள எதிர்பார்ப்பு குறித்து அனைவருக்கும் தெரிந்த விஷயம் வலிமை படத்தின் முன்பதிவிலே ரசிகர்கள் அனைவரும் வெறித்தனம் காட்டி வருகின்றனர்.*

*அதன்படி வலிமை திரைப்படம் முன்பதிவில் மாஸ்டர் படத்தை முந்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அந்த வகையில் முதல் நாள் முன்பதிவை வைத்து பார்க்கும் போது வலிமை ரூ.21.60 கோடி வசூல் செய்துள்ளதாம்.*

*மேலும் மாஸ்டர் படத்தின் முதல் நாள் முன்பதிவின் வசூல் ரூ.17 கோடி வரை செய்ததாம். இதை வைத்து பார்க்கும் போது வலிமை படத்தின் வசூல் இதுவரை வெளியான அனைத்து பட சாதனைகளையும் முறியடிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.*



## புதிய சாதனை படைத்த தனுஷ் பாடல்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான தனுஷின் பாடல் புதிய சாதனை படைத்துள்ளதை ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

துள்ளுவதோ இளமை படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் நடிகர் தனுஷ். அதன்பின் காதல் கொண்டேன், திருடா திருடி, புதுப்பேட்டை, பொல்லாதவன், ஆடுகளம் போன்ற பல படங்களில் நடித்து தனக்கென தனி ரசிகர்கள் பட்டாளத்தையே உருவாக்கிக் கொண்டார். 2015-இல் இவர் நடித்த "மாரி" திரைப்படம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

இயக்குனர் பாலாஜி மோகன் இயக்கிய இந்த திரைப்படத்தில் தனுஷின் கதாப்பாத்திரத்திற்கும் அவருடைய காஸ்டியூமிற்கும் இன்றளவும் ரசிகர்கள் குவிந்திருக்கின்றனர். இப்படத்தில் அனிருத் இசையமைத்த அனைத்து பாடல்களும் ஹிட் அடித்தது. இந்நிலையில் மாரி படத்தில் இடம் பெற்ற "தரலோக்கல்" என்ற பாடல் 100 மில்லியன் பார்வையாளர்களை கடந்து புதிய சாதனை படைத்துள்ளது.



# 13வது திருத்தச்சட்டமும் முருங்கைமரம் ஏறும் வேதாளங்களும்



**கடந்தவார தொடர்ச்சி...**

இந்த விடயங்களைக் கொண்டுசெல்ல நீங்கள் யாருடன் பேசப்போகிறீர்கள் என நான் கேட்கின்றேன். நீங்கள் அமெரிக்காவுடன் பேசினாலும் இந்தியாவிடம் தான் பேசவேண்டும். ஐரோப்பிய யூனியனுடன் பேசினாலும் இந்தியாவிடம் தான் பேசவேண்டும். நீங்கள் இந்தியாவை விடுத்து வேறு எவருடனும் பேசி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது. இதுதான் உண்மை.

பூகோள அரசியல் குறித்துப் பேசும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கு இந்த விடயங்கள் தெரியாது என்பதல்ல. ஆனால் தன்னுடைய கட்சிக்கு ஒரு வேலை வேண்டும். மணிவண்ணன் வெளியேறாமல் இருக்க தனது கட்சிக்கு இப்போது ஒரு வேலை வேண்டும். அதற்கு விடயம் புரியாத நான்கு பேரை வைத்துக்கொண்டு சந்தை சந்தையாக நடந்து. கடை கடையாக நடந்து இந்த வேலைகள் செய்யப்படுகின்றது. ஆனால் உண்மை என்னவென்றால் தமிழ் மக்களை நடுத்தெருவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் செய்கிறார். அவர் தெரியாமல் செய்கிறார் என நான் கூறமாட்டேன் தெரிந்தே செய்கிறார். இவர்களுக்கு காவடி தூக்குவதற்கு வெளிநாட்டிலும் சிலர் இருக்கிறார்கள். நாங்கள் இப்போது முச்சந்தியில் நிற்கிறோம். எல்லாமே பறிபோய்க்கொண்டிருக்கிறது. வெளியில் உள்ளவர்களுக்கு அது புரியுமோ புரியாதோ எனக்குத் தெரியாது. அங்கு உள்ள சிலரும் இவர்களுக்குச் சாதகமாக இருக்கிறார்கள் அல்லது இவர்களும் அவர்களை வைத்துக்கொண்டு நடத்துகின்ற சில வேலைகளும் நடக்கின்றது. நாங்கள் இந்தியாவை மீண்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான. அவர்கள் இந்தப் பிரச்சினையை கையாள்வதற்கான ஒரு களத்தை. இந்த அறிக்கையை நாங்கள் இந்தியாவுக்கு கொடுத்ததன் ஊடாக ஆரம்பித்தருக்கின்றோம். விரைவாக நாங்கள் பேசுவதற்கு டெல்லி செல்வோம். நாங்கள் டெல்லிக்கு போவோம் என்பதை. இந்த அறிக்கையினை சமர்ப்பித்தபோது தூதுவரும் எங்களிடம் கூறியிருக்கின்றார். நீங்கள் டெல்லிக்கு வரவேண்டும் இந்தப் பிரச்சினைகளைப் பற்றி அங்கு பேசவேண்டும் என்கிற விடயங்கள் கூறப்பட்டிருக்கிறது. ஒருதடவை டெல்லிக்குப் போனவுடன் நாளைக்குப் பிரச்சினைகள் முடியும் என நாங்கள் கூறமாட்டோம். அது ஒரு செயற்பாடாக இருக்கலாம்.

ஆனால் நிச்சயமாக அவ்வாறான பேச்சுவார்த்தைகளும் நடவடிக்கைகளும் இலங்கை செய்ய நினைக்கிற பல விடயங்களுக்குத் தடை போடும் அல்லது தாங்கள் விரும்பியவாறு செய்ய முடியாத சூழலை உருவாக்கும். ஆகவே கூட்டாக நாங்கள் இந்த விடயங்களைச் செய்கிறபோது, அது தமிழ் மக்கள் கூட்டாக ஒரு கோரிக்கையினை வைக்கின்றபோது, அது இந்தியாவுக்கும் ஒரு பலத்தினைக் கொடுக்கும். அதனைவிடுத்து நாங்கள் இந்தியாவினுடைய ஏஜெண்டுகள், காவடிகள் எனப் பேசிக்கொண்டு, எதுவுமே இல்லாமல் குறைந்தபட்சம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அவர்கள் கூறுகிற அவர்கள் முன்வைத்திருக்கிற ஒரு கொள்கைத்திட்டமான இரு தேசம் ஒரு நாடு என்கிற திட்டத்தை நடைமுறைப்படுத்த என்ன செய்திருக்கிறீர்கள். நாங்கள் ஒரு செயற்றிட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம். இதற்குள் பல பிரச்சினைகள் இருக்கிறது. அது எங்கள் எல்லோரிடத்திலும் தங்கியிருக்கிறது. இந்தியா என்ன செய்யப்போகின்றது நாங்கள் என்ன செய்யப்போகின்றோம். ஆனால் நாங்கள் தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்த உரிமைகளை பெற்றுக்கொள்கின்ற வகையில் இதனைப் பயன்படுத்தவேண்டும் என நினைக்கின்றோம். இல்லை நாங்கள் செய்வது தவறு என்று சவப்பெட்டிக்குள் வைப்பவர்கள் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதையாவது தெளிவாகக் கூறவேண்டும். யாருக்காவது கூறியிருக்கிறார்களா நாங்கள் என்ன செய்யப்போகின்றோம் என்று. அமெரிக்காவுடன் பேசப்போகின்றீர்களா? அல்லது இலங்கை அரசுடன் பேசப்போகின்றீர்களா? ஐரோப்பிய யூனியனுடன் பேசப்போகின்றீர்களா?, ஐ.நாவுடன் பேசப்போகிறீர்களா?, இந்தியாவுடனா? அல்லது யாருடனும் பேச்சுவார்த்தை இல்லை என்று தமிழ் மக்களைத் திரட்டி போராட்டம் நடத்தி, நாங்கள் அனைத்தையும் செய்து முடிப்போம் எனக் கூறப்போகிறீர்களா?. ஆகக்குறைந்தது மாலைதீவுடனாவது பேசப்போகிறீர்களா என சித்தார்த்தன் கேட்கிறார்.

இவர்கள் உண்மையாகவே தமிழ் மக்களை சுடலைக்கு அனுப்பாமல் குறைந்தபட்சம் தமிழ் மக்கள் அவர்களுக்கு இப்பொழுது இருக்கக்கூடியவற்றையாவது பெற்றுக்கொண்டு தற்காலிகமாகவேனும் ஒரு நிரந்தரத் தீர்வு கிட்டும் வரையில் இதனைத் தக்கவைப்பதற்கு உண்டான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ளவேண்டும். அதனைத்தான் இந்த ஆறு கட்சிகளும் செய்து வருகின்றன. இந்தியா எமக்கு அருகில் இருக்கக்கூடிய நாடு. தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்தியா தேவை. இந்தியா எங்களது நட்பு சக்தி. ஒரு கலாச்சார ரீதியாக தொடர்பினைக் கொண்டவர்கள். 8 கோடி தமிழ் மக்கள் வாழக்கூடியதொரு நாடு. ஆகவே அவர்களைக் கைவிட்டு வேறு யாரிடமும் மண்டியிட்டு எதுவுமே செய்யக்கூடிய சூழல் பயன்தராது. எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் கூட டெல்லி போய்விட்டுத்தான் இலங்கை வருவார். ஆகவே நாங்கள் பார்வையாளர்களாக அல்லாமல் செயற்பாட்டு நடவடிக்கையாளர்களாக இருக்க விரும்புகின்றோம். அந்த செயற்படும் நடவடிக்கையின் ஆரம்பம் தான் இது. இந்த முயற்சி தொடரும். வெறுமனே இன்றுடன் முடிவடைந்துவிடாது.

பொதுக்கூட்டமொன்றினையும்நாங்கள் ஏற்பாடு செய்து வருகின்றோம். சிவில் சமூகத்தினரும் எங்களுடன் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தமிழ் மக்களை தேர்தலைப் புறக்கணிக்கச் சொன்னார். இதனையே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் செய்தது. 13 வேண்டாம் என்றார் ஜனாதிபதி கோட்டாபய. இன்று கஜேந்திரகுமார் அணியினரும் வேண்டாம் தமிழ் மக்களை புறக்கணிக்கச் சொல்கின்றனர். ஆக ஜனாதிபதியின் நிலைப்பாட்டினை செயற்பாடுகளை அடியொற்றி வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினரின் செயற்பாடுகள் நடக்கின்றது. ஜனாதிபதி கோட்டாபய அவர்களது வாக்குறுதிகளை இவர்கள் நிறைவேற்றுகின்றனர். இது யதார்த்தபூர்வமான உண்மை என ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

எங்களுடைய தமிழ் மக்கள் சார்ந்த எந்தவொரு உடன்படிக்கையும் உலக நாட்டிலே யாரும் செய்யவில்லை. இந்தியா தான் செய்தது. இந்தியா ஒரு காலத்திலே எங்களுடைய இனப்பிரச்சனையிலே முழுமையாக தன்னை ஈடுபடுத்தியது. அது குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியின் பின்னர் ஒதுங்கியிருந்தது. இன்று எங்களது தலைவர்கள் சொன்னது போன்று இந்தியாவை நாங்கள் இந்த அரசாங்கம் உலக நாடுகளை குரல் கொடுப்பதற்கான நிகழ்ச்சி நிரலை நிறுத்துவதற்கான ஒரு செயற்பாட்டை செய்கின்றது. அவர்கள் சொல்லுவார்கள் இதுவொரு உள்ளூர் பிரச்சனை இதனை நாங்கள் பார்த்துக்கொள்ளுகின்றோம் நீங்கள் பார்க்கத்தேவையில்லை என்று ஏனைய நாடுகளிடம் சொல்லுகின்ற இலங்கை அரசு இந்தியாவை பார்த்து சொல்லமுடியாது. ஏனென்றால் அதனுடைய கையெழுத்து இடப்பட்ட அரசியல் சாசனத்திலே எங்களுடைய தமிழ் மொழி ஒரு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகபூர்வமான மொழியாக இதன் மூலம் கிடைத்தது. அடுத்தது இப்படியான ஒரு அடிப்படை விடயங்களை இந்தியா கையாள வேண்டும் இந்தியாவினுடைய கடன் தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே இந்தியாவையும் வெளியில் விட்டால் இலங்கை அரசாங்கம் சொல்லும் நாங்கள் எங்களது விடயங்களை பார்த்துக்கொள்ளுகின்றோம் ஆகவே நீங்கள் அனைவரும் உங்களது கருத்துக்களை சொல்லிவிட்டு போங்கள் வெறும் வர்த்தக உடன்படிக்கையில் ஈடுபடுங்கள் என்று சொல்லிவிட்டு போகின்ற ஒரு விடயத்தை இலங்கை அரசாங்கம் நிச்சயமாக சொல்லும். ஆகவே இந்தியாவினடைய கரங்கள் தொடர்ந்து உங்களுடைய பக்கம் இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படை தான் இந்த கையெழுத்து போட்ட ஒரு விடயம். சரி கஜேந்திரகுமார் சொன்னது போன்று இந்தியா இந்த விடயத்தை நாங்கள் நிறுத்துவோம் என்று சொல்லுவோம் அவர்கள் சொன்னதைப்போன்று இந்தியா வந்து தலையிட வேண்டாம் என்று சொன்னால் அடுத்தது யாரை நாங்கள் கோர வேண்டும் ஐநா சபையை ஐநா சபையிலே இன்று சொல்லப்பட்ட விடயம் இந்தியாவை தொடர்ச்சியாக கையாள வேண்டும் என்பதற்காக 13 ஆம் திருத்த சட்டம் தீர்மானமாக எடுக்கப்பட்டிருக்கின்றது. அதிலே பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று தீர்மானமாக்கப்பட்டிருக்கின்றது. இப்படி முக்கியமான விடயங்களை ஐநா சபை எங்களுடைய சார்பாக இன்று பேசியிருக்கின்றது. அதை நாங்கள் ஒதுக்கி தள்ளிவிட்டு என்ன செய்யப்போகின்றோம். எனவே இந்திய அரசாங்கம் சுரேஸ் பிரேமச்சந்திரன் சொன்னதைப்போல இந்த கரையோர பிரதேசங்கள் எங்களுடைய மீனவ தமிழ் சமூகம் இந்தியாவின் பாதுகாப்பு அரணாக இன்றும் இருக்கின்றது.

இந்தியாவிற்கு ஒரு கடமை இருக்கின்றது. எங்களுடைய பிரச்சனையிலே உள்வாங்கப்படுகின்ற ஒரு சூழலை உருவாக்க வேண்டும். தமிழ்நாடு இன்று எங்களுக்கு பெரியதொரு சக்தியாக இருக்கின்றது. ஆகவே தமிழ் நாட்டை நாங்கள் கையாளுகின்ற பொழுது ஒரு கட்டத்திலே இந்த ஐநா சபையிலே தமிழ் நாடு கொந்தளித்ததன் அடிப்படையிலே எங்களது சார்பாக இந்தியா ஆதரித்து வாக்களித்தது. எனவே தமிழ் நாட்டை நாங்கள் கைவிட முடியாது. பிரச்சனைகள் இருக்கும் இல்லையென்று இல்லை ஆனால் தமிழ் நாட்டை நாங்கள் கைவிட முடியாது. ஒட்டுமொத்தமாக இந்தியாவை நாங்கள் கைவிட முடியாது என்பது தான் இந்த பிரதான கடிதத்தின் நோக்கமாக இருக்குமே ஒழிய தீர்மானமாக ஒரு காலமும் ஏற்றுக்கொள்ளவில்லை. முதல் முதலில் மாகாணசபை தேர்தல் வருகின்ற பொழுது நாங்கள் எல்லாம் கலந்துகொள்ளவில்லை. சுரேஸ் பிரேமச்சந்திரன் அதாவது ஈ.பி.ஆர்.எல்.எப் கலந்துகொண்டது. ஆனால் தற்பொழுது இருக்கின்ற சூழல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் நாங்கள் என்ன செய்ய வேண்டும் அதுதான் கேள்வி. இதை ஏற்றுக்கொள்வது ஏற்றுக்கொள்ளாமை என்பது வேறு. உலக நாடுகள் இந்தியாவின் ஊடாகத்தான் எங்களுடைய பிரச்சனைகளில் தலையெடுக்கும். இந்தியாவை தொடர்ந்து இந்த விடயத்தை கையாளுவதற்கான ஒரு வசதியை பெறுவதற்கான சந்தர்ப்பம் தான் இந்த கையெழுத்து போட்டுக்கொடுத்த விடயமே தவிர இது தீர்வு இல்லை என்பது எல்லாருக்கும் தெரியும்.

**மாவை சேனாதிராஜா**

இன்று இருக்கின்ற அரசியலில் ஒரு அங்கமாக இடம் பிடித்திருக்கின்ற 13 ஆம் திருத்த சட்டம் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு புதிய அரசியலமைப்பிற்கு ஊடாகவும் தமிழ் தேசிய கட்சி என்ற பெயரில் பாரதப் பிரதமர் மோடி அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்ற கடிதத்தின் ஊடாக மக்களை மோசடி செய்ய நினைக்கின்றார்கள் என்று உண்மைக்கு மாறான செய்தி 13 ஆம் திருத்த சட்டம் அரசியல் தீர்வு என்ற கருத்தை முன்வைத்து நாங்கள் செயல்படுகின்றோம் புதிய அரசியலமைப்பில் அது வர நாங்கள் வலி அமைக்கின்றோம் என்று எங்களுடைய தரப்பிற்கு எதிராக தேசியத்திற்கு எதிராக பிரசாரங்கள் எடுக்கப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். பத்திரிகையில் கூட நாங்கள் எங்களுடைய இலக்கை அடைவதற்கு எந்த அரசியலமைப்பைப் பற்றி குறிப்பிட்டிருக்கின்றோமோ அதற்கு மாறாக 13 ஆம் திருத்த சட்டத்தை நாங்கள் தீர்வாக கோருகின்றோம். பாராதப் பிரதமர் மோடிக்கு நாங்கள் கடிதம் அனுப்பியிருக்கின்றோம் என்று சொல்லுகின்ற செய்தி முழுக்க முழுக்க உண்மைக்கு மாறானது. இங்கு எங்களிடம் இருக்கின்றது நாங்கள் 6 கட்சிகள் திரு சம்மந்தன் அவர்கள் உட்பட 7 பேரினது கையொப்பங்களுடன் நாங்கள் வைத்திருக்கின்ற கடிதம் நாங்கள் அந்த கடிதத்தை சமர்ப்பித்த பொழுது இந்திய தூதுவர் இதை நாங்கள் பகீரங்கமாக முன்வைப்பதா அல்லது எங்களுக்கு மட்டும் தருகின்றீர்களா என்ற ஒரு கேள்வியை இறுதியிலே கேட்டார். உங்களுக்கு மட்டும் நாங்கள் தருகின்ற செய்தி என்று கூறினோம்.

ஆகவே அதில் உண்மைக்கு நாங்கள் இறுதிவரை செய்த திருத்தங்கள் உட்பட்ட செய்திகள் அனைத்தும் பத்திரிகைகளிலே வெளிவரவில்லை. அதை வைத்துக்கொண்டு அல்லது அதை எங்களுடைய கடிதத்தில் எந்தவொரு இடத்திலாவது 13 ஆம் திருத்த சட்டம் எங்களுடைய இனப்பிரச்சனைக்கு தீர்வு என்ற ஒரு வார்த்தை கூட இல்லாத உண்மைக்கு மாறாக இங்கே இருக்கின்றது. நாங்கள் அதை வெளியிடவில்லையே தவிர அதனுடைய உருவாக்கத்தில் வந்திருந்த செய்திகள் தான் அநேகமாக வெளியிலே கொண்டுவரப்பட்டன. இறுதியில் நாங்கள் கையொப்பம் வைத்த பொழுது இருந்த நிலைமை முழுமையாக உங்களுக்கு கிடைத்திருக்காது என்று தான் நினைக்கின்றேன். நாங்கள் 13 ஆம் திருத்த சட்டம் இந்தியாவினுடைய வேண்டுகோளின் அடிப்படையில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் முழுமையாக ஒப்பந்தத்தை பிரதிபலிக்காமலேயே கொண்டுவரப்பட்ட ஒரு திருத்த சட்டம் என்பதை நாங்கள் நீதியமைச்சர் திரு. விக்னேஸ்வரன் அவர்கள் கூறியதைப்போன்று திரு.சிறிகாந்தா குறிப்பிட்டதைப்போல அந்த ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் மீது கையெழுத்து வைக்கப்பட்டதுடன் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் திரு . சம்மந்தன் அவர்கள் ரஜீவ் காந்தி அவர்களுக்கு எழுதிய கடிதம் எங்களிடம் இருக்கின்றது. அப்பொழுது எங்களுக்கு நன்றாக தெரியும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த 13 ஆம் திருத்த சட்டம் எங்களுடைய இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வாக இல்லை. நாங்கள் அதை அப்படி தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஒற்றையாட்சியில் அதிகாரத்தை பரவலாக்கலாமே தவிர அதிகாரத்தை பகிர முடியாது என்று தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது. இப்பொழுது கோட்டபாய ராஜபக்ச அவர்கள் இலங்கையிலே ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கின்றார்.

11ஆம் பக்கம் பார்க்க...

06ஆம் பக்க தொடர்ச்சி...

ஒப்பந்தத்தை முதலில் மீறியது இலங்கைதான். தமிழர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை" என்றார் இந்தியத் தூதர் தீட்சித் (Sunday Leader:Sep 4 1994, Tamil hopes not met.Dixit blames the Singalese for breaking of India -Lanka accord). இந்தியா தனது பிராந்திய நலன்களுக்காக ஜே. ஆர். ஜெயவர்த்தனேவும் ராஜபக்க்ஷக்களும் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்துக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? இது போன்ற தொடர்ச்சியான நம்பிக்கைத் துரோகங்களின் முடிவில் தான் "இந்தியாவை நம்பிச் செயற்பட்டால் முதலையின் முதுகில் பயணித்த குரங்கின் கதியாகி விடும்" என்று பிரபாகரன் கூறியதாகத் தெரிகிறது. இது இந்தியா பற்றிய அவருடைய, போராளிகளினுடைய கசப்பானஅனுபவங்களின் வெளிப்பாடாக நாம் புரிந்துகொள்ள வேண்டும். ராஜீவ் காந்தியைக் கொல்ல வந்த சிங்களவரின் நம்பிக்கையைப் பெறுவதில் காட்டிய அக்கறையில் நான்கில் ஒரு பகுதியைக்கூட நண்பர்களாய்க் கருதப்பட்ட தமிழர்கள்மீது இந்தியா காட்டத் தயாராயில்லை. முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் தமிழர்களை முழுமையாக அழிப்பதற்குத் துணைபுரிவதன் மூலம் சிங்களவர்களின் நேசத்துக்குரியோராக மாறிவிடலாம் என்று இந்திய ஆட்சியாளர்கள் நினைத்து விட்டிருப்பார்கள் போலிருக்கிறது. இப்போதும்கூட தன்னுடைய புவியிட முக்கியத்துவத்துக்கும் பாதுகாப்புக்கும் ஈழத் தமிழரின் ஆதரவு முக்கியமென்பதையும் ஈழத் தமிழர் வாழும் புவிப் பரப்பும் கடற்பரப்பும் இந்தியாவுக்குப் பாதுகாப்பு என்பதையும் இந்தியத் தலைமைகள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

ஒப்பந்தத்தை மீறியதாகக் காரணம் காட்டிப் புலிகளை அழித்தாயிற்று. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இலங்கை அரசு அதை நடைமுறைப்படுத்தாததற்காக அதன் மீது இந்தியா என்ன நடவடிக்கை எடுத்தது? இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா 2012, ஜனவரியில் மேற்கொண்ட இலங்கைப் பயணத்தின்போது இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் காணப்பட்டுள்ள 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த ராஜபக்ஷ ஒத்துக்கொண்டுள்ளார் என்று செய்தியாளர்களிடம் கூறிவிட்டு அந்தப் பக்கம் நகரவில்லை. "அப்படியெல்லாம் நான் செய்துவிட முடியாது. நாடாளுமன்ற ஒப்புதலோடுதான்எதையும்நடைமுறைப்படுத்த முடியும்" என்று அவருக்குப் பதிலடி கொடுத்தார் ராஜபக்ஷ.

இலங்கைக்குச் சென்ற எஸ். எம். கிருஷ்ணா காவிரி நதிநீர் ஆணையத்தின் ஒப்புதலை ஏற்காமல் தமிழகத்துக்குத் தண்ணீர் தரமாட்டேன் என்று மறுத்த அப்போதைய கர்நாடக முதல்வர். அதனால்தான் ராஜபக்ஷ அமைத்த இலங்கை அரசுக்குச் சாதகமான 'கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மீள் இணக்க விசாரணைக் குழுவின்' அறிக்கையை அவரால் வரவேற்க முடிகிறது. புலிகள் அழிக்கப்பட்ட பின் இலங்கை அளித்த 13ஆம் சட்டத் திருத்தத்துக்கும் அதற்கு அப்பாலும் செல்வது என்ற பிரதான வாக்குறுதியைச் செயல்படுத்தாதது ஏன் என எஸ். எம். கிருஷ்ணா கேள்வி எழுப்பவில்லை. அப்பால் செல்வது என்பதைவிடப் பலகாத தொலைவு பின்னோக்கிச் செல்வதே தனது நோக்கம் என ராஜபக்ஷ தன் மறுப்பு அறிக்கையின் மூலம் உறுதிப் படுத்தியிருக்கிறார்.

யதீந்திரா குறிப்பிடுவதுபோல் இந்திய சரணாகதி அரசியல் அல்ல தீர்வு. இந்திய எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்காமல் தீர்வு இல்லை. ஆனால் இந்தியாவை எதிர்கொள்ள ஈழப் பிரதேசத்துக்குள்ளேயே ஓர் ஐக்கிய முன்னணி அமைத்துக் கொள்வது இன்றியமையாதது என்பதைப் புலிகள் உணரவில்லை. இலங்கை இனவெறி அரசை எதிர்கொள்ள முதலில் இந்த ஐக்கிய முன்னணித் தந்திரத்தைப் புலிகள் கையிலெடுத்திருக்க வேண்டும். புலிகள் இதில் அக்கறை செலுத்தவில்லை. தாமே ஏகப் பிரதிநிதி என்ற கோட்பாட்டை முன்வைத்துச் செயற்பட்டதால் எதிரிக்குப் பிரித்தாளும் வாய்ப்பைக் கொடுத்தார்கள். "விடுதலைப்புலிகள் 1991இல் மேற்கொண்டதொரு வரலாற்றுத் தவறு (ராஜீவ் கொலை) இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நிரந்தரமான பிரி கோடாக அமைந்தது" என யதீந்திரா குறிப்பிடுகிறார். அது வரலாற்றுத் தவறு. அது விடுதலைப் போருக்குப் பின்புலமாக இருந்த தமிழக மக்களைத் தனிமைப்படுத்திவிட்டது. தேசப்பற்று என்று ஏற்றப்பட்டிருக்கும் மக்களின் உளவியலை இந்தியா தனக்கு நிரந்தரப் பிரிகோடாய் மாற்றிவிட்டது. ஆனால் ராஜீவ் கொலை தொடர்பான விசயத்தை வேறொரு கோணத்தில் பார்க்கிறார் மு. புஷ்பராஜன், "உண்மையில் ராஜீவ் காந்தி கொலைக்கு இந்தியா தனது வல்லாதிக்கக் கனவுகளின் பின்னணியிலேயே அழுத்தம் கொடுத்தது. ராஜீவ் காந்தி கொலை, விடுதலைப் புலிகளை அழிப்பதற்குத் தானாக மடியில் விழுந்த கனி. அக்கொலை நடைபெற்றிருக்காவிடினும் இந்தியா அவர்களை அழித்தே இருக்கும் வேறு காரணங்களைத் தேடியிருக்கும்".

10ஆம் பக்க தொடர்ச்சி...

ஆவர் தனது தேர்தல் கால அறிக்கையிலும் சரி பாராளுமன்றத்திலே கொள்கைப்பிரகடனத்தை வெளியிட்ட பொழுதும் சரி அவர் ஒரு பௌத்த சிங்கள பேரான்மைத்துவ அல்லது பெரும்பான்மைத்துவ ஆட்சியை இந்த அரசியலமைப்பினூடாக கொண்டுவரப்போகின்றேன் என ஜனாதிபதி முறையை இன்னும் பலப்படுத்த நான் ஒரு அரசியலமைப்பைகொண்டுவரப்போகின்றேன் என அறிவித்ததை நாங்கள் நினைவுபடுத்த வேண்டும். அதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதைப்போன்று இங்கு குறிப்பிட்டதைப்போல எங்களுடைய கடிதங்களிலே தெளிவாக 13 ஆம் திருத்த சட்டம் 1987 ஆம் ஆண்டு காலத்திலும் சரி அல்லது இன்று வரையிலும் சரி எங்களிடம் அந்த ஆவணங்கள் இருக்கின்றன. நாங்கள் 13 ஆம் திருத்த சட்டம் எங்களுடைய இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வாகும் என்று எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு வார்த்தை கூட கூறவில்லை என்பதை நாங்கள் தெளிவாக குறிப்பிடுகின்றோம். இப்பொழுதும் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் இந்த நாட்டுக்கு ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டுவரப்போகின்றேன் என்று ஒரு ஆணைக்குழுவைநியமித்திருக்கின்றார். அந்த ஆணைக்குழுவிற்கு எங்களால் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்து கட்சிகளும் கிட்டத்தட்ட அடிப்படையில் ஒரே கருத்து தான். நாங்கள் ஒரு சமஷ்டி அடிப்படையில் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் உள்ளக செயல்முறையின் அடிப்படையில் இந்த நாட்டினுடைய பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை எங்களுடைய மக்கள் எங்களுக்கு தொடர்ச்சியாக தந்த ஆணையின்படி நாங்கள் இன்றும் அந்த வரவிருக்கும் அரசியல் அமைப்புக்கு எங்களுடைய பிரேரணையாக கொண்டிருக்கும் என்பதை தான் அநேகமாக அனைத்து கட்சிகளும் குறிப்பாக இங்கிருக்கின்ற கட்சிகளும் நாங்கள் கூறியிருக்கின்றோம்.

அதை நான் உங்களுக்கு சுருக்கமாக மூன்று நான்கு வரிகள் இருக்கின்றன ஆதாரப்பூர்வமாக இன்று நாங்கள் கையெழுத்திட்ட அரசியல் சந்தர்ப்பத்திலே அந்த அறிக்கையிலே குறிப்பிட்டதன் அர்த்தம் என்ன அல்லது ஒற்றையாட்சி பற்றிலோ குறிப்பிட்டிருக்கின்றோமா முழுமையான ஒரு சமஷ்டி கட்டமைப்பில் உள்ளக செயல்முறை அடிப்படையில் செயல்முறை தத்துவத்தின் அடிப்படையில் எங்களுக்கு இந்த நாட்டிலே ஒரு அரசியலமைப்பு தேவை என்பதை இப்பொழுதும் நாங்கள் அனைவரும் இந்திய பிரதமருக்கும் குறிப்பிட்டிருக்கின்றோம் இலங்கை அரசிற்கும் குறிப்பிட்டிருக்கின்றோம். புதிய அரசியலமைப்பை உருவாக்குகின்ற ஆணைக்குழுவிடமும்குறிப்பிட்டிருக்கின்றோம் ஏன் நாங்கள் இந்தியாவை கோருகின்றோம் அதற்கு இங்கு பதில் சொல்லுகின்றார்கள். எங்களுக்கு அரசியலமைப்பு ரீதியாகவேனும் சர்வதேச உடன்பாடுகளுக்கு ஊடாகவேனும் இந்தியாவும் இலங்கையும் செய்துகொண்ட உடன்படிக்கை இந்திய இலங்கை உடன்படிக்கை அதுதான் இந்த கடிதத்தின் தலைப்பும் கூட 13 ஆம் திருத்த சட்டம் நிறைவேற்றுவதல்ல எங்களது தலைப்பு செய்தி.

02ஆம் பக்க தொடர்ச்சி...

ஒற்றுமையின் அவசியத்தை உணராதவரை நாம் எதனையும் சாதிக்க முடியாது மாறாக அரச தரப்புக்கு வாய்ப்புக்களையே ஏற்படுத்திக்கொடுக்க முடியும். இனியாவது ஒற்றுமையை எவ்வாறு நடைமுறைச் சாத்தியப்படுத்துவது என்பதையும் தமிழ்த்தரப்பு சிந்திக்கவேண்டும்.

கிழக்கினைப் பொறுத்தவரையில் முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். இவர்கள் தமிழ் பேசும் மக்களாக இருக்கின்றபோதிலும் தமிழ்த் தரப்புடன் இணைந்து செயற்படாதவர்களாகவே இருக்கின்றனர். எதிர்வரும் காலங்களில் தமிழ் - முஸ்லீம் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இருதரப்பு அரசியல்வாதிகளும் நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் இன்று கிழக்கு ஆக்கிரமிப்பின் உச்சத்தில் இருக்கின்ற ஒரு மாகாணம். முஸ்லீம் மக்கள் இன்று தமக்கான தனி அலகினைக் கோருகின்ற நிலையும் இருக்கின்றது. அது தவறொன்றும் இல்லை. எனினும் இருதரப்புக்களுக்கிடையிலான ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் அவசியம்.

சர்வதேச நாடுகளைப் பொறுத்தவரை பயங்கரவாதமற்ற நாடாக இலங்கை திகழவேண்டும் என்பதில் குறியாக இருந்தார்கள். உரிமைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தினார்கள். அதுமட்டுமன்றி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் கீழ் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இயங்கக்கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தார்கள். இறுதி யுத்தம் மாவிலாறில் ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் முடிவுற்றது. குறிப்பாக இந்தியா, சீனா, அமெரிக்கா இந்த மூன்று நாடுகளும் இலங்கையின் நலனில் அக்கறையுள்ளவர்களாகக் காட்டி, தமது தேவைக்காக இலங்கைக்கு கடன்களை, ஆயுத தளபாட உதவிகளை, மருந்துப் பொருட்களை வழங்கி, இலங்கையின் அரசியலில் தமக்கான ஒரு நிரந்த இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளார்கள் என்பதுதான் இன்றைய அரசியலின் யதார்த்தம். இந்தப் பூகோள சதிவலைப்பின்னலுக்கு மத்தியில் தமிழினம் எவ்வாறு தமக்கானத் தீர்வினை சர்வதேச நீதிமன்றம் அல்லது ஐ.நாவின் ஊடாகப் பெறப்போகின்றது என்பது தான் இன்றுள்ள மிகப்பெரிய கேள்வி.

# வாழ்க்கை தத்துவங்கள்

**வாழ்க்கை என்பது ஒரு ரயில் பயணம் போலதான்... நிறைய நிறுத்தங்கள்..! நிறைய வழித் தடம் மாற்றங்கள்..! விதவிதமான மனிதர்களுடன் பயணங்கள்...! சில நேரம் விபத்துக்களும் கூட..! அனைத்தையும் ரசித்துக் கொண்டே, பயணிக்க கற்றுக் கொள்வோம்... வாழ்விலும் கூட, அழகாய் அமையட்டும் இந்த வாழ்க்கை பயணம்...!**

**கோபத்தில் கண்டதை தூக்கிப் போடுவதைவிட, அந்த கோபத்தையே தூக்கிப் போடுங்கள்.. வாழ்க்கை இன்னும் சிறப்பாகும்!**

**வாழ்நாளெல்லாம் அடிமையாக தொட்டிக்குள் வாழ்வதைவிட பிடிபட்ட அன்றே சட்டியில் குழம்பாக கொதிப்பது மேல்**

**மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது, தடைகளற்ற வாழ்க்கை அல்ல! தடைகளை வெற்றி கொண்டு வாழும் வாழ்க்கை..!**

**சொல்லில் இனிமை இருந்தால், வேப்ப எண்ணையும் விற்றுவிடலாம். சொல்லில் கடுமை இருந்தால் தேன் கூட விற்க முடியாது!**

**அழகிய காட்சியைத் தேடாதீர்கள்..! காணும் காட்சியை அழகாக்குங்கள்! வாழ்க்கை அழகாகும்..**

**விழுந்து விடுவேன் என்ற பயத்துடன் ஓடாமல் விழுந்தாலும் எழுந்து விடுவேன் என்ற நம்பிக்கையுடன் ஓடுங்கள். வாழ்க்கையில் தடுமாற்றமே இருக்காது.**

**எல்லா மூங்கிலும் புல்லாங்குழல் ஆவதில்லை! சிலருக்கு பட்டாகவும், சிலருக்கு ஏணியாகவும், சிலருக்கு வீடாகவும் மாறுகின்றன! அதுப் போலத்தான் வாழ்க்கையும்!**

**ஒரு மனிதனை மனிதனாக ஆக்குவது உதவிகளும் வசதிகளும் அல்ல! அவனுக்கு ஏற்படும் இடையூறுகளும் துன்பங்களுமே ஆகும்! சிந்தித்து செயலாற்றுங்கள்! நல்லதே நினையுங்கள், நல்லதே நடக்கும்!**

**பிற மனிதர்களோடு நீங்கள் உண்மையாக பழகாத வரையிலும், பிற மனிதர்கள் உங்களோடு உண்மையாக பழகாத வரையிலும், வாழ்க்கை அவ்வளவு அழகாக இருக்காது!**

**நம் வாழ்க்கையில் ஏற்பட்ட பெரிய நல்ல மாற்றங்கள் எல்லாம் – நாம் அதிகம் நேசித்த ஒன்றை இழந்த பிறகே நடந்திருக்கும்! ஒன்றை இழந்தால் தான் ஒன்றை பெற முடியும்!**

**இதுவரை நடந்ததை யோசிப்பதை விட, இனி எப்படி நடக்க வேண்டும் என யோசிப்பவர்களே வாழத் தெரிந்தவர்கள்!**

**ஒவ்வொரு காயங்களும், கஷ்டங்களும், பல அனுபவங்களை தருகிறது! சில முகங்களை அடையாளம் காட்டுகிறது! உன்னை மாற்றிக் கொள்ள வழி செய்கிறது! உனது பலவீனம் புரிய செய்கிறது! வரவேற்க கற்றுக்கொள் துன்பங்களையும், வேதனைகளையும்! அது புதிய பாடம் கற்று தரும்.. ஓடி சென்ற வெற்றி மீண்டும் உன்னை நோக்கி வரும்!**





# பல்சுவை கதம்பம்



## பேரிச்சையின் அற்புத பலன்கள்

சத்துப் பொருட்களை எளிதில் பெற இயற்கை சில பல பொருட்களை நம்மிடத்தில் தந்துள்ளது. அதில் பேரிச்சை மிகவும் அற்புதமான ஒன்று. வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் சத்துப் பொருட்கள் இதில் நிறைந்துள்ளன. சீரான உடல் வளர்ச்சிக்கும், நலமாக இருப்பதற்கும் ஒவ்வொருவரும் அவசியம் பேரிச்சை உண்ண வேண்டும்.

**பேரிச்சையின் பலன் :**

பேரிச்சையில் உள்ள நார்ச்சத்துக்கள் எளிதாக ஜீரணமாகும். உண்டதும் புத்துணர்ச்சியும், சக்தியும் உடலுக்கு கிடைக்கிறது.



கெட்ட கொழுப்புகளை உறிஞ்சி அகற்றும் ஆற்றல் பேரிச்சைக்கு உண்டு. பெருங்குடற் பகுதியில் புற்றுநோயை உருவாக்கும் ரசாயனங்களை நீக்குவதிலும் பேரிச்சைக்கு ஈடு இல்லை.

டேனின்ஸ் எனும் ஆன்டி ஆக்ஸிடென்ட் பேரிச்சையில் உள்ளது. இது நோய்த் தொற்று, ரத்தம் வெளியேறுதல், உடல் உஷ்ணமாதல் ஆகியவற்றுக்கு எதிராக செயல்படக்கூடியது.

'விட்டமின் ஏ', பேரிச்சையில் ஏராளமான அளவில் உள்ளது. இது கண் பார்வைக்கும், குடல் ஆரோக்கியத்திற்கும், சருமத்திற்கும் அவசியமானது. சிறந்த நோய் எதிர்ப் பொருள்களான லுடின், ஸி-சாந்தின் மற்றும் பீட்டா கரோட்டின் நிறைந்துள்ளது. இவை குடல், தொண்டை, மார்பகம், நுரையீரல், இரைப்பை ஆகிய உறுப்புகளைத் தாக்கும் புற்றுநோய்களுக்கு எதிராக செயல்படக் கூடியது.

பேரிச்சை இரும்புச் சத்தை ஏராளமாக அள்ளி வழங்கும். 100 கிராம் பேரிச்சையில் 0.90 மில்லிகிராம் இரும்புச் சத்து உள்ளது. இரும்புத் தாது, ரத்தத்திற்கு சிவப்பு நிறம் வழங்கும் ஹீமோகுளோபின் உருவாக்கத்தில் பங்கு வகிப்பதாகும். இது ரத்தத்தில் ஆக்சிஜனை சுமந்து செல்லும் ப்ளேட்லெட்ஸ் அளவை தீர்மானிப்பதிலும் பங்கெடுக்கிறது.

பொட்டாசியம் தாது குறிப்பிட்ட அளவில் உள்ளது. இது இதயத்துடிப்பு மற்றும் ரத்த அழுத்தம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதிலும் பங்கு வகிக்கிறது. இதனால் ஏற்படும் பக்கவாதம், இதய வியாதிகள் ஏற்படாமலும் காக்கிறது.

இதில் உள்ள கால்சியம், எலும்புகள் மற்றும் பற்களின் பலத்திற்கு அவசியம். நாடித் துடிப்பை சீராக்குதல் மற்றும் ரத்தக் கட்டி ஏற்படுவதை தடுத்தல் ஆகியவற்றிலும் பங்கு வகிக்கிறது.

## இதய நோய்கள் வராமல் தடுக்க உதவும் மூலிகைகள் என்ன...?

இதய நோயை குணப்படுத்துவதில் இயற்கை மருத்துவத்துக்கு தனிப்பெரும் பங்கு உண்டு. வீடுகளில் வளர்க்கப்படும் செம்பருத்தி பூவின் இதழ்களை மட்டும் தனியாக எடுத்து காலையில் கண் விழித்ததும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் இதய நோய்கள் வராமல் தடுக்க முடியும்.



இதய நோய் தீவிரமாக இருப்பவர்கள் செம்பருத்தி பூக்களின் இதழ்களை மட்டும் எடுத்து அதன்மீது எலுமிச்சைச்சாறு சேர்த்து நன்றாக பிசைய வேண்டும். பிறகு சர்க்கரை சேர்த்து அடுப்பில் வைத்து சூடேற்ற வேண்டும். பாகு பதத்தில் வந்ததும் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும். அதனுடன் தேவையான அளவு நீர் சேர்த்து தினமும் காலை கண்விழித்ததும் அருந்தி வந்தால் இதய நோயின் தீவிரத்தை குறைக்கும்.

செம்பருத்திப் பூ இதழ்களை நீர் விட்டு காய்ச்சி சர்க்கரை சேர்த்து அருந்தி வந்தாலும் இதய நோயின் தீவிரம் குறையும். ரத்தக்குழாயில் ஏற்படும் அடைப்பை இஞ்சி சரி செய்கிறது. அந்தவகையில், இஞ்சிச்சாறு அல்லது இஞ்சி ஜூஸ் அருந்தி வந்தாலும் இதய நோயிலிருந்து காத்துக்கொள்ளலாம்.

இஞ்சிச்சாறு வெறுமனே அருந்துவதைவிட தண்ணீரும், தேனும் சேர்த்து அருந்தலாம். இஞ்சி ஜீஸ் எப்படி தயாரிக்க வேண்டும் என்றால் இஞ்சிச்சாறு எடுத்து அதனுடன் தண்ணீர், எலுமிச்சைசாறு, தேன், சர்க்கரை சேர்த்தால் ஜீஸ் ரெடி. இஞ்சியை துவையல், ஊறுகாய் மற்றும் சுக்கு என பல வடிவங்களில் உணவில் சேர்த்துக் கொண்டாலும் இதய நோயை வெல்லலாம்.

தாமரை மலரின் இதழ்களை நீரில் போட்டு கொதிக்க வைத்து அருந்தி வந்தாலும் இதய நோய் குணமாகும். உடலில் உள்ள கொழுப்புச்சத்தை பூண்டு எளிதாக குறைக்கக்கூடியது. தொடர்ந்து 3 மாதங்கள் வெள்ளைப்பூண்டு சாப்பிட்டு வந்தால் உரிய நிவாரணம் கிடைக்கும். பொதுவாக வெள்ளைப்பூண்டை பச்சையாக சாப்பிடுவதைவிட வேக வைத்தோ, தீயில் சுட்டோ சாப்பிடுவது நல்லது.

தாமரை இலையை கஷாயம் செய்து குடித்து வந்தால் இதய படபடப்பு, மேல் சுவாசம், படபடப்பு சரியாகும். சின்ன வெங்காயத்தை சாறு எடுத்து சர்க்கரை சேர்த்து அருந்தி வந்தால் இதயம் பலப்படும்.



## சருமத்தை எப்போதும் பொலிவாகவும் புத்துணர்ச்சியுடனும் வைத்துக்கொள்ள உதவும் டிப்ஸ் !!

சிலருக்கு சருமம் எப்பொழுதும் பொலிவிழந்து காணப்படும். அவர்கள் இந்த டிப்ஸை பின்பற்றி வந்தால் நல்ல மாற்றத்தை உணர முடியும்.

ஒரே இரவில் முகம் வெள்ளையாக எலுமிச்சை மிகவும் சிறந்த அழகு சாதன பொருளாக விளங்குகிறது. எலுமிச்சை சருமத்தில் உள்ள அழுக்கினை நீக்கி சருமத்தை என்றும் வெள்ளையாக வைத்துக்கொள்ள உதவுகிறது.

எலுமிச்சை பழத்தை பாதியாக நறுக்கி எடுத்து கொள்ளவும், பின்பு சிறிதளவு காபி தூள் மற்றும் சர்க்கரை ஆகியவற்றை நறுக்கிய எலுமிச்சை பழத்தில் தூவி சருமத்தில் சர்க்கிள் வடிவில் 5 நிமிடங்கள் மசாஜ் செய்ய வேண்டும். பின்பு 10 நிமிடம் கழித்து சருமத்தை குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

இவ்வாறு இந்த முறையை தொடர்ந்து 7 நாட்கள் இரவு தூங்கும் போது செய்து வர, சரும செல்களுக்கு நல்ல புத்துணர்ச்சி அளிக்கும், சருமத்தில் ஏற்படும் அனைத்து பிரச்சனைகளும் நீங்கும், அதேபோல் எப்பொழுது முகம் வெள்ளையாக மற்றும் ஜொலிஜொலிப்பாக காணப்படும்.

ஒரு பௌலில் ஒரு ஸ்பூன் கோதுமை மாவு மற்றும் ஒரு ஸ்பூன் அரிசி மாவு இரண்டையும் ஒன்றாக கலந்து வைத்து கொள்ளவும்.

பின்பு ஒரு தக்காளியை பாதியாக நறுக்கி, கலந்து வைத்துள்ள மாவுடன், இந்த தக்காளியை தொட்டு முகத்தில் 5 நிமிடம் மசாஜ் செய்ய வேண்டும். பின்பு 15 நிமிடங்கள் கழித்து சருமத்தை குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

இந்த முறையை தொடர்ந்து 7 நாட்கள் செய்து வர முகம் வெள்ளையாக பொலிவுடன் இருக்கும். மேலும் சருமம் என்றும் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

## பாதங்களில் ஏற்படும் வெடிப்பை போக்க உதவும் சில குறிப்புகள் !!

பாதங்களில் வெடிப்பு சிலருக்கு தீரா பிரச்சனை. அதுவும் வெறும் கால்களில் நடந்து கொண்டேயிருப்பவர்களுக்கு பாதத்தில் பிளவு அதிகமாகி வலியை தரும்.

நன்கு மசித்து வைத்த பப்பாளிப்பழத்தை குதிகால்களில் தடவி 10 நிமிடங்கள் கழித்து காய்ந்தவுடன் ஸ்க்ரப் செய்ய வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் பிளவு ஏற்பட்ட பகுதியில் தோல்கள் ஒன்று சேர்ந்து புதிய தோல்கள் போல தோற்றமளிக்கும்.

உருளைக் கிழங்கை பொடிசாக வெட்டி வெயிலில் காய வைக்கவும். அதன்பிறகு இந்த உருளைக்கிழங்கு பொடியை தூளாக்கி நீரில் கலந்து உங்கள் பாதங்களில் தடவினால் பாத வெடிப்பு நீங்கும்.

தொடர்ந்து கடுகு எண்ணெய்யை பாதங்களில் தேய்க்க வேண்டும். இது உங்கள் பாதங்களை மென்மையாக்கும். மேலும் மசித்த வெந்தய கீரையில் கடுகு எண்ணெய் கலந்து பாதங்களில் தேய்த்து வாருங்கள். வெடிப்பு மறைந்து பாதங்கள் மிளிரும்

வாழைப் பழத்தை மசித்து உங்கள் பாதங்களில் தடவி வந்தால் வெடிப்பு மறைந்து பாதங்கள் மிருதுவாகும். பாதத்தில் உண்டாகும் சுருக்கங்கள் மறையும்.

கண்டங்கத்திரியின் இலை,காய் மற்றும் வேர் முதலியவை மருந்தாகப் பயன்படுகின்றன. இலை சாற்றை, தேங்காய் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி கால் கைகளிலுள்ள வெடிப்புகளுக்கு தடவி வர வெடிப்புகள் குணமாகும்.



# மூளைக்காய்ச்சல் பற்றிய மருத்துவ நேர்காணல்



வைத்தியர் வைகலை இராநாதன்
BSMS
மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
கோபாலபுரம்
திருகோணமலை

**மூளைக்காய்ச்சல் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

உலகளவில் பேசும் பொருளாக இருப்பது கொரோனா மற்றும் ஒமிக்ரோன் பிறழ்வாகும். இலங்கையில் டெங்குநோய் இடைக்கிடையே மக்களை அச்சுறுத்தி வருவதையும் காண்கிறோம். இவைபற்றி கூடியளவு கவனத்தைச் செலுத்தும் நாம், சில முக்கியமான நோய்களைப்பற்றிய விழிப்புணர்வுகளைத் தவறவிட்டு விடுகிறோம் என்பது நிதர்சனமான உண்மையாகும். அந்தவகையில், மூளைக்காய்ச்சல் நோய் பெரியோர் முதல் குழந்தைகள் வரை பாதிப்புக்குள்ளாகின்றனர். விசேடமாக குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் மூளைக் காய்ச்சல் பற்றி சற்று பார்ப்போமானால் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 24 ஆம் திகதி மூளைக் காய்ச்சல் விழிப்புணர்வு தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நோய் யப்பானில் முதன் முதலில் 1871 ஆம் ஆண்டு பாரியளவில் இருந்ததை கண்டுபிடித்தனர். அதனால் ஜப்பானிய மூளையழற்சி (Japanese Encephalitis) காய்ச்சல் என்று பெயர் உருவானது. இலங்கையில் ஒரு வயது நிரம்பிய குழந்தைகளுக்கு ஜப்பானிய மூளைக் காய்ச்சலுக்கான தடுப்பூசி வழங்கப்படுகிறது.

குறிப்பாக, வளர்ந்துவரும் ஏழை நாடுகளில் மூளைக் காய்ச்சலின் பாதிப்பு கொஞ்சம் அதிகமாக இருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அதுமட்டுமல்லாது, மூளைக் காய்ச்சல் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. இரண்டு முதல் பதினைந்து நாட்கள் வரை அதன் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். குழந்தைகளுக்குச் சளி, இருமல் காரணமாக வருகின்ற காய்ச்சலையெல்லாம் மூளைக்காய்ச்சல் என நினைத்துப் பயந்து விடத் தேவையில்லை.

**காய்ச்சல் ஏன் ஏற்படுகிறது?**

ஏதாவது ஒரு கிருமி உடலுக்குள் செல்லும்போது, உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தி அக்கிருமியை எதிர்த்துப் போராடும் போதுதான் காய்ச்சல் ஏற்படுகிறது. அதனால் ஏற்படும் காய்ச்சல் எமது உடலுக்கு ஒரு பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்குகின்றது.

**மூளைக்காய்ச்சலை இரு பெயர்களால் அழைக்கின்றனர் இது பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

ஆம், முதலாவது வகை மூளை அழற்சிக் காய்ச்சலாகும் (Encephalitis) இது மூளைத்திசுக்கள் பாதிப்படைவதனால் ஏற்படுகிறது. அதாவது, மூளையைச் சுற்றிக் காணப்படுவது மூளையுறைகளாகும். இவை கிருமிகள் உட்புகாமலும் ஏதேனும் அதிர்ச்சியினால் மூளை பாதிப்படைவதையும் தடுக்கும் தொழிலைச் செய்கின்றது. இவ்வாறாக இயற்கையில் மூளையும், முதுகுத் தண்டுவடத்தையும் சுற்றியுள்ள மெல்லிய சவ்வுபோன்ற பாதுகாப்புப்படலம் நோய்க் கிருமித் தாக்கத்துக்குற்படும்போதே "மூளைக்காய்ச்சல்" ஏற்படுகிறது.

இரண்டாவது வகை, மூளை உறை அழற்சிக் காய்ச்சலாகும் (Meningitis) இது மூளை உறை பாதிக்கப்படுவதனால் ஏற்படுகிறது. மூளை அழற்சிக் காய்ச்சல் (Encephalitis), மூளை உறை அழற்சிக் காய்ச்சல் (Meningitis) இந்த இரண்டு வகைக் காய்ச்சலும் "மூளைக்காய்ச்சல்" எனக் கூறப்படுகின்றது.

**இக்காய்ச்சலினால் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்கள் யார்?**

பொரும்பாலும் ஒரு வயத்திற்குட்பட்ட குழந்தைகளும், 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களும், 65 வயதுக்கு மேற்பட்டவர்களும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், நாட்பட்ட நோயாளிகள், மதுப்பழக்கம் உடையவர்கள், இடநெருக்கடி அதிகமான இடங்களில் வாழ்வோர், தடுப்பூசிகளை முறையாக ஏற்றிக் கொள்ளாதவர்கள் போன்றோரை பெரும்பாலும் தாக்குகின்றது.

**குழந்தைகள் பொரும்பாலும் பாதிப்படையக் காரணம் என்ன?**

குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு பெரும்பாலும் நோய் எதிர்பார்ப்புச் சக்தி பூரணமாக விருத்தியடைந்திருக்காது. அத்துடன் மூளையும் வளரச் செய்கின்ற வயதாக இருப்பதனாலும் இத்தாக்கத்துக்குட்படுகிறார்கள்.

**மூளைக்காய்ச்சல் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

சில நோய்களின் தொடர்ச்சியன தாங்கள் இருப்பின் இக்காய்ச்சல் ஏற்படலாம். அதாவது, தட்டம்மை, கக்குவான், இருமல், மலேரியா, கூகைக்கட்டு, காதுத்தொற்றுக்கள் போன்ற நோய்களைக் குறிப்பிடலாம். மேலும் காசநோய்கள், தொண்டைத்தாபிதங்கள், மண்டையோட்டில் ஏற்படும் கிருமித்தொற்றுக்கள், பூஞ்சை, இரசாயணங்களால் வரும் எரிச்சல் என்பவற்றாலும் ஏற்றபடக்கூடும். இவை தவிர பாதிப்படைந்தவருடன் தொடர்புகளைப் பேணல் (தனிநபர் சுகாதாரம் பேணாமை), வீட்டைச் சுற்றியுள்ள கழிவுநீர் தேங்குதலை முறைப்படி அகற்றாமை போன்ற காரணங்களாலும் ஏற்படுகின்றது.

**மூளைக்காய்ச்சலின் அறிகுறிகள் எவை?**

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தையெனின் எந்நேரமும் அழுகை, சிணுங்கிச் சிணுங்கி அழுதல், காய்ச்சல் மற்றும் வலிப்பு, திடீர் அசைவுகள் போன்ற அறிகுறிகள் காணப்படும். பெரும்பாலும் நினைவிழக்கும் வரை நிலமை மோசடையலாம்.

ஏனையோருக்கு திடீரென கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, குமட்டல், வாந்தி, மனக்குழப்பம், வலிப்பு, பசியின்மை, கழுத்துப்பிடிப்பு, தூக்கம், சோம்பல், ஒளியைப் பார்க்க முடியாமை, சுயநினைவை இழக்கச் செய்து கோமா நிலைக்கு ஆளாதல் போன்ற அறிகுறிகளைக் குறிப்பிடலாம்.

இருப்பினும், அறிகுறிகளை மட்டும் வைத்துக் கொண்டு முடிவு எடுப்பதைவிட உடனடியாக வைத்தியரை அணுகி முறையான பரிசோதனைகளை செய்து சிகிச்சை எடுப்பது நல்லது.

**மூளைக்காய்ச்சலின் காரணிகள் என்ன?**

அறிகுறிகள் பெரும்பாலும் ஒரே தன்மையானதாக இருப்பினும், ஏற்படுத்தும் காரணியைப் பொறுத்தும் அதன் தீவிரத் தன்மையைப் பொறுத்தும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றது. ஆனால் மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனைகளே அக்காரணியை உறுதிப்படுகிறது. அதாவது, வைரஸ்



முளைக்காய்ச்சல் (Virus meningitis), பக்றீரியா முளைக்காய்ச்சல் (Bacterial meningitis), பூஞ்சை மூளைக்காய்ச்சல் (Fingal meningitis), ஒட்டுண்ணி மூளைக்காய்ச்சல் (Parasitic meningitis), தொற்று அல்லாத மூளைக்காய்ச்சல் (Non infectious meningitis) போன்ற மூளைக்காய்ச்சல் வகைகளைக் கொண்டும் அறியலாம்.

**நீங்கள் குறிப்பிட்ட 5 வகைக் காரணிகளைப் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

**வைரஸ் மூளைக்காய்ச்சல்:-** இது பொதுவாக ஏற்படும் ஒருவகை Entro Virus என அழைக்கப்படும். Herpes, mumps தன்மை கொண்டது. மூளைக்காய்ச்சலினதும், பக்றீரியா முளைக்காய்ச்சலினதும் அறிகுறிகள் மிகவும் கடுமையானது. இது வயதைப் பொருத்தே அறிகுறிகளும் மாறுபடும்.

**பக்றீரியா மூளைக்காய்ச்சல்:-** இது நேளைளநசசையயை அநலைபெலைவளை, ளவசநிவழஉழஉஉரள போன்ற நுண்ணுயிர்கள் காதுவழித் தொற்று மூலமும், அறுவைச் சிகிச்சை மூலமும் உடலினுள் சென்று இரத்த சுற்றோட்டத்தில் கலந்து மூளை மென்சவ்வுக்குள் பரவி விடும். இதனால், உயிருக்கு தீவிர ஆபாத்தை விளைவித்து விடும்.

**பூஞ்சை மூளைக்காய்ச்சல்:-** இது பெரும்பாலும் ஏற்படுவது குறைவு. அரிதானது ஒப்பீட்டளவில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தோருக்கே ஏற்படுகிறது. Cryptococcus,coccidiosis's போன்ற காரணிகளால் இரத்தச் சுற்றோட்டத்தில் கலந்து மூளை, முதுகெலும்புக்கு பயணிக்கிறது. எனினும் ஆரம்பத்தில் இதை கண்டு பிடித்தால் குணப்படுத்தலாம்.

**ஒட்டுண்ணி மூளைக்காய்ச்சல்:-** அழுக்கு, மலம், இறந்த மீன், அழுகிய கோழி போன்றவற்றில் இருக்கும் ஒட்டுண்ணி காரணமாக ஏற்படுகிறது. இதுவும் மற்றையவைகளைவிட ஒப்பீட்டளவில் ஏற்படுவது குறைவாகும்.

**தொற்றல்லாத மூளைக்காய்ச்சல்:-** தொற்று நோயல்லாத காரணத்தின் விளைவுகளால் கூட மூளைக்காய்ச்சல் ஏற்படலாம். டுரிரள, ளுயசஉழனைழளளை போன்ற நோய்களைக் குறிப்பிடலாம்.

**இந்த நோய்த்தாக்கத்தின் மூலம் பக்கவிளைவுகள் ஏதும் ஏற்பட வாய்ப்புள்ளதா?**

ஆம், ஆரம்பத்திலேயே விழிப்புணர்வுடன் இருந்துகொண்டு காய்ச்சல் ஏற்படும்போது அலட்சியம் செய்யாது வைத்தியரை அணுகி சிகிச்சை எடுத்துக் கொண்டால் நல்லது. இல்லாவிட்டால் சில வகையான நினைவகச் சிக்கல்கள், அதிர்ச்சி, கற்றல் குறைபாடுகள், மூளைப் பாதிப்பு, மூளை நீர்க்கோவை, கீல்வாதம், காது கேளாமை, நடைப் பிரச்சினைகள் போன்றவைகள் ஏற்படலாம். இறுதியில் இறப்புக்கூட ஏற்பட வாய்ப்புள்ளது.

**இந்நோய் தொற்றும் அபாயம் உள்ளதா?**

சிலவகையான பக்றீரியாக்களினால் மூளைக்காய்ச்சல் நோய் தொற்றிக்கொள்ளும் தன்மையடையது. அதாவது, தொற்றுநோயுள்ள ஒருவரின் வாய் அல்லது மூக்கிலிருந்து வெளிவரும் சளி மூலமாக மற்றவருக்குப் பரவலாம். இருமுதல், முத்தமிடுதல், தொற்றுள்ளவரின் கைக்குட்டையை பயன்படுத்தல் போன்றவற்றாலும் ஏற்படலாம். சாதாரண தடிமன், காய்ச்சல் உள்ளவர்களின் மூலம் பரவிவிடும் என அச்சப்படத் தேவையில்லை. நெருங்கிய தொடர்பிலிருப்போர் சற்று எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

**இந்த நோய் தொடர்பில் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்பட்டாலோ அல்லது குழந்தைகள் திடீரென நினைவிழந்தாலோ, வலிப்பு வந்தாலோ உடனே பிள்ளைகளை வைத்தியரிடம் காண்பித்து சிகிச்சையளிக்க வேண்டும். குழந்தைகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தியை பலமாக வைத்திருந்தால் எந்த நோய்களும் அணுகாது. குழந்தைப் பருவத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் சேர்ந்து மூளை விருத்தியும் நடக்கிறது. அதனால் குழந்தைகளுக்கு சரியான ஊட்டச்சத்துக்களையும், முறையான சுகாதகரப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றை வழுங்குவதன் மூலம் இந்த நோயிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.

வீட்டுக்குள்ளும், வெளியேயும் சுகாதாரத்தைப் பின்பற்றவேண்டும். திண்மக்கழிவுகளை முறையாக அகற்றுதல், தண்ணீர் தேங்காமலும், கொசுக்கள் நுளம்புகள் பெருகாமலும், நுளம்புக்கடிக்கு உள்ளாமாகலும், வீட்டிலுள்ளோர் பாதுகாப்பாக இருத்தல். குறிப்பாக மழைக்காலங்களில் கவனமாக இருக்கவேண்டும். சுகாதாரமாக இருப்பதை நாம் உறுதிசெய்யும்போது இந்த நோய் மாட்டுமின்றி பெரும்பாலான நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

விஷேடமாக, தடுப்பூசிகளை முறையாக ஏற்றிக்கொள்ளல் வேண்டும். இவற்றை முறையாக அந்தந்த காலத்திற்குகெற்ப ஏற்றிக்கொள்வதன் மூலம் குழந்தைகள் மட்டுமல்ல பெரியோர்களும் பாதுகாப்பாக இருப்பதற்கு வழிவகுக்கும். இதைத்தவிர தொற்று ஏற்பட்டபவர்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தாது இருத்தல் அவசியமாகும்.

**நேர்காணல்:- பைஷல் இஸ்மாயில்**

# தனி நாடுகோரி போராடியவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள்

**ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களுடனான நேர்காணல்**

கடந்தவார தொடர்ச்சி...



**கேள்வி :- உங்களால் இன்று கொடுக்கப்படக்கூடிய சர்வதேச - உள்ளூர் அழுத்தங்களின் மூலமாக தமிழ் மக்கள் சந்திக்க இழப்புக்களுக்கும், பிரச்சினைகளுக்குமுரிய தீர்வுகள் கிடைக்கும் என நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில் :- முதலாவது ஆயுதப்போராட்டம் 30 வருடங்களாக நடைபெற்றபோதும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987இல் வந்தது. இந்த ஒப்பந்தம் வந்தபோது பலரும் அதனை ஒரு இடைக்காலத் தீர்வாக ஏற்றுக்கொண்டாலும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொண்டாலும் பின்னர் இந்திய இராணுவத்துடன் சண்டைபிடிக்கின்ற நிலைமையும் வந்தது. 2009 வரை இலங்கையில் ஒரு யுத்தம் நடந்தது. யுத்தம் நடைபெற்றபோது தமிழ் மக்களுக்கு ஒரு தனி நாடோ அல்லது உச்சபட்சமான தீர்வு ஒன்று கிடைக்கும் என்கிற எதிர்பார்ப்பு அனைவரிடத்திலும் இருந்தது. 2009இல் பல்வேறுபட்ட நாடுகளின் ஒத்துழைப்புடன் அந்த யுத்தமும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. பிற்பாடு மஹிந்த அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒரு பேச்சுவார்த்தை நடத்தியது. அதில் எதுவும் நடக்கவில்லை அதிலிருந்து வெளியேறினார்கள். அதன் பின்னர் மைத்திரி - ரணில் நல்லாட்சி அரசில் ஒரு புதிய அரசியலமைப்பு வரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அதற்குள் ஒரு பங்காளிகளாக இருந்து செயற்பட்டார்கள்.

ஆனால் அதற்குள்ளும் எதுவும் வரவில்லை. தற்போதைய அரசு தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி போதுமானது. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு எதுவும் தேவையில்லை என்கிற அரசு தான் தற்போது இருக்கிறது. ஆகவே இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில் அதனை வலுப்படுத்தி நிறைவேற்றுவதற்கான களம் இருக்கவில்லை. இப்பொழுதுதான் நாங்கள் முன்வைக்கின்றோம். இது நிறைவேற்றப்படுமா?, நிறைவேற்ற இலங்கை ஒத்துழைக்குமா?, ஒத்துழைக்காதுவிட்டால் நாங்கள் என்ன செய்யப்போகின்றோம்?, இந்தியா என்ன செய்யும்? என்கிற பல கேள்விகள் இருக்கிறது. இலங்கை மறுக்கும் நிலையில் இந்தியாவிற்குமான சில தேவைகள் ஏற்படலாம் என நாங்கள் நம்புகின்றோம். இலங்கைக்குள் சீனாவின் வருகை அடுத்த நூறு வருடத்திற்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

அதிகாரங்களைக் கொண்ட மாகாண அரசு இருந்தால் அது ஏனைய நாடுகள் இந்தப் பிராந்தியத்துக்குள் பிரவேசிக்காமல் தடுக்கவோ அல்லது கேள்வி கேட்கவோ ஒரு பலமுள்ள மாகாண அரசு இருந்தால் அதுதான் இந்தியாவுக்கு சிறப்பாக இருக்க முடியும். அதுதான் இந்தியாவுக்கு பிரயோசனமானதாக இருக்க முடியும். ஆகவே அதிகாரமற்ற ஒரு மாகாண சபையாலோ அல்லது எதுவுமே இல்லாமல் போவதாலோ நிச்சயமாக எல்லா விடயங்களையும் இலங்கை மத்திய அரசுடன் தான் பேசவேண்டிய சூழல் ஏற்படும். ஆகவே நாங்கள் எதிர்பார்க்கின்றோம் வடகிழக்கில் ஒரு அதிகாரம் உள்ள மாகாண சபை இருப்பது என்பது இந்தியாவினுடைய பாதுகாப்புக்கு மாத்திரமல்ல ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக்கும் முக்கியமானது என நாங்கள் கருதுகின்றோம்.

**கேள்வி :- வடகிழக்கில் வாழக்கூடிய தமிழ் மக்கள், மலையகத்தில் வாழக்கூடிய தமிழ் மக்கள், ஏனைய பிரதேசங்களில் வாழக்கூடிய தமிழ் மக்கள், தமிழ் பேசுகின்ற முஸ்லீம் மக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்கால் தமிழ் மக்களது அல்லது சிறுபான்மை சமூகங்களுக்கானத் தீர்வுகள் சாத்தியப்படும் என்கிற நம்பிக்கை உள்ளூரில் மாத்திரமல்ல சர்வதேச ரீதியாகவும் இருக்கிறது. இந்த நிலையில் தற்போதைய இந்தக் கூட்டணியில் முஸ்லீம் பிரதிநிதிகள் கைச்சாத்திடாமல் போனதற்கு விசேட காரணங்கள் ஏதும் இருக்கிறதா?**

பதில் :- அவர்களே அந்தக் காரணங்களை வெளியிட்டிருந்தார்கள். மலையக மக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள் வேறு. முஸ்லீம் மக்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள் வேறு. ஈழத் தமிழர்களது பிரச்சினைகள் என்பது வேறு. ஆகவே அவர்கள் இந்த மூன்று தரப்பினரதும் பிரச்சினைகள் வேறு என சிந்திக்கின்றார்கள். அந்த வகையில் தற்போது எங்களுக்கு மிக முக்கியமாக உள்ள பிரச்சினை இந்திய - இலங்கை ஒப்பந்தம். அதன் ஊடாக வந்த 13வது திருத்தச்சட்டம். இந்தியா ஏற்கனவே இந்த விடயங்களில் தலையிட்டிருக்கின்றது. இராணுவத்தை அனுப்பியிருக்கிறது, ஒப்பந்தத்தை செய்திருக்கிறது பல விடயங்களைச் செய்திருக்கின்றது. பல விடயங்கள் நடந்து முடிந்திருக்கிறது.

ஆகவே அதனது ஒரு தொடர்ச்சியாகத் தான் நாங்கள் இதனைப் பார்க்க முடியும். இதற்கு மலையகத் தமிழ் மக்களோ அல்லது முஸ்லீம் மக்களோ அல்லது இவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் எங்களுடன் இணைந்து பயணிக்கின்றபோதும், அவர்களுக்கு வேறு பிரச்சினைகள் இருக்கிறது அவற்றை வேறு விதமாக கையாளவேண்டும். அது இந்தியாவுடனும் பேசப்படலாம். நிச்சயமாக அதற்கும் நாங்கள் ஒத்துழைப்பாக இருப்போம் என்பது வேறு. ஆகவே அந்த வகையில் தான் இந்த விடயங்களை நீங்கள் பார்க்க முடியுமே தவிர மலையக மக்களுக்கும், வடகிழக்கு மக்களுக்கும் இடையில் பிரிவினை என்று அல்ல, பிரச்சினைகளில் வித்தியாசம் இருக்கிறது. உதாரணமாக அவர்களது சம்பளப் பிரச்சினைகள், வீட்டுப் பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள். ஈழத் தமிழர்களது பிரச்சினைகள் சற்று வித்தியாசமானது.

இதேபோல முஸ்லீம் மக்களும் கிழக்கு மாகாணத்தில் கணிசமானளவு மக்கள் இருந்தாலும் அவர்களது பிரச்சினைகள் வித்தியாசமானது என அவர்கள் பார்க்கின்றார்கள். அந்த வகையில் அவர்கள் தாங்களே அந்த விடயங்களைக் கூறியிருக்கிறார்கள். மற்றும்படி எங்களுக்கும் மலையகக் கட்சிகளுக்கும் அல்லது முஸ்லீம் காங்கிரசுக்கும் இடையில் கருத்து மோதல்கள் எதுவும் கிடையாது. ஒரு பொது விடயத்திற்காக அவர்கள் ஒன்றுபட்டு வந்தால் நாங்களும் ஒன்றுபட்டு செயற்படுவோம். பல்வேறுபட்ட விடயங்களில் நாங்கள் ஒன்றுபட்டு செயற்பட முடியும். அதில் எங்களுக்கு எந்தவிதமான எதிர்ப்புக்களும் கிடையாது.

**கேள்வி :- மீண்டும் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலொன்றில் போட்டியிட வாய்ப்பு உள்ளதா?**

பதில் :- முதலாவது நாங்கள் என்ன காரணத்திற்காகதமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இருந்து 2017ஆம் ஆண்டு வெளியேறினோம் என்கிற ஒரு விடயம் இருக்கிறது. இரண்டு விடயங்கள் இருக்கிறது அதாவது ஒன்று அவர்கள் தங்களை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட தாபனமாக பதிவுசெய்ய முடியாதிருப்பது. ஆகவே எங்களுக்கு அது ஏற்புடைய விடயமாக இருக்கவில்லை. இரண்டாவது விடயம் தமிழரசுக் கட்சி தாங்கள் எடுக்கின்ற விடயங்களை ஏனைய உறுப்பினர்கள் மீது திணித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு பிழையான விடயத்தையும் ஏனையோர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கிற சூழலையும் உருவாக்கினார்கள். ஆதலால் தான் நாங்கள் அதிலிருந்து வெளியேறினோம்.

இன்னும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பாரிய மாற்றங்கள் எதுவும் வரவில்லை. ஏற்கனவே நான் கூறிய விடயமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட தாபனமாக பதிவுசெய்தால் நீங்கள் கூறிய விடயங்கள் சாத்தியப்படலாம். அண்மைக்கால செயற்பாடுகளைப் பார்த்தால் தமிழரசுக் கட்சியைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஒழுங்கமைக்கப்பட்ட தாபனமாக மாற்ற விரும்புவதாகத் தெரிகின்றது. எனினும் நாங்கள் இப்போது தேர்தல் குறித்துப் பேசவில்லை ஆனால் ஏற்கனவே ஐக்கிய முன்னணி குறித்துப் பேசப்பட்டது. ஆனால் அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்பொழுது நாங்கள் தமிழ் மக்களது பிரச்சினைகளில் பொதுவாக இணங்கி ஒன்றாக செயற்படுவது என்கிற நிலை மாத்திரம் தான்.

**கேள்வி :- தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்தும் செயற்பட்டீர்கள். தற்போது அந்தக் கட்சியுடன் இணைவு, சம்பந்தம் ஏதும் இருக்கிறதா?**

பதில் :- கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேவை இருந்ததன் காரணமாக ஒன்றாக இணைந்து செயற்பட்டோம். ஆனால் அதன் பிற்பாடு தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பாரிய குழப்பங்களும் உட்கட்சிப் பிரச்சினைகளும் இருந்தது. அது இப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது அது தேர்தல் ஆணையாளரிடம் கூடப் போயிருக்கின்றன. ஆகவே இதில் எது சரி எது பிழை எதனை ஏற்றுக்கொள்ளப்போகின்றார்கள் என்கிற பல்வேறுபட்டக் கேள்விகள் இருக்கின்றது. அதுமாத்திரமல்லாமல் திரு. ஆனந்தசங்கரி அவர்களைப் பொறுத்தவரையில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்கிற கட்சி தனிமனிதனின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டும் என செயற்பட்டு தான் கூறுவதையே அனைவரும் கேட்கவேண்டும் என்கிற ஒருவிதமான சிந்தனையும் அவருக்கு இருக்கிறது. என்னைப்பொறுத்தவரையில் அது ஏற்புடைய விடயமாக இல்லை. அதன் பிற்பாடு தான் ஈ.பி.ஆர்.எல்.எப், திரு.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, திரு.சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சிகள் என நாங்கள் அனைவரும் இணைந்துதான் ஒரு கூட்டணியை உருவாக்கியிருக்கிறோம். அந்தக் கூட்டணியில் தான் கடந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டோம். அந்தக் கூட்டணி தொடர்ந்தும் இயங்கி வருகிறது. அதில் இப்போதைக்கு மாற்றங்கள் எதுவும் செய்யவேண்டிய தேவை எழவில்லை. நீங்கள் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இந்தக் கூட்டணிக்கும் இடையில் ஏதாவது ஒற்றுமைப்பாடு வருமாக இருந்தால் அதுபற்றி எதிர்காலத்தில் சிந்திக்கலாம். இப்பொழுது எங்களுக்கு முன்னால் உள்ள பிரச்சினைகளைப் பற்றி கையாள்வது தொடர்பில் தான் சிந்திக்கின்றோம்.

**கேள்வி :- எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனீவா அமர்வொன்று வரவிருக்கிறது. அதில் மனித உரிமை அமைப்புக்கள் பல இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் பேசக் காத்திருக்கின்றன. இலங்கை அரசாங்கம் இங்கு போர்க்குற்றம் தான் இடம்பெற்றது என உறுதியாகக் கூறியிருக்கிறது. கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வருடக்கணக்கில் வீதிகளில் இன்றும் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். ஆகவே இப்புதிய அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கானத் தீர்வு கிடைக்கும் என நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில் :- ஒரு விடயத்தை நீங்கள் கவனிக்கவேண்டும். இது உள்நாட்டுக்குள் தீர்க்கவேண்டிய பிரச்சினை என்றால் எப்போதோ தீர்ந்திருக்கும். உள்நாட்டில் இந்தப் பிரச்சினை தீர்க்க முடியாது சென்று அது யுத்தமாக மாறி அந்த யுத்தம் ஒரு முடிவுக்கு வந்து இப்பொழுதும் எமது பிரச்சினைகள் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக இருப்பது மாத்திரமல்ல, சிங்களத் தலைவர்களும் சரி, வெளிநாட்டு அரசுகளும் சரி அல்லது மனித உரிமை அமைப்புக்களும் சரி, தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து பேசுகின்ற தளமாக இன்று சர்வதேச தளம் இருந்துகொண்டிருக்கிறது. அங்கு காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி, தமிழ் அரசியல் கைதிகள் பற்றி, இராணுவக் குவிப்பு பற்றி இவையெல்லாம்நிறுத்தப்படவேண்டும்என்பது பற்றி இன்னும் பேசப்படுக்கொண்டிருக்கிறது.

ஆகவே இதன் ஊடாக பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? என்று நீங்கள் கேட்டால், ஒரு சர்வதேச தளத்திற்குள் போகின்றபோது இலகுவாக பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. ஏனென்றால் இந்த விடயங்களைக் கையாள்கின்றவர்களின் சர்வதேச நிகழ்ச்நிரல் என்றெல்லாம் இருக்கிறது. உங்களுக்குத் தெரியும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தினுடைய பிரச்சினைகள் கூட இன்னமும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. அது இன்னும் நிச்சயமாக பல பிரச்சினைகளுக்குள் இருக்கிறது. பலஸ்தீன நாடு என்று முழுமையாக அங்கீகரிக்கப்படவில்லை. ஆகவே இந்த விடயங்களில் சர்வதேச தலையீடுகள் வருகின்றபோது சில சமயம் அதிக காலம் தேவைப்படுகின்றது.

ஏனெனில் விடுதலைப்போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்த உலக சூழல் அல்ல இன்று இருப்பது. அன்று அமெரிக்க - ரஷ்ய பனிப்போர் இருந்தது. மூன்றாம் உலக நாடுகள் இந்தியாவின் தலைமையில் ஒரு அதிகாரம் மிக்க தலைவர்களைக் கொண்டிருந்தது. ஆனால் இன்று இவையெல்லாம் மாற்றமடைந்திருக்கிறது. இன்று அமெரிக்காவுக்கும் - ரஷ்யாவுக்கும் இடையிலான பனிப்போர் முடிவடைந்திருக்கிறது. இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் பெருமளவில் வளர்ச்சியடைந்திருக்கிறது. அன்று இல்லாதவரையில் இன்று சீனா பற்றிப் பேசப்படுகின்றது. சர்வதேச அளவில் அமெரிக்காவுக்குப் பதிலாக சீனா வருமா என்று பேசப்படுகின்றது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்குள் சீனாவின் ஊடுருவல் பற்றிப் பேசப்படுகின்றது. அப்படிப் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது. அந்த வகையில் எங்களது பிரச்சினைளும் ஒரு சர்வதேச தளத்தில் இருக்கிறது. பல்வேறான நாடுகளும் அவற்றை அவதானிக்கின்றன கையாள்கின்றன. ஆகவே அவையெல்லாம் உடனடியாக எங்களுக்குச் சாதகமாக முடிவடையும் என்று நான் கூறமாட்டேன்.

அதனை ஒரு பக்கம் நகர்த்துகிற அதேசமயம் எங்களுக்கு அண்மையில் இருக்கின்ற நாடு இந்தியா. அவர்கள் ஏற்கனவே எங்களது விடயங்களில் தலையிட்டவர்கள் என்ற அடிப்படையில் அதன் ஊடாகவும் எங்களது பிரச்சினைகளை சிறப்பாக கையாள முடியும் என்ற அடிப்படையில் அந்த விடயங்களும் இப்பொழுது கையாள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே இரண்டு தரப்பு விடயங்களையும் கையாள வேண்டும் என்கிற நிலைப்பாட்டில் எனக்கு மாற்றுக்கருத்து கிடையாது. எனவே இதனைக் கையாள்வதன் ஊடாக எவ்வளவு விரைவாக பிரச்சினைகளுக்கானத் தீர்வினைக் கொண்டுவரலாம் எனப் பார்க்கலாம்.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**



# உலக பார்வை



## மசகு எண்ணெய் ஒரு பீப்பாய் 100 டொலரைக் கடந்தது

கடந்த 2014ஆம் ஆண்டுக்குப் பின் முதல் முறையாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 100 டொலரைத் தாண்டியுள்ளது. அதன்படி அன்று (24) பிரென்ட் மசகு எண்ணெய் குறியீட்டின் படி மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 101.5 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது. ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான நெருக்கடி நிலையே இதற்குக் காரணம் என கூறப்படுகிறது.




## உக்ரைனுக்கு உடனடி நிதி – உலக வங்கி!

தற்போதைய அரசியல் மற்றும் ராணுவ நெருக்கடிக்கு மத்தியில் உக்ரைனுக்கு உடனடி நிதியுதவி வழங்க தயாராக இருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. ரஷ்யா - உக்ரைன் இடையே போர் நிலவி வருகிறது. உக்ரைன் மீது ரஷ்யா வியாழக்கிழமை தாக்குதலைத் தொடங்கியுள்ளது. தலைநகர் கீவ் வரை ரஷ்ய படைகள் முன்னேறியுள்ளன. இதையடுத்து உக்ரைனில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

இந்நிலையில், உக்ரைனுக்கு உடனடியாக நிதியுதவி வழங்க தயாராக இருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. உக்ரைனுக்கு நிதியுதவி உள்ளிட்ட தேவைகள் குறித்து ஆலோசித்து வருவதாகவும் விரைவில் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளை வழங்கும் என்றும் கூறியுள்ளது.

உலக வங்கி குழுமத்தின் தலைவர் டேவிட் மல்பாஸ் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "உக்ரைன் நிகழ்வுகளின் விளைவாக அதிர்ச்சியூட்டும் வன்முறை மற்றும் உயிரிழப்புகளால் உலக வங்கி குழு அதிர்ச்சி அடைந்துள்ளது. இந்த தருணத்தில் உக்ரைன் மக்களுக்கு ஆதரவாக உலக வங்கி இருக்கும் உக்ரைனில் தற்போதைய நிலை பொருளாதார மற்றும் சமூக தாக்கங்களை ஏற்படுத்தும். இதனை சரிசெய்ய நாங்கள் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணைந்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறோம். என்று குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா பரிசோதனை கட்டாயம் – ஹொங்கொங் அரசு உத்தரவு

கொரோனா பரிசோதனையை ஹொங்கொங் அரசாங்கம் கட்டாயமாக்கி உத்தரவிட்டுள்ளது. அடுத்த மாதம் நடுப்பகுதியிலிருந்து பிரஜைகள் அனைவரும் 03 கட்ட கொரோனா பரிசோதனைகளை மேற்கொண்டிருக்க வேண்டுமென ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் கெரி லேம் (Carrie Lam) தெரிவித்துள்ளார்.

சீனாவின் "பூஜ்ஜிய கொவிட்" கொள்கையை ஹொங்கொங்கும் கடைப்பிடிக்க முயல்வதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், மிக வேகமாக பரவக்கூடிய ஒமெக்ரோன் தொற்றினால் அந்நாட்டின் வைத்தியசாலை கட்டமைப்புகளும் தனிமைப்படுத்தலுக்கான வசதிகளும் பாதிப்படைந்துள்ளன.

உலகின் ஏனைய பகுதிகள் இந்த தொற்றுடன் வாழ கற்றுக்கொண்டாலும், ஆரம்பகால சோதனை, விரிவான தொடர்புத் தடமறிதல், கடுமையான தனிமைப்படுத்தல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் மூலம் தொற்றுநோயை ஒழிக்க முயற்சிப்பதே சீனா கையாளும் முறைகளாக காணப்படுகின்றன.

## கொரோனா கட்டுப்பாடுகள் ரத்து

இங்கிலாந்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப்பரவலை கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அனைத்தும் முடிவுக்கு வருவதாகவும், இது தொடர்பான செயல்முறைகள் இந்த வார இறுதியில் தொடங்குவதாகவும் பிரதமர் போரிஸ் ஜான்சன், அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கூறியதாவது, ஏப்ரல் 1-ந் திகதி முதல் குளிர்காலம் முடிந்து வைரஸ் பரவல் குறைவாகிறபோது, பொதுமக்களுக்கு இலவச, அறிகுறி மற்றும் அறிகுறியற்ற பரிசோதனையை நாங்கள் நிறுத்துவோம். கொரோனா பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் தங்களை தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கான சட்டத் தேவை வியாழக்கிழமை முதல் நீக்கப்படும்.

இங்கிலாந்து, அரசு விதித்த கட்டுப்பாடுகளில் இருந்து தனிப்பட்ட பொறுப்புக்கு நகரும். எதிர்கால கொரோனா மாறுபாடுகளை சமாளிக்க தற்செயல் நடவடிக்கைகள் பராமரிக்கப்படும். மற்றவர்களிடம் கரிசனையுடன் இருக்குமாறு மக்களை கட்டாயப்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். நடைமுறை ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் ஒருவருக்கொருவர் பொறுப்புணர்வை கொண்டிருந்து, அன்புக்குரியவர்களை கொரோனா தொற்று ஏற்படுவதில் இருந்து காக்க வேண்டும் என அவர் கூறினார்.

## அமெரிக்க பெண் உடலுக்குள் உயிருடன் ஊடுருவிய 3 ஈக்கள்: அகற்றி இந்திய டாக்டர்கள் சாதனை

அமெரிக்காவை சேர்ந்த 32 வயது பெண் சுற்றுலா பயணி ஒருவர் இந்தியா வந்துள்ளார். அவருக்கு கடந்த ஒன்றரை மாதமாக வலது கண்ணில் இமை வீக்கம், சிவந்து போதல், அரிப்பு தன்மை காணப்பட்டது. இந்தியா வருவதற்கு முன், அமெரிக்காவில் மருத்துவர்களிடம் பரிசோதித்ததில், அவர்களால் எதனால் இந்த அறிகுறிகள் ஏற்படுகின்றன என்று கண்டறிய முடியவில்லை. ஆனால் நோய் அறிகுறியின் அடிப்படையில் அவருக்கு சிகிச்சை அளித்தனர்.



இந்நிலையில், இந்தியா வந்த பின்னும் அவருக்கு கண் இமைக்குள் அவ்வபோது ஏதோ அசைவது போன்ற உணர்வு ஏற்பட்டதால், டெல்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் பரிசோதனை செய்தார். அப்போது, அவர் அமேசான் காடுகளுக்கு சென்று வந்த பின்பு கடந்த 6 வாரங்களாகவே இந்த உணர்வு இருப்பதாக டாக்டர்களிடம் தெரிவித்து உள்ளார். இதைத் தொடர்ந்து அவரை பரிசோதித்த டாக்டர்கள் , அவரது கண்ணில் அரிதான மியாசிஸ் எனப்படும், மனிதர்கள், பிற பாலூட்டிகளில் பரவும் ஒட்டுண்ணி வகையை சேர்ந்த பெரிய அமெரிக்க ஈக்கள் இருப்பது உறுதியானது.

அவர் அமேசான் காடுகளுக்கு சென்று வந்த போது, இந்த ஈக்கள் உயிருடன் அவருடைய தோலை ஊடுருவி உள்ளே சென்றுள்ளன. இதையடுத்து, டாக்டர்கள்அவருக்கு எந்த மயக்க மருந்தும் கொடுக்காமல் 10-15 நிமிடங்களில் அறுவை சிகிச்சை செய்து, வலது மேல் கண்ணிமை, கழுத்தின் பின்புறம் மற்றும் வலது முன்கை ஆகியவற்றிலிருந்து ஏறக்குறைய 2 செமீ நீளம் அளவுள்ள மூன்று ஈக்களை அகற்றினர். இந்த ஈக்களை அகற்றாமல் விட்டால், நாளடைவில் திசுக்களில் கணிசமான அழிவை ஏற்படுத்தியிருக்கும். இதன் விளைவாக மூக்கு, முகத்தை சுற்றிய பகுதிகளில் அரிப்பு போன்றவை ஏற்படும். சில நேரங்களில் இது மூளைக்காய்ச்சல், மரணத்திற்கு வழிவகுக்கும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

## இராமர் பாலத்தை இந்தியாவின் தேசிய மரபுரிமையாக்க கோரும் மனு மீது மார்ச் 9 ஆம் திகதி விசாரணை

இராமர் பாலத்தை இந்தியாவின் தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இந்திய உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ராம் சேது எனப்படுகின்ற ராமர் பாலத்தை இந்தியாவின் தேசிய மரபுரிமை சின்னமாக பிரகடனம் செய்யுமாறு கோரி பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவரான சுப்ரமணியன் சுவாமி இந்திய உச்ச நீதிமன்றத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்திய உச்ச நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் என்.வி.ரமணா, உச்ச நீதிமன்ற நீதியரசர்களான யு.ஞ.போபன்னா , ஹிமா கோஹ்லி ஆகியோர் அங்கம் வகித்த நீதியரசர்கள் குழாமின் முன்னிலையில் இந்த மனு இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த மனு மீதான விசாரணை நீண்ட காலமாக நிலுவையில் உள்ளதால், அதனை விரைந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு சுப்ரமணியம் சுவாமி உச்ச நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.



இதற்கமைய, இராமர் பாலத்தை இந்தியாவின் தேசிய மரபுரிமை சின்னமாக பிரகடனப்படுத்துமாறு கோரும், சுப்ரமணியம் சுவாமியின் மனுவை மார்ச் மாதம் 09 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் தீர்மானித்துள்ளது.

தமிழகத்தின் இராமேஸ்வரம் மற்றும் இலங்கையின் மன்னார் தீவிற்கு இடையே உள்ள ஆழமற்ற திட்டு போன்ற பகுதியே இராமர் பாலம் என அழைக்கப்படுகிறது.

இராமர் பாலத்தின் 8 மணல் திட்டுக்கள் இலங்கைக்கு உரித்தானவை. அவை இலங்கை கடற்பரப்பில் அமைந்துள்ளன. தலைமன்னாரிலுள்ள இராமர் பாலத்திற்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உள்ளிட்டவர்கள் கடந்த வருடம் மார்ச் மாதமும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை தூதரக அதிகாரிகள் கடந்த வருடம் பெப்ரவரி மாதமும் சென்று வழிபாடுகளை நடத்தியிருந்தனர்.

இதேவேளை, இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங் வட மாகாணத்திற்கான பயணத்தை நிறைவு செய்யும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள இராமர் பாலத்தை கடந்த டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி கண்காணித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த அவர், இந்த விஜயம் முடிவாக மாத்திரமன்றி ஆரம்பமாகவும் அமைந்துள்ளதாக குறிப்பிட்டார். இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவின் அழைப்பை ஏற்று கடந்த வருடம் நவராத்திரி விழாவிற்காக இலங்கைக்கு விமானத்தில் வந்துகொண்டிருந்தபோது, சுப்பிரமணியன் சுவாமி ட்விட்டரில் ராமர் பாலத்தின் புகைப்படத்துடன் கூடிய பதிவொன்றை இட்டிருந்தார். ராமர் பாலத்தை தேசிய நினைவுச்சின்னமாக பிரகடனப்படுத்துவதில் இந்திய பிரதமருக்கு உள்ள தடைகள் என்னவென அவர் அந்த பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் குறைந்தது அவரிடம் இது குறித்து வினவியேனும் தகவல் வரவில்லை. அன்று அவர்கள் கடைப்பிடித்த மௌனத்தின் விளைவாக இன்று எமது நாட்டின் இறையாண்மைக்கு சவால் விடுக்கும் வகையில் எமது நாட்டுக்குரிய மணல் திட்டுக்களும் இந்தியாவின் தேசிய மரபுரிமையாக அறிவிக்கப்படும் அபாயம் எழுந்துள்ளது.































இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 27.02.2022 அன்று வெளியிடப்பட்டது.